தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 1 | தி. பி. 2014 நளி-4 (20 - 11 - 1983) விலை 1-30 காசு இதழ் எண் : 25-26 பகுதி 43-48

பாவலரேறுவின் முதல் ஐரோப்பியச் சுற்றுச்செலவு முழு வெற்றியளித்தது!

5 நாடுகள் - 30 நாள்கள் 24-நிகழ்ச்சிகள்! ஏறத்தாழ இருபதினாயிரம் கற்கள்!

த.மு.க. நிகழ்ச்சிகள்-3 தமிழீழ விடுதலை நிகழ்ச்சிகள்-19 பிற சிறப்பு நிகழ்ச்சிகள்-2

பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் பயன்பெற்றனர்!

விரைவில் நீண்ட நெடிய 2-ஆவது ஐரோப்பியச் சுற்றுச் செலவு தொடரும்!

அண்மையில் சிங்கை, மலேசியா செல்ல இருக்கிறார்!

தமிழ்ப் பகைவர்களும், அரசியல் ஊதியம் தேடும் தலைவர்களும் முகம் வாடிப்போயினர்!

பாவலரேறுவின்தமிழினத் தொண்டைத் திட்டமிட்டு மறைக்க சூழ்ச்சி!

பாவாணரின் மறைவின் பொழுது எடுத்துக் கொண்ட சூளுரை நிறைவேறப்போகிறது!

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

ஐந்து நாடுகளில் முப்பது நாட்கள்!

என் முதல் ஐரோப்பியச் சுற்றுச் செலவு

(நிகழ்ச்சிச் சுருக்கம்)

முன்னுரையாகச் சில :

நான் இதுவரை ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றதில்லை. சிங்கப்பூர், மலேசியா, இலங்கை ஆகிய மூன்று அயல் நாடுகளுக்கும், இந்தியப் பகுதியாகிய அந்தமான் தீவுக்கும் மட்டுமே கடல் கடந்த செலவை நான் மேற்கொண்டுள்ளேன். சிங்கை, மலேசியச் சுற்றுச் செலவை 1974-இல் நான் மேற்கொண்டிருந்த பொழுதே, சிங்கையிலிருந்து நேரே ஐரோப்பா வரும்படி, இப்பொழுது பிரான்சு உ.த.மு.க. அமைப்பாளரும், தொடக்க நாளில் 'தென்மொழி'யை நிலைப்படுத்த உழைப்பு நல்கிய முகமையருள் ஒருவரும் ஆகிய திரு. அரிமா வளங்கோ அவர்கள் அழைப்பு விடுத்திருந்தார்கள். ஆனால் சிங்கை-மலேசியச் சுற்றுச் செலவு மூன்று மாதங்கள் தொடர்ந்து நீடித்ததாலும், நான் விரைந்து தமிழகம் திரும்பி, தென்மொழி அச்சகத்தையும், குடும்பத்தையும் கடலூரிலிருந்து சென்னைக்கு மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டதாலும், அவர் அன்பழைப்பை ஏற்க முடியாமல் போய் விட்டது.

இதுவரை அயலகச் செலவாக, சிங்கை-மலேசியப்பகுதிகளுக்கு 1974-மார்ச்சில் சென்று 90 நாட்கள் சுற்றி, 35 சொற்பொழிவுகளையும், அதன்பின் 1978-மே மாதத்தில் இலங்கை சென்று 14 நாட்கள் சுற்றுச் செலவு மேற்கொண்டு, 13 சொற்பொழிவுகளையும், பின்னர் அந்தமான் தீவுக்கு 1981 ஏப்பிரலில் 7 நாட்கள் தங்கியிருந்து 6 சொற்பொழிவுகளையும் செய்து இருக்கின்றேன்.

இப்பொழுது செப்டம்பரில் என் முதல் ஐரோப்பியச் செலவு நிகழ்ந்தது. ஐரோப்பாவில் பிரான்சு, இங்கிலாந்து, மேற்கு செருமனி, கிழக்கு செருமனி, சுவிட்சர்லாந்து ஆகிய ஐந்து நாடுகளிலும் 30 நாட்கள் செலவு மேற்கொண்டு, 24 நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு முழு வெற்றியுடன் திரும்பியிருக்கின்றேன்.

இதுவரை நிகழ்ந்த அயலகச் செலவுகளைப் பற்றி, முதலில் 'சிங்கை-மலையகச் செந்தமிழ்ச் செலவு' எனனும் வழிச் செலவுக் கட்டுரையைத் 'தென்மொழி'யில் தொடங்கி எழுதினேன். அக் கட்டுரை கால்பகுதியேனும் முடியாமல் இடை நிற்கிறது. அடுத்து, இலங்கை சென்று வந்த பின்னர் 'என் இலங்கைச் செலவு' எனனும் கட்டுரையை அதே 'தென்மொழி'யில் தொடங்கித் தொடர்ந்து எழுதி வந்தேன். அதுவும் முக்கால் பங்கு முடிந்து, நிறைவு எய்தாமல் நிற்கிறது. அவ்விரண்டு செலவுக் கட்டுரைகளும் இடை நிற்கும் அச்சத்தில், 'அந்தமான் செலவு'க் கட்டுரையைத் தொடங்காமலேயே விட்டு விட்டு, வெறும் செய்திச் சுருக்கத்தை மட்டும் எழுதி வெளியிட்டேன்.

மேலும், இச் செலவுக் கட்டுரைகளே யன்றி, நான் எழுதத் தொடங்கிய, 'அறிவு, பகுத்தறிவு, மெய்யறிவு' 'என்இயக்கம் பற்றிய சில விளக்கங்கள்', 'ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்' போன்ற கட்டுரைத் தொடர்களும், 'நூறுசிரியம்', 'கழுதை அழுத கதை' போலும் பாடல் தொடர்களும் இடை நின்று கொண்டுள்ளன என்பதை நான் நன்கு அறிவேன். 'தமிழ் நானூறு' எனும் ஒரு பாட்டுத் தொகுப்பு நூல் தொடங்கப் பெற்றுப் பலரிடமிருந்தும் சிறந்த நிலைப் பாடல்கள் வரப்பெறாமையால், அத் தொகுப்பில் நான் எழுதிய பாடல்கள் மட்டும், 'நூறுசிரிய'த்தில் சேர்க்கப் பட்டுள்ளன என்பதைத் 'தென்மொழி'யன்பர் அறிவர். மற்று, தொடர்ச்சி விடுபட்டு இடைநிற்கும் அனைத்துக் கட்டுரை, பாடல்களையும் கட்டாயம், ஓய்வுள்ள நேரங்களில் எழுதி முடித்து விடுவேன் என்று உறுதி கூறுகின்றேன். அவை இடைநிறுத்தமே தவிர இடை முறிவு அன்று. எனவே அன்பர்கள் என்மேல் கொஞ்சமும் வருத்தப்பட வேண்டா.

இத்தகைய இடைவிடுபாடுகளுக்கெல்லாம் ஒரே காரணம் ஓய்வு இன்மையே ஆகும். அச்சகப் பொறுப்பு, மூன்று இதழ்கள் நடத்தும் வினைச்சுமை, பொருளியல் சுமை, என இலக்கிய ஆக்கம், எழுத்துப் பணி, பேச்சுப் பணி, இயக்கப் பணிகள் வெளியூர்ச் செலவுகள் குடும்பத் தொல்லைகள், நண்பர்களின் இடையூறுகள் முதலிய அத்தனை நெருக்கடிகளும் சேர்ந்து என்னை இறுகப் பிடித்துக் கொண்டுள்ளன. இனி இவை மேலும் மேலும் இறுகுகின்றனவே தவிர, தளர்ந்த பாடில்லை. எனக்கும் என வினைகளுக்கும் உதவி செய்வதாகப் பலரும் எண்ணிக்கொண்டு பல வகையிலும் தடையாகவும், தந்நலமாகவுமே இயங்குகின்றார்களே தவிர, ஓர் எள்ளின் மூக்கத் துணையும் ஒருவரும் துணை நிற்க முன் வந்தது மில்லை; வருவதும் இல்லை. ஏனெனில் நான் அன்றும் இன்றும் ஒருசிறு வருவாயும் அற்ற வெறுங்கையன். பிறர் தாம் எனக்கும் என் பணிகளுக்கும் கொடுத்து உதவ வேண்டிய நிலையில் நான் இருக்கின்றேனே தவிர, நான் யாருக்கும் கொடுத்து உதவ வேண்டிய நிலையில அன்றும் இல்லை; இன்றும் இல்லை; என்றாவது ஒருநாள் இருப்பேன் என்று கருதவும் இடமில்லை இறுதி வரை அகருடம் காய்ச்சிதான். என் குடும்பத்தைக் கேட்டால் அனைத்தும் தெரியும். அதனாலேயே என் பணிகளுக்கு எவரும் துணைவருவதில்லை. தந்நலம் துறந்து, அல்லது குறைந்து, நல்ல முழுமையான ஊதியமில்லாமல் பொதுத் தொண்டு செய்பவரும் காலம் பெரியார், காமராசர் காலத்துடன் மலையேறி விட்டது. இப்பொழுது அரசியலிலும் திரைப்படத் துறையிலும், சாராய வணிகத்திலும், கட்சி, கழக ஈடுபாடுகளிலும் கொழுத்த வருவாயும், விளம்பரமும் (புகழ் அன்று), அன்றாடம் பொறுக்குத் தீனிகளும், முப்பொழுதும் உண்ணவும் குடிக்கவும் முழு நுகர்வுகளும் அங்கிங்கெனாதபடி, தடையின்றித் தாராளமாய்க் கிடைக்கின்றன.

எனவே, நம் போலும் தலை வரண்ட பொதுத் தொண்டர்களிடையில், மக்கள் பித்தர்களிடையில், நாட்டுநல வெறியர்களிடையில் எவரும் தம்மை முழுநேரத் தொண்டுக்குத் துணையாக ஒப்படைக்க முன்வர மாட்டார்கள். அப்படி யாரேனும் வருகிறார்களென்றால், அவர்களை வரவிடவும் மாட்டார்கள். இல்லாததையும் பொல்லாததையும், ஒன்றுக்கு மேல் ஒன்றாய், ஒருவர்க்கு மேல் ஒருவராய் விழுந்தடித்துக் கொண்டு போய்ச்சொல்லி, 'வருகிறேன்' என்பவர்களையும் வழி மறித்துத் தடுத்து விடுவார்கள். பின் எப்படி என் வினைச் சுமைகள் கழல்வது? அவை மேலும் மேலும் ஏறிக் கொண்டே இருக்கின்றன.

இன்னுஞ் சொன்னால் இக்காலத்தில் எல்லாமே வாணிக முறையில்தாம் நடக்கின்றன. தமிழ்த் தொண்டு, கலை, இலக்கியத் தொண்டு, அரசியல், இதழ்கள், இன, நல முயற்சிகள், முதலிய அனைத்துமே கவர்ச்சி, விளம்பரங்கள், காசு பணக் கொள்ளையடிப்புகள் — முதலியவற்றையே அடிப்படையாகக் கொண்ட வாணிகத்திருட்டுகள் தாம்!

மேனாடுகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், முதலில் இங்கிருப்பதுபோலப் பொதுத் தொண்டர்கள், மக்களை ஏமாற்றும் போராட்ட அறிக்கைத் தலைவர்கள், மாநாடுகள், பேரணி ஏமாற்றங்கள் முதலிய ஆரவார விளம்பர வேடிக்கைகள் ஆகிய எதுவுமில்லாமல மக்கள் நலனுக்கான, நாட்டு முன்னேற்றத்திற்கான செயல்பாடுகள் அனைத்தும் அமைதியாக — மிக மிக அமைதியாக—எந்த வகையான திருட்டு, கையூட்டு, ஏமாற்றுகளும் இன்றி முழு வெற்றியுடன் நடைபெறுகின்றன. இங்கோ, சொல்லத் தேவையில்லை. மக்கள் நலனகருதும் அன்புத் தலைவர்கள், உண்மைத் தலைவர்கள், நேர்மைத் தலைவர்கள், வணங்கத்தக்க பிறவித்தலைவர்கள் பெரியார், காமராசு-அவர்களோடு முடிவுற்றுப் போனார்கள். இவ்வகையில் தலையாய ஏமாளிகளாக இருக்கும் எளிய தொண்டர்கள் சிலருள் நானும் ஒருவனாக இருக்கலாம் என்று கருதுகின்றேன். (அன்பர்கள் எல்லாரும் என்னை மன்னிக்க வேண்டும் உண்மையைச் சொல்வதற்காக) என்னைப் போன்றவர்கள் என்றுமே இப்படித்தான். மெது மெதுவாகத்தான் எங்களால் பொதுப்பணிகளைச் செய்ய முடியும். அதிலும் நானோ தொடங்கிவிட்டுத் தொடரமுடியாமல் அல்லது முடிக்க முடியாமல் திண்டாடுவது. (கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள்!)

இத் தொடருக்குத் தேவையற்றனவாக (உங்களில் சிலர்) கருதுகின்ற ஒரு சிலர்க்கு வெறுப்பளிக்கின்ற இத் தன் விளக்கச் 'செய்திகளை'யெல்லாம்— ஏன் ஐரோப்பியச் செலவின் முன்னுரையிலே கொடுக்கின்றேன் என்றால், இதை ஒரு கட்டுரையாகத் தொடங்காமல், 'செய்திச் சுருக்கமாகத் தொடங்குகிறேன்' என்பதால்தான் (அன்பர்கள் தலைப்பையும் பார்க்கவும்). கட்டுரையாகத் தொடங்கினால், என்னால் தொடர முடியுமோ, முடியாதோ, தெரியாது. ஒருவேளை முன்னைய செலவுக் கட்டுரைகளைப் போல் இடை நின்றுவிட்டால என்ன செய்வது? நான் சொல்ல விரும்பும் என்டார்வயில் பட்ட ஐரோப்பிய நாடுகளைப் பற்றிய ஓரிரு கருத்துகளைக் கூடச் சொல்ல முடியாமற் போய்விடுமே! அதற்காகத்தான் செய்திச் சுருக்கமாக எழுதுகிறேன். கட்டாயம் இஃது இடை நிற்காது. எவ்வாறேனும்-தொடர்ந்து எழுதிவிடுவேன் ஆனால், முழுச் செய்திகளையும் எழுத இயலாது. அதற்குத் துளியும் நேரமில்லை. அதுவும் இன்னும் இரண்டாண்டுகளுக்குப் பின்னர் என்றால் 'திருக்குறள் மெய்ப்பொருளுரை'யைத் தவிர, வேறு எதையும்- (இடை நிற்பவையெல்லாம் அதற்குள் எழுதிவிடலாம் என்று கருதுகின்றேன். நிலை எப்படியோ? ஆனால் எப்படியும மற்றவற்றை) எழுதவே இயலாது. நான் பேசுவதைத்தான் பிறர் எழுதிக்கொள்ள வேண்டியிருக்கும். இனி செய்திகளுக்கு வருவோம். (தொடரும்)

இந்திய விடுதலைப் போராட்டத்தில் மட்டும் வன்முறைகள் இல்லையா?

1942-ஆகத்து 8-இல் 'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கத்தைப் பம்பாய் அனைத்து இந்தியப் பேராயக்குழு தீர்மானித்தபின் நடந்த தீவிரப் போராட்டங்களால்,

192 காவல் நிலையங்கள் அழிக்கப்பட்டன.
49 அரசு அலுவலகங்கள் தரைமட்டமாக்கப் பட்டன.
318 தொடர்வண்டி நிலையங்கள் தகர்க்கப் பட்டன.
102 தொடர்வண்டிப் பாதைகள் பெயர்த் தெறியப்பட்டன.
309 அஞ்சல், தொலைவரி நிலையங்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.
11815 தொலைவரிக் கம்பிகள் அறுக்கப்பட்டன.
538 துமுக்கி (துப்பாக்கி)ச் சூடுகள் நடந்தன.
604 பேர் கொல்லப்பட்டனர்.
1630 பேர் படுகாயம் அடைந்தனர்.
6229 பேர் சிறைப்படுத்தப் பட்டனர்.
2500 பேர் (அதிகார மற்ற செய்தியின் படி) இறந்தனர் அல்லது காணாமல் போயினர்.

புதுமனைப்புகுவிழா--அன்பளிப்பு

கோபி தமிழ்நகரில் பேராசிரியர் : கா. அரங்கசாமி, சரசுவதி அரங்கசாமி, தாங்கள் புதிதாகக் கட்டியுள்ள இல்லத்தின் 21-11-83-ஆம் நாள் நடைபெறற புதுமனைப் புகுவிழா நினவாகத் 'தமிழ்நிலம்' வளர்ச்சிக்காக ரூ 100 தந்துள்ளனர்.

உயர்திரு. பேராசிரியர் குடும்பம் எல்லா நலன்களும் வளங்களும் பெற்றுச் செழித்தோங்கிட, தமிழ்நிலம் நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது.

அன்பளிப்பு

சென்னை, இராயபுரம், தென்மொழி அன்பர் திரு. ப. இராசாமணி, 'தமிழ்நில' வளர்ச்சிக்கு உரு·10 வழங்கியுள்ளார். அவரின் அன்புள்ளத்திற்கு நன்றி தெரிவித்துத் தமிழ்நிலம் அவரை வாழ்த்துகிறது.

— அமைச்சர்

ஈரோட்டில் பாவலரேறு! நகர உ.த.மு.க. சார்பில்

வரவேற்பு நிகழ்ச்சி

நாள் : 11-12-83 காலை 9 மணி
(பொதுக்கூட்டம்)
அன்று மாலை 6 மணி
பாவாணர் படிப்பகம் திறப்பு

இடம் : சென்னிமலைப் பாதையில் உள்ள பாவாணர் படிப்பகம்.

அனைவரும் வருக!

நகரக்கிளை
உ.த.மு.க. ஈரோடு

என் கற்பனையில் ஓர் ஏமாற்றம்

—நற்றிணை

1983 அன்று அக்டோபர் 13 வியாழன் காலை 9.50 மணியளவில் விண்ணூர்தி நிலையத்தில் நின்றிருந்தேன்.

ஆம், பாவலரேறு அவர்களை வரவேற்க நானும் சென்றிருந்தேன். மெல்லிய ஒலிகூட்டி விண்ணுயர்ந்து வந்தது, விண்ஊர்தி. அதையே வைத்த கண் வாங்காது பார்த்து நின்றிருந்தேன். என்ருலும் என்னைப்போல் வந்திருந்த தமிழன்பர்கள் பலரும் உள்ளன்பு பொங்கக் காத்திருந்தனர்.

இடி முழக்கம் போல் ஒலி அதிர விண்ணூர்தி தரையில் படர்ந்தோடி நின்றது என்னுள்ளத் துடிப்பும் நின்று திரும்ப ஓடியது. ஐயா அவர்களின் அன்பு முகம் காணவும், அறிவுத்துடிப்பைக் கேட்கவும் நாங்களும் 'தென்மொழிக் குடும்பமும்' கவனமுடன் காத்திருந்தோம்.

என் கண்கள் மேலைநாட்டின் மேல்நிலையில் கற்பனை ஓட்டத்தில், ஓடிய பாவலரேறுவை உள்ளத் துடிப்போடு காணத் துடித்துக் கொண்டிருந்தது. நீண்ட வண்ணக் குழாய் மாட்டி, குப்பாயம் அணிந்த பெருமிதத்துடன் குளிராடி, Cooling glace) கண்ணாடிக் கண்ணை மறைக்கக் குறுந்தாடி மீசையுடன் நம் பாவலரேறுவை பதைக்கப் பதைக்க என் கண்களும் அறிவுப்புலனும் போட்டி போட்டுக்கொண்டு ஆவலுடன் முண்டி அடித்துக்கொண்டு பார்த்துக் கொண்டிருந்தன.

"அடடா! அதோ! ஐயா வந்துவிட்டார்' கண்கள் துள்ளின. அறிவுள்ளம் வெட்கியது. மேலைநாட்டுடையில் கண்கள் தேடின!

மீசையும் தாடியும் காணேமே! அடடா! ஐயா இல்லை! அப்படியானல் அவர் 'தொண்டைமான்'! "தொண்டைமான்" அமைச்சர் "குழந்தைவேலு மாலையிட்டு வரவேற்கிருர்; கூட்டத்தில் சில குரல்கள் வாழ்த்தொலி எழுப்புகின்றன.

என் கண்கள் மேலும் அடுத்தடுத்து வருவோரை நோக்கின.

விண்ணுலகே சென்ருலும் என்நடையும் மாருது!
வெண்ணுடையே-என்னுடைமை! காண்பீர்கள்!
தண்நிலமே!
சென்ருலும் நான்நானே தான்! உணர்வீர்!—
எந்தமிழீர்!
என்றும் தமிழே இயல்பு!

என்று வெண்சட்டை வேட்டியுடன், உ.த.மு.க சிவப்பு வண்ணத் துண்டும், கண்ணுடியுள் கண்கள் பளபளக்க, கனிந்த முகத்துடன், பூத்த புன்னகையுடன் சென்றநிலையிலேயே தனிப் பெருந் தலைவனுகவே திரும்பிய என் தலைவரை இருகை கூப்பி கண்கள் கண்ணீர் மழை பொழிய வரவேற்றேன்.

அவர் தலைமுடியைக்கூட அயலகத்தில் விட்டு விடாது, 'மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவரிமானுக' வளர்ந்த முடியுடன் வந்த அவரை, அவர்தம் தாயார் அவர்கள்,

'ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்ருேன் எனக் கேட்ட' தாயாராக தன் மகனை உணர்வு பொங்க மாலையிட்டு வரவேற்று உச்சி மோந்த காட்சியைக் கண்டு மலைத்து நின்ற என்னை,

'பெருஞ்சித்திரனர் வாழ்க!'
விடுதலைப் பாவலர் வாழ்க!!
தமிழர் தலைவர் வாழ்க!!!
உ.த.மு.க தலைவர் வாழ்க!!!!

என்ற வாழ்த்தொலிகள் உணர்வூட்டி விடுவித்தன.

போராட்டம்! போராட்டம்!

பேரணிகள், மாநாடுகள் நடத்துவதாலும் பல வகையான தீர்மானங்களை நிறைவேற்றிக் கொண்டிருப்பதாலும் தமிழர்களுக்கு முழுமையான உரிமை கிடைத்துவிட முடியாது; முடியவே முடியாது கடந்த ஐம்பதாண்டுக்கால வரலாற்று உண்மை இது!

இம் மாநாடுகள், பேரணிகள், தீர்மானங்கள் வழியாக இங்குள்ள தமிழர் நலம் கருதுவதாகக் கூறிக் கொண்டிருக்கும் கட்சிகளும் அவற்றின் தலைவர்களுந்தாம் விளம்பர ஊதியமும் பொருள்கொள்ளையும் பெறமுடியுமே தவிர, ஓர் எள்ளின் மூக்கத்துணைப் பயனும் தமிழினம் பெற இயலாது! தமிழின விடிவு உண்மையிலேயே ஏற்பட வேண்டுமானல்; அனைத்துத் தமிழ்த் தலைவர்களும் ஒன்றிணைந்து ஒரு மக்கள் போராட்டத் திட்டத்தையே அறிவித்து, ஒரு கால எல்லைக்கு மேல் நேரடிப் போராட்டத்தையே தொடங்க வேண்டும். இல்லையானல் மக்கள் தொடர்ந்து ஏமாற்றப்பட்டுக் கொண்டேதான் இருப்பார்கள்.

—முதல் ஐரோப்பியச் சொற்பொழிவுகளில்
பாவலரேறு

இன்று காட்டும் எழுச்சியை முன்பே காட்டியிருந்தால், ஈழத் தமிழனுக்கு இந்நிலை ஏற்பட்டிருக்குமா?

கோவை அரங்கத் தமிழ்மணி பேச்சு!

ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்து 1-8-83 அன்று கலைப் பேரவை கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் உ.த.மு.க சார்பில் கோவை மாநகரப் பொருளர் அரங்க-தமிழ்மணி பேசியதாவது :-

ஏறக்குறைய 20 ஆண்டுகளாகவே சிங்கள வெறியர்களால் பல தொல்லைகளுக்கு ஆளாகி வரும் நம் அடிமைத் தமிழர்கள், அன்று இந்தியாவில் இருந்த உ.நா. பாதுகாப்புச் சட்டத்தை விடக் கொடுமையான சட்டங்களால், அரசே படைத்துறையை ஏவிவிட்டு, ஈழத்தமிழர்களையே அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள சிங்கள வெறியன் செயவர்த்தனேவின் ஆட்சியைக் கண்டித்துத் தாயகத் தமிழன் என்ன செய்கிருன்? நமமுடைய அரசியல் கட்சிகள், பிற அமைப்புகள், எல்லாம் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள், உண்ணு நோன்பு போன்ற செயல்களில் இறங்கியுள்ளன. சாகின்ற தமிழனை வைத்தாவது தமிழக அரசியல் கட்சிகள் ஒன்று சேர்ந்து குரல் கொடுப்பது பாராட்டக் கூடியதாக இருந்தாலும், நாளடைவில் இதே அரசியல் கட்சிகள் ஒன்று சேர்ந்து தமிழ் மொழி, இன உணர்வோடு செயல்பட வேண்டுமானல் இங்கும் ஒரு செயவர்த்தனே தோன்ற வேண்டும்.

இதையேன் சொல்கிறேன் என்ருல், நாம், நம் மக்களை மொற்றிக் கொண்டு, 'நான்' என்ற அகந்தையோடு செயல்பட்டு, சாதி, மதவெறியூட்டிச் சுக்குநூருகப்பிரித்துவைத்துள்ளோம். இதற்கிடையில் பலகட்சிகளாகவும் பிரிந்து அதற்குள்ளும் சாதி, மத வெறி ஊட்டுகிருேம். இதையா பெரியார் சொன்னர்? இதற்கா இந்தியா விடுதலை பெற்றது? இவற்றைச் சொல்லியா நாம் விடுதலை கேட்டோம்? எதற்கு இந்த ஏமாற்று வேலை? நான் வெளிப்படையாகப் பேசிப் பழக்கப்பட்டவன், நான் சொல்வது தவறு என்ருல் இந்தக் கூட்டத்திலேயே மறுப்புச் சொல்லலாம் [சில விநாடிகள் இடைவெளி] இன்று ஒன்று கூடி கூப்பாடு போடுகிருேமே இதே கூப்பாட்டை 51 ஆண்டுகளுக்கு முன் போட்டிருந்தால் இன்று ஈழத் தமிழனுக்கு இக் கொடுமை ஏற்பட்டிருக்குமா? தமிழனுக்குச் சொந்த நிலம் ஈழ நாடு. அதில் பிழைப்பிற்காக குடியேறியவன் சிங்களன். ஏமாறிய தமிழன் அவனைப் பெருக வழிவிட்டு, ஆட்சியையும் பறிகொடுத்து இன்று ஏதிலியாய் நிற்கின்ருன். அவர்களை அழைக்க இந்திய அரசு கப்பல் அனுப்புகிறதாம் கப்பல்! ஏன்? அதே நேரத்தில் படைத்துறையை அனுப்புவதுதானே? வங்க விடுதலைக்கு ஓடோடிச் சென்ற இந்திய அரசு, பாலத்தீன விடுதலைக்குப் பல இலக்க உருவாக்களை வாரி வழங்கிய இந்திரா அரசு, ஈழத் தமிழர் படுகொலையைப் பார்த்தும் பொருட்படுத்தாமல் இருக்கிறது என்ருல் என்ன பொருள்? இதே வட நாட்டுக்காரர்கள் ஈழத்தில் செத்திருக்கட்டும்! இந்நேரம் சிங்கள அரசே இருக்காவண்ணம் இந்திரா அம்மையார் நடவடிக்கை எடுத்திருப்பார். ஆனல் சாவதும், செத்ததும் தமிழன்தானே! "பொண்ணு செத்தால் என்ன? மணமகன் செத்தால் என்ன? எனக்கு மாலைக் காசு வேண்டும்" என்பது போல் இந்திய அரசு நடந்து வருகிறது. இதற்கிடையில் நாம் அனைவரும் இந்திய அரசே நடவடிக்கை எடு! ஈழத்தமிழனைக் காப்பாற்று என்று இந்திய அரசிடம் மண்டியிட்டுக் கெஞ்சுகிறோம் நமது அடிமைத்தனம், நம்மை விட்டு இன்னும் அகலவில்லை. எதற்குக் கெஞ்சுகிருேம்? அங்கே சாவதும் தமிழன், இங்கே குரல் கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டியவனும் தமிழன், இதில் என்ன வடநாட்டு அரசிடம் மண்டியிட்டுக் கெஞ்சவேண்டியது? தமிழனுகப் பிறந்த ஒவ்வொருவனும் கருவியேந்த வேண்டும்; நாம் கருவியேந்தியே தீரவேண்டும்: தாயகத் தமிழன் எப்போது கருவியேந்துகிருனே அப்போதுதான் உலகத் தமிழனுக்கே விடிவு ஏற்படும் என்பதை வெளிப்படையாகவே, அதுவும் உறுதியாகவே சொல்கிறேன்.

காவல் துறையினர் குறிப்பெடுக்க வந்துள்ளனர் அவர்களும் எழுதிகொள்ளட்டும். ஈழத் தமிழர்க்காக நாம் இங்கு சாப்பாடு போடுவதால் தமிழ் ஈழத்தில் நடக்கப்போவது ஒன்றுமில்லை! ஈழத்தமிழரைக் காப்பாற்ற விடுதலைப்புலிகள் இருக்கின்றனர். விடுதலைப்புலிகள் எனப்படும் அந்த ஈகச் செம்மல்கள் ஈழத் தனித்தமிழ் நாடு பெற்றே தீருவர் என்று மீண்டும் உறுதியாகக் கூறிக்கொண்டு இறுதியாகத் தாயகத் தமிழா! ஏமாறிவரும் தமிழா! இனியும் சாதி, மத, கட்சி வேறுபாட்டை மறந்து தமிழன் என்ற உணர்வோடு, செயல்படு; இல்லையேல் இங்கும் விடுதலைப் புலிகள் தோன்றுவர் என்றுகூறி அனைவர்க்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன் — என்ருர்.

பாரீசில் உ.த.மு.க. தொடக்க விழாவில் அமைப்பாளர் அரிமா வளங்கோ வரவேற்புரை ஆற்றுகின்ருர். மேடையில் பாவலரேறுவும் வீரமணியும்.

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், கடைய நல்லூர்

29-7-83 அன்று மாலை 6 00 மணி அளவில் நெல்லை மாவட்ட உ.த.மு.க. வின் தலைவர் தமிழ்த்திரு கரிகாலன் அவர்கள் கடைய நல்லூரிலிருந்து நாகர்கோவில் மாற்றுதல் செய்யப்பட்டுள்ளதால், அன்னருக்கு உ.த.மு. கழகத்தின் சார்பில் வழியனுப்பு விழா நடைபெற்றது.

சங்கரன் கோவில் உ.த.மு.க. தலைவர் தமிழ்த்திரு முத்தையா அவர்கள் தலைமையில் விழா தொடங்கியது. தமிழ்த்திரு புலவர் இளங் கண்ணன் அவர்கள் ஐயா சார்பில் பொன்னுடை போர்த்தினர்கள். பின் அவர்களின் தமிழ்ப்பற்று, தமிழினப் பற்று மற்றும் உயர்ந்த பண்பு பற்றிப் பேசினர்கள்.

அதன்பின் தென்காசி, பகுத்தறிவுக் கழகத் தலைவரும் வழக்குரைஞருமான மானமிகு பாண்டி வளவன் அவர்கள், "ஐயா கரிகாலன் அவர்களால் நெல்லை மாவட்ட உ.த.மு.க துவங்கியது. மேலும் ஐயா பாவலரேறு பெருஞ்சித்திரனர் அவர்களை அழைத்து வந்து மாவட்டம் முழுவதும் செந்தமிழ் பொழியையும், பழந்-தமிழ் மக்களின் பெருமையையும் எடுத்துக் கூறும்படி செய்தார்" என்றும் ஈழ நாட்டில் தமிழ் மக்கள் படும் இன்னல் பற்றியும் பேசினர்கள்.

அதன்பின் தமிழ்த்திரு புலவர் பழனியப்பன் அவர்கள், "ஐயா கரிகாலன் அவர்களால் தாம் கடைய நல்லூரில் உள்ள தமிழ் உள்ளங்கள் தட்டி எழுப்பப்பட்டன" என்றும், "பாவலேறு பெருஞ்சித்திரனர் அவர்களால்தான் செந்தமிழ் மொழியையும், செம்மாந்த தமிழினத்தையும் பாது காக்க முடியும்" என்றும் அழகு தமிழில் பேசினர்கள்.

அதன்பின் மானமிகு இப்பாரரசு அவர்கள், மானமிகு அண்ணு பிச்சை ஆசிரியர் அவர்கள், ஐயா கரிகாலன் அவர்களது ஒப்பற்ற ஊக்கத்தைப்பற்றியும், அனைவரையும் ஒருதாய் மக்கள் போல் எண்ணும் மனப்பான்மை பற்றியும் பாராட்டிப் பேசிப் பகுத்தறிவுக் கழகத்தின் சார்பில் ஐயா கரிகாலன் அவர்களுக்குப் பொன்னுடை போர்த்தினர்கள்.

அதன்பின் தமிழ்த்திரு பழனி அவர்கள், ஐயா கரிகாலன் அவர்களின் சோர்வற்ற பணியின் பான்மை பற்றிப் பேசினர்கள்.

அதன்பின் தமிழ்த்திரு ஐயா கரிகாலன் அவர்கள், "ஈழத்தில் நம் இனம் படுகொலை செய்யப்படும் போது எனக்குப் பாராட்டா?" என மனம் வருந்தி அனைவருக்கும் நன்றி கூறி, "தம் வாழ்நாள் முழுவதும் பணியைச் செய்வேன்" என்ருர்கள்.

பின் தலைவர் முடிவுரைக்குப்பின் தமிழ்த்திரு வெற்றிச் செல்வன் அவர்கள் நன்றியுரையுடன் நிகழ்ச்சி இனிதே முடிவுற்றது. இறுதியில் அனைவரும் நிழற் படம் எடுத்து விட்டு இனிதே பிரிந்து சென்றனர்.

எங்குப் போனுலும் தமிழர்கள் பிரிந்தே வாழ்கிருர்கள்!

மிகப் பழம் பெரும் இனமாகிய இதில், அனைத்துச் சிறப்புகளும் அழிந்து விட்டனவே!

அறியாமையிலும் அடிமைத்தனத்திலும் இந்த இனம் மூழ்கிப் போய் விட்டது!

நம்மை நாம் உணர்ந்து கொள்ளவில்லையானல், தமிழீழம் கிடைத்தாலும்,

தமிழ்நாடு பெற்ருலும், தமிழர்கள் அடிமைகளாகவே தாம் இருப்பார்கள்!

பாரிசில் நடந்த உ.த.மு.க. தொடக்க விழாவில், பெரியார் சிலையைத் திறந்து வைத்துப் பாவலரேறு ஆற்றிய பேருரை!

(உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் பிரான்சுக் கிளை எடுத்த **பெரியார் பெருவிழா**வில் கலந்து கொண்டு, 17-09-1983 (கன்னித் திங்கள் க-ஆம் பக்கல், திருவள்ளுவராண்டு உ0கசு) அன்று, உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு **பெருஞ்சித்திரனர்** அவர்கள் ஆற்றிய பேருரை.)

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய மானமிகு பொதுச்செயலாளர் வீரமணி அவர்களே! மானமிகு திராவிடர் கழகப் பொருளாளர் குப்புசாமி அவர்களே! மதுரை திராவிடர் கழகத் தலைவர் மானமிகு தேவசகாயம் அவர்களே! மானமிகு 'சுபா சுந்தரம் அவர்களே! இந்த நிகழ்ச்சியைத் திறம்பட அமைத்து, நம்மையெல்லாம் இங்கே ஒருங்குகூட்டி, பலவகையயான எதிர்கால முன்னேற்றக் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்புக் கொடுத்த உலகத் தமிழின முன்னேற்றக் கழகப் பிரான்சுக் கிளை அமைப்பாளர்-அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய என்னருமை மாணவர் அரிமா வளங்கோ அவர்களே! அவர்களோடு கை கோர்த்துக் கொண்டு - இங்கு - பிரான்சிலே வாழ்கின்ற தமிழர்களை வேறுவழியில் சென்றுவிடாமல் ஒருங்கிணைத்து, எதிர்காலத் தமிழின முன்னேற்றத்திற்குத் தங்களுடைய குறிக்கோள்களை அமைத்துக் கொண்டு செயல்படுகின்ற - வீரவுள்ளங்களடங்கிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழு (பிரான்சு) செயற்குழு உறுப்பினர் முருகன் அவர்களே! இங்கே இந்த நிகழ்ச்சிகளை மிகத்திறம்பட அமைத்துக் கொடுத்த உலகத் தமிழின முன்னேற்றக் கழகப் பிரான்சுக்கிளைச் செயலாளர் சொல்லின் செல்வன் அவர்களே! துணைத் தலைவர் பொற்செழியன் அவர்களே! அவர்களோடு இணைந்து செயலாற்றுகின்ற துணைச்செயலர் கண்ணன் அவர்களே! உ.த.மு.க.பிரான்சுக்கிளைப் பொருளாளர் திருவாட்டி. முல்லை அவர்களே! தமிழர் ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர் குழுவினர் திருவினர் : அப்பன், தென்னவன், வேலும் மயிலும், காந்தன், கண்ணன், மனேகரன், இராசு ஆகிய செயற்குழுவின் அன்பு உள்ளங்களே!

இவ்விழாவிலே தலைசிறந்த நிகழ்ச்சியாகத் தந்தை பெரியார் அவர்களுடைய உருவத்தை நம் முன் கொண்டுவந்து நிறுத்திய மிகச் சிறப்பு வாய்ந்த 'சிற்பி' மதிப்பிற்குரிய இலான்சியோர் அன்துவான் அவர்களே! மற்றும் இந்த விழாவுக்கு வந்து இறுதி வரை அமர்ந்திருந்து நிகழ்ச்சிகளைக் கவனமாகக் கண்டும் கேட்டும் கொண்டிருக்கின்ற தமிழ் உள்ளங்களே! பெரியோர்களே! தாய்மார்களே! அன்பு நெஞ்சங்களே! உங்கள் அனைவருக்கும் தந்தை பெரியார் அவர்களின் 105 ஆவது பிறந்த நாளாகிய இன்று என்னுடைய நெஞ்சு நிறைந்த வணக்கங்களையும் வாழ்த்துகளையும் நன்றிகளையும் தெரிவிக்கின்றேன்.

அன்பு உள்ளங்களே! எனக்கு முன்னல் மதிப்பிற்குரிய மானமிகு பொதுச்செயலாளர் அவர்கள் மிகச் சீரிய - நேரிய-உயரிய கருத்துகளைத் தந்தை பெரியார் அவர்களைப் பற்றியும், தமிழினம் முன்னேறுவதற்குரிய வழிவகைகளைப் பற்றியும் எடுத்துரைத்தார்கள். அந்த வகையிலே, உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்தொண்டன் என்கின்ற வகையில் தந்தை பெரியாரின் பிறந்த நாள்விழாவாகிய இன்று சில கருத்துகளை உங்கள்முன் வைக்க விரும்புகிறேன்.

அன்புள்ளங்களே!

நான் சொல்லப்போகும் செய்திகளை நீங்கள் நன்ருக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அவற்றை நீங்கள் வேறெங்கும் கேட்க முடியாது. என் கடந்தகால வாழ்க்கையில் இனத்திற்கு இந்த வீழ்ச்சியும் இந்தத் தாழ்ச்சியும் ஏற்பட என்ன அடிப்படையான கரணியம் என்று சிந்தித்து - பல்வகையான கூறுகளிலே - பல வகையான சூழல்களிலே நாம் தவறவிட்டுவிட்ட அந்த அறிவுமுனைகளை எடுத்து நம் மக்களுக்குச் சொல்லுவதையே என்னுடைய ஒவ்வொரு நாள் வினைகளாக நான் வைத்துக் கொண்டிருக்கின்றேன்; எனவேதான் சொல்லுகின்றேன், இந்தக் கருத்துகளை வேறு யார் வாயிலும் கேட்கமுடியாது. எனவே, அருள்கனிந்து கூர்ந்து கேட்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

தமிழ் உள்ளங்களே! நான் முதற்கண் சொல்ல விரும்புவது-அயல் நாடுகளிலே வாழுகின்ற தமிழர்கள் எங்களைப்போல் தமிழ்நாட்டிலிருந்து வருகின்ற தொண்டர்களுக்கும் அறிவுள்ளவர்களுக்கும் எப்படி நீங்கள் நிகழ்ச்சிகளை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றி-சில கருத்துகளை உங்களுக்குக் கூற விரும்புகின்றேன். நான் பல நாடுகளுக்குச் சென்றுள்ளேன். எங்குப் போனுலும் தமிழர்கள் இதே நிலையில்தான் இருக்கிருர்கள் என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். பெரும்பாலும் தமிழர்கள் பிரிந்து வாழக் கூடிய நிலையில் தாம் இருக்கிருர்கள். ஆனல் அப்படிப்பட்ட நிலை நாங்கள் உள்ளே நுழைந்ததுமுதல் நாங்கள் வந்து திரும்பிப் போகும் கால எல்லைக்குள்ளாக ஒன்ருக இணைந்து, பொறுமையுள்ளவர்களாக - நல்ல பண்பாட்டு அடிப்படையில் ஒன்று படுவார்களேயானல் - உண்மையாகவே - நம் பழைய பண்பாட்டை - பேணிக் காப்பதன் மூலம் நம் ஒற்றுமையைப் பிறருக்குக் காட்டலாம். ஆனல் அப்படியில்லாமல் யாரோ ஒருசிலர் அவர்களிடத்திலிருந்து வேறுபடுவதும், அந்த வேறுபாட்டால் சில உணர்வுகளைப் பகைமையாக வளர்த்துக் கொண்ட வருத்தப்படக் கூடிய நிலையும் உள்ளது. இந்த நிலையை ஓர் ஆறு, ஏழு நாட்களாகக் கேள்விப்பட்டு மிக வருத்தப் படுகிறேன்.

தமிழினத்தை எந்த அளவுக்குப் பிரித்து வைத்துத் தாழ்த்தினர்கள் என்ற வரலாறு உங்களுக்குத் தெரிந்திருக்குமேயானல், இந்த நிலைகளுக்கு நீங்கள் இடந்தர ஒப்பமாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

தமிழினத்தைத் தாழ்த்திய கூறுகள் - தந்திரங்கள் - மூன்று. தமிழினம் என்பது மிகப் பழமையான இனம். பெருமையாகச் சொல்லவில்லை; வரலாறு கூறுகிறது! நீண்ட நெடுங்காலத்திற்கு முன் தோன்றிய மூத்த இனம் என தமிழ்ப் புலவர்கள் கூறவில்லை; மாந்தவியல் வரலாற்ருசிரியர்கள் கூறுகின்ருர்கள். தெற்கே மூழ்கிப்போன குமரிக் கண்டத்தில் தோன்றிய முதல் மாந்தஇனம் என்று உலக நூல் ஆசிரியர்கள் சொல்லுகிருர்கள்: நிலநூல் ஆசிரியர்கள் அதையே ''காண்டுவான அமைப்பு' என்று கூறுவார்கள். உயிர்நூல் ஆசிரியர்கள் அதை "இலெமூரியா அமைப்பு" என்று குறிக்கிருர்கள். நான் வெறும் தமிழ் மொழியையோ அல்லது இலக்கியங்களையோ படித்துவிட்டு உங்கள்முன் பேசுவதாக நினைக்கக்கூடாது அறிவியல் துறையிலே எந்தெந்த நூல்கள் மாந்த இனத்திற்குப் பயன்படக் கூடிய வகையிலே எழுதப்பட்டுள்ளனவோ, அவற்றை ஓரளவுக்குப் பார்த்து, "என் இனம் இப்படித் தாழ்ந்து விட்டதே! மிகப்பழம்பேரினம் என்று சொல்லக்கூடிய இந்த இனத்திலே இருந்த நாகரிகமும் பண்பாடும் மொழிச் சிறப்புகளும் இலக்கிய இலக்கணச் சிறப்பியல்களும் அழிந்து விட்டனவே! இதை மீண்டும் எவ்வகையிலேனும் எந்த முயற்சி செய்தாவது தூக்கி நிறுத்திவிட முடியாதா என்கின்ற ஓர் ஏக்கத்தோடு - அதனுடைய அடிப்படைக் காரணங்களை - அது வளர்ந்த வகைகளை - இழிவும் பழியுமான காட்சிகளையெல்லாம் இரவு பகலாகச் சிந்தித்துக் கொண்டு – எந்த முயற்சியிலாவது ஒரு நிலையிலே ஒருபடி முன்னேற்றி விட்டுப்போக வேண்டும் என்கின்ற எண்ணத்தோடுதான், நாங்கள் உலகத்தமிழின முன்னேற்றக் கழகத்தை மூன்று ஆண்டுகளுக்கு முன் தொடக்கி வைத்தாலும் கூட - கடந்த 30 ஆண்டுக்காலமாக அதன் உட்கூறுகள் உலகம் முழுமையும் பரப்பப்பட்டு வந்துள்ளன என்பதை நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

பெரியோர்களே! நீங்கள் இங்கு கேட்கின்ற - பேசிக் கொண்டிருக்கின்ற பிரஞ்சுமொழி கி.பி. 7-ஆம் நூற்ருண்டிலே தோன்றிய மொழி. உலக மொழியாக இருக்கின்றதே ஆங்கிலம்; அது கி.பி: 6-ஆம் நூற்ருண்டிலே தோன்றியதாகும்; உலகத்திலே இப்போது பெருமையாக இருந்து கொண்டிருக்கின்ற - பொதுவுடைமை அரசின் மொழியாக இருக்கும் உருசியமொழி கி.பி. 9-ஆம் நூற்ருண்டில் தோன்றிய மொழியாகும்.

"எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேருகும் மாந்தர் பலர்"

— என்று திருவள்ளுவர் சொன்னர். எந்த அளவுக்கு அறிவு பெற்றிருந்தாலும் கூட - எந்த அளவுக்கு அவர்கள் பண்பாடுடையவர்களாக இருந்தாலும்கூட - செயல் செய்யும்போது அதை இப்படித்தான் செய்ய வேண்டும்-இந்தநேரத்தில் தான் அது பயன்தரும் என்று எல்லாம் எண்ணிச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாமற்போன அந்த அடிப்படை வீழ்ச்சியினல்தான் நாம் வீழ்ந்து விட்டோம். நம்முடைய இனம் வீழ்ந்திருக்கிறது. மற்றபடி இதற்கு எல்லாவகையான வளர்ச்சியும் இருக்கிறது.

நமது மதிப்பிற்குரிய வீரமணி அவர்கள் சொன்னதுபோல, தன்மானமும், தன்னுணர்வும், தன்னிறைவும் தன்முயற்சியும் இழந்து நிற்கிறது. இந்தநிலையில்தான் நாம் இன்று இருந்து கொண்டு இருக்கிருேம்.

நாகரிகங்கள் அடைந்துவிட்டோம்; இன்னும் வளர்ந்துவிட்டோம்; நாகரிகம் என்பது புறவளர்ச்சி; பண்பாடு என்பது அகவளர்ச்சி! ஆனல் நம்முடைய மூளைத்திறன் அடிமைப்பட்டுக் கிடக்கிறது. எதைப் பற்றி நாம் படித்தாலும், ஒரு பெரிய வளர்ச்சியுற்ருலும் கூட - அத்துணை வளர்ச்சியும் அறியாமையுள் போய் மூழ்கி விட்டது; மூடநம்பிக்கையில் போய் மூழ்கி விட்டது. அதைத்தான் அவர்கள் (வீரமணி) அழகாகக் குறிப்பிட்டார்கள். இத்தனை விளக்குகள் இருக்கின்றபோது - குத்து விளக்கும் நம்முடைய பழைமையை நினைவூட்டுவதற்காக கொண்டு வந்து வைக்கப்பட்டிருக்கிறதே என்று வருத்தப்பட்டார்கள். அவர்கள் வருத்தப்பட்டதிலே எந்தவகையான அறியாமையோ அல்லது தவருே இருப்பதாக நான் கருதவில்லை. தேவையைக் கருதிச் சிலவற்றை நாம் செய்ய வேண்டும்: அதேபோல் அறியாமையாக இருந்தால், அதைத் தவிர்க்கவும் நாம் துணிய வேண்டும். இல்லையேல், இந்தஇனம் கட்டாயம் முன்னேற முடியாது.

இப்படிப்பட்ட பேரினம், மிக அண்மைக் காலத்தில் தோன்றிய மொழிகளைத் தாய்மொழிகளாகக் கொண்ட இனங்களெல்லாம் முன்னேறியிருக்கும் போது - ஏறத்தாழ ஐம்பதினுயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட இந்தப் பழம் பேரினம், இன்று வீழ்ந்து கிடக்கின்றது என்பதை நீங்கள் நினைவிலே வைத்திருக்க வேண்டும்.

பலநாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்ருேம்; நமக்கென்று ஒரு நாடு இல்லை! நமக்கென்று சில அடிப்படைகளை நாம் பெற்று விடவில்லை. பஞ்சாபியர்களைப் பார்த்தால் உங்களுக்கு விளங்கும்; அவர்கள் பலநாடுகளுக்குப் போய் வாழ்கிருர்கள்; ஆனல், அந்த இனத்திற்குரிய மரபு, பழக்கவழக்கம், நாகரிகம், பண்பாடு ஆகிய கூறுகளோடுதான் அவர்கள் வாழ்கின்ருர்கள். ஆனல் நாம் எந்த நாட்டிற்குப் போகின்ருேமோ அந்த நாட்டினுடைய நாகரிகங்களை விரைவிலே கற்றுக் கொள்கிருேம். ஆனல் எற்கனவே நம்மிடம் உள்ள அறியாமைகளையும் மூடநம்பிக்கைகளையும் கூடவே வைத்திருக்கின்ருேம். அவற்றிலே மிகத் தலையாய கூறுகள் சாதிகளும், மதங்களும்!

மதவுணர்வுகள் எப்படிப்பட்டவை என்பதை, வரலாற்றைப் படித்திருப்பீர்களேயானல் உணர்ந்து கொள்ள முடியும்: கி.பி. 6-ஆம் நூற்ருண்டுக்கு முன்னல் தமிழ்நாட்டில் எந்தவகையான கோயிலுமே கிடையாது! அவையெல்லாம் அதற்குப் பின்னல் தோன்றியவையே! அதே போல், தொல்காப்பியர் காலத்திற்கும் முன் தமிழகத்திலே எந்தச் சமயமும் தோற்றுவிக்கப்படவில்லை! சைவ சமயம், வைணவ சமயம் என்று நாம் சொல்லிக் கொண்டிருப்பவையெல்லாம் ஆரியர்கள் இந்த நாட்டிலே வந்து கலந்த பின்னலே வடிவப் படுத்தப் பட்டவையே! அவை பலவகையான நிலைகளிலே அடிமைப்பட்டு - நம்மை அலைக்கழித்து - பல வகையான கூறுகளாகச் சிதைவுற்று ஒன்று சேர முடியாமல் தவிக்கின்றன!

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" என்ற

திருக்குறளிலே சுட்டிக் காட்டுகிருர் திருவள்ளுவர். ஆரியத்தினுடைய கொள்கையைக் கண்டிக்கிருர். ஆரியருடைய வரலாற்றில் உள்ள அந்த முறையை எதிர்க்கிருர். 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்" என்று சொன்னல், பிறவியானது எல்லாவுயிர்க்கும் பொதுவானது. எல்லா உயிர்களிடத்திலும் - தாய் உயிரும் தந்தை உயிரும் - அஃது எறும்பாக இருந்தாலும் சரி; யானையாக இருந்தாலும் சரி - ஆறறிவுடைய மக்களாக இருந்தாலும் சரி! - ஆண் உயிரும் பெண் உயிரும் சேர்ந்து - இணைந்து, பெண் உயிர் கருவுற்று, அது தாய்மைப் பருவம் எய்தி, குறிப்பிட்ட காலஎல்லையின் இறுதியிலே, பிறவி தோன்றுகிறது என்பதுதான் அறிவியல்! இதனடிப்படையிலேதான் எந்தவகை மாறுதலுமில்லாமல் பிறவி ஏற்படுகிறது.

ஆனல், ஆரியர்கள் இந்த நாட்டிற்கு வந்த பிறகு இந்தக் கொள்கையில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. என்ன? ஐயா (வீரமணி) அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னர்கள் : "பிரம்மன்

என்பவனுடைய 'முகத்திலே தோன்றியவன் பிராமணன்; அவனுடைய தோள்களிலே தோன்றியவன் சத்திரியன்; தொடையிலே தோன்றியவன் வைசியன்; கால்களிலே தோன்றியவன் சூத்திரன் என்று, இந்த நாட்டிலே 'புதிய வரலாற்று நூல் தொகுக்கப்பட்டது. அப்படிப் புகுந்த காலம் கி.மு. 1000 அல்லது 1500 இருக்கலாம் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றார்கள்.

தொல்காப்பியர் தூயதமிழர் என்று பல புலவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்! அவர் சரியான பார்ப்பனர்! அப்படி இருந்ததனாலே பல ஆரியக் கொள்கைகளைத் தொல்காப்பியத்திலே புகுத்தியிருக்கிறார். இதையெல்லாம் பெரியார் ஒருவர்தான் கண்டித்திருக்கிறார். வேறெந்தப் புலவரும் தமிழக வரலாற்றிலேயே - இலக்கிய வரலாற்றிலேயே தமிழனுக்குச் சார்பாக இருக்கவேயில்லை!

நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே இந்த இனத்தைப் பிடித்து விட்டார்கள். முதலிலே மொழியிலே ஆரியக் கருத்தைப் புகுத்தினார்கள்; அடுத்து நம்மிடையே பலவகையான சாதிக்கூறுகளைப் புகுத்தி நம்மைப் பிரித்து இயக்கினார்கள், சாதி என்ற சொல் தமிழச்சொல்லன்று! அது ஜதி ... ஜனி என்ற சொற்களிலிருந்து பிறந்தது. ஜனி என்றால் ஜனித்தல் - பிறத்தல் என்று பொருள். இந்த ஜனித்தல் என்ற சொல்லிலிருந்துதான் சாதி என்ற சொல் வந்தது அந்தச் சாதிக் கூறுகள் இந்த நாட்டிலே வரலாற்று அடிப்படையிலே பரப்பப்பட்டன.

உழைக்கின்ற மக்கள் பெருமையை இழந்தார்கள். எந்தவொரு நாட்டில் உழைப்பாளி மக்களுக்குப் பெருமை போய்விடுகிறதோ அந்த நாட்டு மக்கள் விரைவில் அடிமைகளாக ஆகி விடுவார்கள். ஏனென்றால், உலகத்திலே உழைக்கின்ற மக்களுடைய தொகைதான் அதிகம். ஆனால் அந்த உழைப்பைச் சுரண்டுகின்ற மக்களுடைய தொகை குறைவாக இருக்கும். குறைவாக இருக்கின்றவர்கள் என்றென்றைக்கும் மற்றவர்களைச் சுரண்டி வாழ்வதற்காக சில சூழ்ச்சிகளையும் தந்திரங்களையும் மேற்கொள்வார்கள். அப்படி மேற்கொண்ட தந்திரங்களிலும் சூழ்ச்சிகளிலும் அடங்கியனதாம் சாதிகளும் மதங்களும்! மதம் என்பது எந்த அளவுக்கு அறிவியல் வளர்ச்சி பெற்றுள்ள இந்தக்காலத்திலும் நம்மை ஆட்கொண்டுள்ளது என்பதுபற்றி சொல்லவேண்டுமானால் அதிக நேரம் தேவைப்படும். அதேபோல், சாதி என்பதும் நம்மிடையே படிப்படியாக எந்தெந்த நிலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதைச் சொல்லப்போனால் அதற்கும் ஓர் அரைநாள் ஆகும்.

அதேபோல் மொழியால் நாம் எப்படித் தாழ்த்தப்பட்டோம் என்பதை உங்களுக்கு விளக்க வேண்டுமானால் நாட்கணக்கிலேயாகும். ஒரே ஓர் எடுத்துக்காட்டு மட்டும் நான் உங்களுக்குச் சொல்லவிரும்புகின்றேன். மொழிநிலையிலே நாம் எவ்வளவு அறியாமைப்பட்டிருக்கிறோம் என்பதை நீங்கள் முதலிலே தெரிந்துகொள்ள வேண்டும். இங்கு கலைநிகழ்ச்சி நடந்தது. என் மதிப்பிற்கும் அன்பிற்குமுரிய மானமிகு வீரமணி அவர்கள் அதைப்பற்றிச் சில குறிப்புகள் சொன்னார்கள். அவர்களுடைய கருத்துப்படி அவர்கள் இன்னும் ஆழமாகச் சொல்லியிருப்பார்கள்! அவர்களுடைய கொள்கைப்படி அதிலே அவர்கள் சுடியவேண்டிய வேலையை எந்த வகையிலும் அவர்கள் கடிய முற்பட்டிருப்பார்கள். அவர்கள் யாருக்காகவும் அவர்களுடைய கருத்தை மாற்றிக்கொண்டதில்லை. அதனால்தான் அவர்களிடத்திலே எனக்குத் தனி அன்பு. தமிழகத்திலேயிருக்கிற தமிழ்த்தலைவர்களைவிட அதிகமாக அவரை அன்போடு நினைத்துக் கொண்டிருக்கின்றேன்.

அந்த நிலையிலே மதம் என்கின்ற தன்மை எப்படி நம்மை அடிமைப்படுத்திவைத்திருக்கின்றது என்று சொன்னால் ஒலிபெருக்கியிலே சொன்னார்கள் (பெருவிழாவில்)— பரதக்கலை தமிழர்களுடையது என்று சொன்னார்கள். இங்குத்தான் நாம் அதைச் சொல்லிக் கொள்ளமுடியும். அதை எழுத முடியாது. யாரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். நாம் தமிழர்கள் நமக்குள்ளே சொல்லிக்கொண்டிருக்கின்றோம். 1981-இல் மதுரையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டிலே அதைப்பற்றி ஒருபெரிய கருத்துப் போராட்டம் நடந்தது. அதிலே பண்டாரகர் (டாக்டர்) பட்டம் பெற்றிருக்கின்ற பத்மா சுப்பிரமணியம் அவர்கள் 'பரதமுனிவர்' இமயமலையிலே வாழ்ந்தவர்; அவர் வடமொழியிலே அந்தப் பரதக்கலையை எழுதியபின்தான் இந்த நாட்டிலே பரதக்கலை தோன்றியது' என்ற பெரிய தவறான கருத்தை வெளிப்படுத்தி—அதனால் பல எதிர்ப்புகளைத் தேடிக் கொண்டார்.

இன்னும் சொல்கிறேன். பலவகையான விளைவுகளை நாம் செய்யவேண்டியிருக்கிறது; என் அருமை அன்பர்கள் விடுதலை மறவர்கள்—தமிமீழ உள்ளங்கள் இங்கிருக்கின்றனர்; அவர்களுடைய ஒரே நோக்கம் தமிழீழம் கிடைக்க வேண்டும் என்பது. ஆனால் அந்த வேலை உடனடியாக ஒரே நிலையிலே நிறைவு செய்யப்பட்டு விடுவது அன்று! அப்படி ஒரு தமிழீழம் கிடைத்தாலும் — தனித்தமிழ் நாடு கிடைத்தாலும்கூட—மீண்டும் அங்கே தமிழர்கள் அடிமைப்பட்டுக் கொண்டுதாம் இருப்பார்கள். இந்தியாவுக்கு விடுதலை கிடைத்தது 1947-இலே; 39 ஆண்டுகள் சென்றும் எந்த உரிமையைப் பெற்றிருக்கிறோம்? எந்தவகையான உரிமையும் இல்லை. அந்த அளவுக்கு மதமும் சாதியும் அங்கே நிலவுகின்றன, பொருளியல் வீழ்ச்சி அங்கு-அந்த நாட்டிலே உள்ள ஏழைக்குடி மக்களை இன்றைக்கு வாட்டி வதைக்கின்றது. இதனால் 67 கோடி மக்களில் 50 கோடிப் பேர் ஒருவேளை சோற்றிற்கும் வாய்ப்பில்லாமல் பட்டினி கிடக்கின்ற ஒருநிலை இந்தியாவிலே பார்க்க முடிகிறது: ஒரு பத்து பதினைந்து பணக்காரர்கள் சேர்ந்துகொண்டு அந்த நாட்டைப் பொருளியல் அளவிலே சுரண்டிக் கொழுத்துக் கொண்டுள்ளனர்: அந்த நிலையைத்தான் நாம் பார்க்கமுடிகிறது.

இங்கு நாங்கள் வந்த 3,4 நாட்களாகச் சுற்றிப் பார்த்தபோது—எந்த அளவுக்கு மக்கள் உரிமை இங்கே மதிக்கப்படுகிறது என்பதைத் தெரிந்து மிகவும் மகிழ்கின்றோம். இங்கேயே வாழ்ந்துவிடக்கூடாதா என்னும் ஏக்கம்கூட எங்களுக்குத் தோன்றியது. அந்த அளவுக்கு—மீண்டும் அடிமை நாட்டிற்குப் போகப் போகின்றோமே என்ற பெரிய வருத்தம் எங்களிடையே குடிகொண்டுள்ளது. எதற்காக இதை நான் சொல்கின்றேன் என்று சொன்னால் நம்முடைய அடிமைத்தனம் குருதியிலே கலந்துவிட்டது! எனவே, எதைப்பற்றியும் சிந்திக்க முடியாதவர்களாக நாம் இருக்கிறோம். அப்படி சிந்தனை தோன்றிய—அந்த முதல் ஒளி—ஒளிப்பொறி கி.மு. 3.ஆம் நூற்றாண்டிலே தோன்றியது! அந்த உயர்ந்தஅறிவுப்பொறியின்பெயர்தான்திருவள்ளுவம் என்பது அந்தத் திருவள்ளுவம், உண்மையான தமிழின முன்னேற்றத்திற்காக தொடக்கத்திலே வெளிப்படுத்திய அறிவுப் பொறிகளுடைய சிந்தனை ஒளிச்சுடர்களையும், இடையிலே வந்த அடிமை அரசர்கள்— தமிழக அரசர்கள்—சேர, சோழ, பாண்டியர்கள் என்று சொல்லப்படுகின்ற அடிமை வேந்தர்கள்- அவர்களை ஒட்டி வாழ்ந்திருந்த புலவர்கள்-அடிமைப் புலவர்கள் — தன்மானமற்ற புலவர்கள் - அழித்து விட்டார்கள்.

திருக்குறள் தோன்றி ஆயிரம் ஆண்டுகள் யாரும் அதைக் கையிலே தொடவில்லை. அந்த நூலுக்குப் பெருமை ஏற்படுத்தியது ஓர் ஆரிய உரையாசிரியன்! அவன் வந்து அந்த நூலை எடுத்து—தன் ஆரியக் கருத்துக்களைப் புகுத்தியவுடன்தான் அந்த நூலை எல்லாரும் புரட்டிப் பார்த்தார்கள். அதுவரை, அறிவைப் போற்றிக் கொள்கின்ற—ஒரு தனமான உணர்வைப் போற்றிக் கொள்கின்ற அறிவை இந்த இனம் இழந்திருந்தது! திருக்குறளிலே ஒரு குறள்:

'இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியொடு ஒழுகப் படும்' என்பது அது. இதனுடைய பொருள் உங்களுக்குத் தெரியுமா? 'அறிவு என்று சொன்னால் அது யார் வாயினின்று வருகின்றது என்று ஆராயாதே! அறிவு சொல்லப்பட்டால் அஃது எந்த இனத்தினுடைய வாயினின்று வருகின்றது என்று ஆராய்ச்சி செய்யாதே! அவன் இளையவனாக இருக்கலாம்! அல்லது இழிந்த ஒரு குலத்தவனாக இருக்கலாம். நீங்கள் நினைக்கும்படி பெரிய குலத்தவனாக இல்லாமல் இருக்கலாம். எனவே, அறிவு எங்கிருந்து வந்தாலும் நீங்கள் போற்றிக்கொள்ள வேண்டும்'' என்பது அந்தத் திருக்குறள்.

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்று சொன்ன அந்தப் புரட்சிக் கருத்துதான் அந்த நாட்டிலே எப்படி தமிழ் இனம் தாழ்த்தப்பட்டது என்கிற வரலாற்றை நமக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறது: பிறவி என்பது முகத்திலோ, தோளிலோ, தொடையிலோ, காலிலோ தோன்றுவது அன்று! 'அது—பொதுவாக— இயற்கையாக முறையானது: அஃது எல்லார்க்கும் பொதுவானது. பொதுமக்களுக்கும் ஓரின மக்களுக்கும் ஒரு குலமக்களுக்கும் மட்டும் ஏற்படுவது அன்று'' என்று அந்தக்காலத்திலே நிலவிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப இப்புரட்சிக் கருத்தை திருவள்ளுவர் ஏற்படுத்தினார்.

இனி அடுத்த கருத்து —''தொழில் நிலையிலே கூட மக்கள் உயர்ந்தவர்கள்-தாழ்ந்தவர்கள் இல்லை'' என்பது இந்தக் கருத்து! 'சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்" என்ற இந்த இரண்டுக் கருத்துகளுந்தாம் தமிழர்கள் அந்த நிலையிலே எப்படி தாழ்த்தப்பட்டும், வீழ்த்தப்பட்டும், அடிமைப் படுத்தப்பட்டும் இருந்தார்கள் என்பதை நமக்கு உணர்த்துகின்றன.

இலங்கைத் தமிழர்களுக்கு அனுப்பப்படும் உதவி---!?

கடந்த 1978—ஆம் ஆண்டு இலங்கையில் பெரும் புயல் வீசி ஏராளமான சேதம் ஏற்பட்டது. இதில் மட்டக் களப்புப் பகுதியில் உள்ள வீடுகள் அனைத்தும் தரை மட்டமாகின. அந்தப் புயலால் ஏற்பட்ட மொத்த சேதத்தில் 95 விழுக்காடு மட்டக் களப்புப் பகுதிகளில் ஏற்பட்டது. அருகிலுள்ள பொலனறுவை மாவட்டத்தில் 5 விழுக்காடு சேதமே ஏற்பட்டது.

ஆனால் வெளிநாடுகளிலிருந்து கிடைத்த மொத்த உதவிகளில் 80 விழுக்காடு, சேதம் குறைந்த சிங்களப் பகுதியான பொலனறுவை மாவட்டத்திற்கே பயன்படுத்தப்பட்டது. 20 விழுக்காடு உதவியே கடுமையாகத் தாக்குதலேற்பட்ட மட்டக் களப்புப் பகுதிக்குக் கிடைத்தது தமிழகம் கப்பலில் அனுப்பிய உதவிகளும் தமிழர்களுக்குப் போய்க் கிடைத்திட வில்லை. அத்துடன் 1979—ஆம் ஆண்டில் நடந்த கலவரத்தின் பொழுது, தாக்குண்ட தமிழர்களுக்காக அளிக்கப்பட்ட உதவிகளும் தவறாகவே பயன்படுத்தப் பட்டுள்ளன.

அதேபோல் அவர் சொல்கிறார்—நம்முடைய அறிஞர்கள் அந்தக் காலத்திலே இந்த இனம் உயர்ந்து விடக்கூடாது என்று ஆரிய இனம் தாழ்த்த முற்பட்டபோது—அந்த நிலையிலே விழிப்புணர்வுகளை உண்டாக்குகின்றார். உண்மையான அறிவு என்பதைப் பார்த்து ஏமாந்துவிடாதே! ஏமாறிவிடாதே! உயர்ந்த பிறவி, வெள்ளை நிறத்தவர்கள் என்று பார்த்து இவர்கள் பூதேவர்கள் என்று மயங்கிய நேரத்திலே திருவள்ளுவர் நமக்கு நினைவூட்டுகிறார்.

தோற்றத்தாலோ அல்லது உயர்வு தாழ்வாலோ அறிவு புறக்கணிக்கப்படக் கூடாது. தாழ்ந்தவரிடத்தினின்று அறிவு வந்தாலும் அறிவைப் போற்ற வேண்டும்; சிறியவர்களாக இருந்தாலும் அவர்கள் கூறுவதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறார்.

''இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியொடு ஒழுகப் படும்''

எற்கனவே இந்த ஒளி — தமிழர்களுடைய அறிவுத் தோற்றம்-என்பது உண்மையாகவே மாந்தவியல் ஆசிரியர் பார்த்து வியக்கத்தகும் நிலையில் இருக்கின்றது. நாங்கள் சொல்லவில்லை. ஏதோ ஒரு புலவன் சொல்கிறான் என்று சொன்னால் நீங்கள் நம்ப வேண்டாம். அறிவு நிலையிலேயுள்ள ஆசிரியர்கள் தமிழர்களுடைய மாந்த வளர்ச்சியை— அதனுடைய மூலப்பொருட்களைவைத்து ஆராய்ந்தார்கள். இன்றைக்கு தமிழனுடைய மூளையை எடுத்தால் அவனுடைய மூளை இன்று மட்டுந்தான் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டிருந்தக் கொண்டிருந்த காலம் மலையேறிவிட்டது.

அந்த மூளையிலே இருக்கின்ற மூளையணுக்கள் நீண்ட நெடுங்காலத்தவை. அந்தக் காலத்திலிருந்து அந்த மூளை எப்படி கூர்தலறப்படி வளர்ச்சியடைந்திருக்கிறது என்பதை இன்னும் சில ஆண்டுகளுக்கும் பின்னாலே—கணக்கிடு பொறியினாலே — மின்னணுப் பொறியினாலே (கம்பியூட்டர் வழியாகத்) தெளிவாக உணர்ந்து கொள்ளமுடியும். யாரும் பொய் பேச முடியாது! அறிவியல் அப்படி வளர்ந்து வருகிறது.

அந்த அறிவியல் வளர்ச்சியினுடைய அடிப்படையிலேதான் பல தமிழியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன. The Riddle of Three Oceans என்று பசிபிக் பெருங்கடல், இந்து மாகடல், அரபிக் கடல் ஆகிய மூன்று கடல்களின் ஆய்வு உருசியாவிலே நடந்தது. அதிலேதான்—அந்தக் கடலின் அடியில் இருக்கின்ற அந்த எச்சங்களை-வரலாற்று எச்சங்களை உயிர் எச்சங்களை ஆராய்ந்து-தமிழன் சொன்ன வரலாற்றுக் குறிப்புக்களோடு பொருந்தியிருப்பதை அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அந்த நூலிலே-அது திராவிடம் - தமிழம் என்று குறிக்கப் படுகிறது.

''பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன் வாழி!''

என்று சொல்லப்படுகின்ற சிலப்பதிகார அடிகளுக்குப் பொருள் அந்த நூல் ஆராய்ச்சியிலே சொல்லப் பட்டிருக்கிறது: ஆப்பிரிக்காவிலிருந்து ஆத்திரேலியாவரை நீண்ட நெடும்மலைத்தொடர் அன்றிருந்தது; இப்போதும் இருக்கிறது: அதனுடைய அடிநிலையிலே ஒரு பெரிய ஆறு ஓடிக்கொண்டிருப்பதை அவர்கள் உண்மை என்று — உணர்ந்து எழுதியிருக்கிறார்கள்.

வரலாற்று அடிப்படையிலே...... அறிவியல் ஆராய்ச்சித் துறையிலே ஆய்ந்து எழுதியிருக்கிறார்கள். எதற்காக இதனை நான் சொல்கிறேன்? எந்தெந்தக் கூறுகளைத் தமிழன் தவறவிட்டான்; எந்தெந்த நிலையிலே அடிமைப்படுத்தப்பட்டுவிட்டான் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். முதன்முதலிலே, அவனுடைய மொழியைத் தாழ்த்தி விட்டார்கள் ஆரியர்கள்! ''தமிழ் என்பது ஒரு காட்டுவிலங்காண்டி மொழி; ஒரு விலங்கு இயற்றிய மொழி என்று அவர்கள் உணர்த்தினார்கள்; நாம் நம்பினோம். அதற்குப் பின்னாலே ஆரியர்களுடைய வருகையிலே-இந்தியாவில் அவர்கள் நுழைந்தபோது வேதமொழி என்ற ஒரு நாடோடிமொழி-நாகரிகமும் பண்பாடும் அற்ற ஒரு மொழியைப் பேசிக்கொண்டு வந்தார்கள். அந்தக் காலத்திலே வடக்கே தமிழின் பிரிவு மொழியாகிய ''பிராகிருதம்'' வழங்கி வந்தது; பிராகிருதத்தினுடைய இலக்கிய வழக்கு மொழியாக விளங்கியது பாலி மொழி; இந்தப் பாலி மொழியிலிருந்துதான் சிங்களம் தோன்றியது. சிங்கள மொழியை ஆராய்ந்தால் பிராகிருதமொழிச் சொற்களையும், பாலி மொழிச் சொற்சொற்களையுந்தாம் பார்க்க முடியும்.'' பாலியும் பிராகிருதமும் சிங்களத்திற்கு எப்படி வந்தது? எனவேதான், சிங்களவர்கள் அங்கே- வட இந்தியாவில்-பீகார், வங்காளம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்தவர்கள்; அங்கிருந்து ஓடிய நாடோடிகள் என்று நாம் மொழி ஆராய்ச்சி அடிப்படையிலேகூட அதை மெய்ப்பிக்கமுடியும். இனி சிங்கள மொழியை ஆராய்ந்தாலும் சரி: கிரேக்க, இலத்தீன் மொழிகளை ஆராய்ந்தாலும் சரி; வேறு உலக மொழிகளை ஆராய்ந்தாலும்-எந்த மொழிக் கூறுகளை எடுத்துக் கொண்டாலும், அதிலே தமிழ் மொழிக் கூறுகள் இருப்பதை உலக மொழி ஆராய்ச்சியாளர்கள் பார்த்து வியப்படைகிறார்கள். ''The Primary Classical Language of the World'' என்று தமிழ் மொழிக்குப் பெருமை சாற்றுகிறார்கள்.

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நிலையிலே, அந்த மொழியினுடைய தன்மையை நாம் இழந்துவிட்ட காரணத்தினால்தான் நீங்கள் யார் நான் யார் என்பதை மறந்துவிட்டோம். இராமயணக்கதை எல்வாருக்கும்தெரிந்ததே! அந்த இராமாயணக்கதைக் கூறுகளிலே தலையாய கூறு அதன் உறுப்பினர்களுக்கு வைக்கப்பட்ட பெயர்க் கூறு ஆகும்!

'இராவணன்' என்று சொன்னால்-இராமாயணக் கதையினுடைய அடிப்படையே வேறு-பல்வகையான நிலைகளிலே இப்போது இராமாயணம் ஆராயப்பட்டு அந்தக் கதைக்கும் தமிழர்களுக்கும் தொடர்பே இல்லை என்று இன்று வரலாற்று ஆசிரியர்கள் ஒப்புக் கொள்ளும்படியாக இருக்கிறது. அதைப்பற்றி மிகுதியாகச் சொல்ல நான் விரும்பவில்லை. ஆனால், ஆரியச் சார்பான அந்தக் கதைக் கருத்துகளிலே, நாம் பார்க்கக் கூடிய கருத்துகளுக்கும் மேலாக-அதிலே வருகிற உறுப்பினர்களுக்கு வைத்த பெயர் மாற்றங்கள். இப்படித் தமிழ் இனத்தின் மீது ஆரிய இனம் தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கிறது. மொழிநிலையிலே அந்தத்தாக்கம் முதல் முதல் ஏற்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள முடியும்.

'இராவணன்'! என்கிற பெயர் 'கருப்பன் என்னும் பொருள் உடையதாகும். இரா வண்ணன் என்றால் கருப்பு வண்ணன் -கருப்பன் என்று பொருள். அவனுடைய மனைவியின் பெயர் மண்டோதரி; மண்டோதரி என்றால் என்ன பொருள்? தெரியவில்லை நமக்கு! தெரிந்திருந்தால் அந்தப் பெயரை வைத்திருக்கமாட்டோம்! எதற்காகத் தமிழ்மொழியை நாம் உணருதபடி செய்து விட்டார்கள் என்று சொன்னால் அதிலே புகுத்தப் பட்ட அடிமை உணர்ச்சிகள் நமக்கு விளங்கக் கூடாது என்கின்ற வகையிலே மொழியினுடைய நிலையை முதலில் நமக்கு மறைத்துக் காட்டினார்கள். மொழியை மறைத்தவுடனே நமக்கு விழி போய் விட்டது. பார்வை அற்றுப் போய்விட்டது.

எனவே, மண்டோதரி போன்ற பெயர்களை அந்தக் காலத்திலே-நாம் மிக விரும்பி ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். இராமாயணக்கதை, பாரதக் கதை போன்றவற்றில் தமிழினம் தாழ்த்தப்பட்ட அந்தச் சூழல்களை நீங்கள் பார்க்க வேண்டும். அதையெல்லாம் விளக்கிச் சொல்ல எனக்கு நேரமில்லை.

மொழிநிலையிலே மட்டும் எப்படித் தமிழினம் வீழ்ந்தது என்பது ஒரு பெரிய வரலாற்றுச்செய்தி. நீண்ட நெடும் வரலாற்று உண்மைகள் அதிலே பொருந்திக்கிடப்பதை நீங்கள் பார்க்க முடியும். அந்த உண்மைகளுடைய சில எடுத்துக்காட்டுகளை மட்டுந்தாம் நான் உங்களுக்கு எடுத்துச் சொல்ல முடியும். 'மண்டோதரி' என்றால்-மண்டு என்பது பானை; உதரம் என்றால் வயிறு- பானைவயிறி என்று பெயர் வைத்துக் கொள்வது? மனுதரும நூலிலே சொல்கிறான்: தமிழர்களுக்கு உயர்ந்த பொருள் தரக்கூடிய பெயர்களை வைக்கக்கூடாது. சூத்திரர்களுக்கும் திராவிடர்களுக்கும் தாழ்ந்த பொருள்தரக்கூடிய பெயர்களைத்தாம் வைக்கவேண்டும். நம்முடைய ஊர்களிலே பார்த்திருப்பீர்களே! இலங்கையிலே இருக்கிறதோ, என்னவோ? தமிழ் நாட்டிலே பல ஊர்களிலே பார்த்திருப்பீர்களே? பல ஆண்களுக்குப் பெயர்கள் மண்ணாங்கட்டி, பாவாடை...... இப்படி வைத்திருப்பார்கள்! 'ஏன்' பா! அந்தப் பெயரை வைத்திருக்கிறாய்?' 'அப்படி வைத்தால்தான் நான் உயிரோடு இருப்பேன் என்று கணியர் (சோதிடர்) சொன்னார் அதனால்தான் என் அப்பா அப்படி வைத்தார்!' என்று விடை வரும்! இழிவான பெயர் வைக்க வேண்டுமாம்! அதேபோல் தமிழர்கள் வணங்கும் சிறு தெய்வங்களுக்குக்கூட இழிவான பெயர்கள்-கருப்பன்; வீரப்பன், ஐயப்பன்....இப்படித்தான் பெயர்கள்! காளி, மாரி என்கின்ற சொற்கள் எல்லாம் வரலாற்றிலே வாழ்ந்தவர்களின் சொற்கள். - அவற்றிற்கெல்லாம் நான் உங்களுக்கு விளக்கம் சொல்ல வேண்டுமானால் நீண்டநெடு நேரமாகும். பெரும்பாலும் அதற்கு அடிக்கடி வாய்ப்புகள் ஏற்படும் என்று கருதுகின்றேன்.

ஏனென்றால் தமிழன் மொழியை இனி அடிப்படையாகப் பேசிக் கொள்கின்ற காலம் வந்துவிட்டது. ஆங்கிலத்தில் பேசுவதுதான் உயர்ச்சி; தமிழில் பேசுவது இழிவு என்று பல தமிழர்கள்-பல நாடுகளிலே வாழ்கின்ற தமிழர்கள்-அந்த நாட்டு மொழியைப் பேசுவதை மிக எளிதாகப் பயிற்சி பெறுகிறார்கள். தமிழ்மொழியை விட்டுவிடுகிறார்கள்.

அப்பா, அம்மா என்றழைப்பதுகூடத் தவறு 'டாடி', 'மம்மி' என்றுதான் சொல்லவேண்டும் என்கின்ற குடும்பங்களெல்லாம் பார்த்திருக்கின்றேன்; என்கின்றபோது அந்தக் குடும்பங்களிலே இருக்கின்ற தமிழ்இன உருவங்கள், அன்னை, தந்தை, அக்கை, தங்கை, அண்ணன், தம்பிகள்-ஆங்கிலத்தில் பிரஞ்சில் பேசி மகிழ்கிறார்களே, தவிர, தமிழிலே பேசி மகிழவில்லை.

'மம்மி' என்ற சொல் எங்கிருந்து வந்தது? அம்மா என்னும் தூய தமிழ்ச் சொல்லினுடைய பிரிவு! உலகத்திலே இன்றைக்கு ஏறத்தாழ வழங்குகிற 2788 மொழிகள் -ஏறத்தாழ 3000 மொழிகள்; இதுவரைக்கும் உலகில் தோன்றி மறைந்த மொழிகள் 6000 மொழிகள்; இப்போது 3000 மொழிகளுக்குப் பக்கமாக வழங்கி வருகின்றன-இன்றைக்கு அதில் 65%. மொழிகள் இந்த அம்மா என்ற சொல்லைத்தான் கொண்டுள்ளன. அம்மா என்கின்ற சொல் தூயதமிழ்ச்சொல்; அம்மம் என்றால் மார்புக்குப் பெயர். எத்தனையோ பெண்கள் குழந்தைகளைப் பெறுவார்கள். ஆனால், பாலூட்டி வளர்ப்பது அதைப் பெற்ற தாய்க்குரிய வேலை; அந்த 'அம்மம்' என்று எதற்குப் பெயர் வந்தது என்று சொன்னால்-அஃது 'அம்' என்கிற ஒலிக்குறிப்பினடியாக அந்தப் பெயர் வந்தது என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். 'அம்' என்பது குழந்தை பால்குடிக்கும் போது வருகின்ற ஒலி. இந்த ஒலியடியாகப் பிறந்த ஒலிக்குறிப்புச் சொல் 'அம்'. அம் என்பது அம்மா என்றானது. "கா கா" என்று கரைவதைப் பார்த்து அதற்குக் காகம் என்று பேரிட்டான்; "குக்கூ... குக்கூ என்று கூவுவதைப் பார்த்து அதைக் குயில் என்று சொன்னான்; "மா மா" என்று கத்துவதைப் பார்த்து அதை மாடு என்று அழைத்தான். இதுபோன்ற ஒலிக் குறிப்புச் சொற்களைக் கொண்டே தமிழன் பெயரிட்டு வந்தான். அப்படி வந்ததுதான் இந்த "அம்மா" என்ற சொல்லும்!

தமிழிலே இவற்றையெல்லாம் மொழி அடிப்படையிலே ஆராய்ச்சிகளிலே நான் உங்களுக்கு விளக்குவதற்கு எனக்கு நேரமில்லை. ஆகையினாலே தான் சொல்கின்றேன். மொழிநிலையிலே தமிழனை எப்படித் தாழ்த்தினான் என்பதை-அந்த இராமாயணப் பெயர்களிலே பார்த்தாலே உங்களுக்கு விளங்கி விடும். மண்டோதரி என்றால் பானைவயிறி-இராவண்ணன் என்கின்ற ஒரு பேரரசனுடைய மனைவிக்கு அந்தப் பெயரை வைத்துள்ளான். அரசர்களுடைய மனைவிக்கு நல்ல பெயர் வைக்கக் கூடாது என்பதற்காக அப்படி வைத்துள்ளான். இராவண்ணனுடைய தங்கை பெயர் என்ன தெரியுமா? சூர்ப்பநகை-நமக்கென்ன தெரியும்? - சூர்ப்பநகை என்றால் ஏதோ ஒரு வகையான நகை என்று நினைத்துக் கொண்டோம்-சூர்ப்பம் என்றால் முறம். புடைக்கிறோமே அந்தமுறம்!-நகை-நகா என்றால் பல்; முறம் போலிருக்கிற பற்களையுடையவள்-முறம் பல்லி என்று பெயர் வைத்திருக்கிறார்கள். நமக்குத் தெரியுமா?

நம்மபெயரும் அப்படித்தான்! இங்கிருக்கிற பல பேர்களுக்கு நான் மொழி பெயர்த்துக் கொடுத்தால் அந்தப் பெயர்களைத் தூக்கிக் கீழே போட்டு விடுவீர்கள்! "இந்தப் பெயர் எனக்கு வேண்டாங்க! நிரம்ப இழிவாக இருக்கிறது!" என்று சொல்லி எறிந்து விடுவீர்கள்! கேசவன் என்று பெயர் வைத்திருக்கிறோம்; கேசவன் என்றால் "அது கடவுள் பேர் ...அப்படி என்று நினைக்கிறோம்! அப்படியே நினைத்துக் கொண்டிருக்கும்படியாகச் செய்து விட்டான் ஆரியன்! கேசம் என்றால் முடி, மயிர்! கேசவா, மயிரான்.. அப்படி என்று பொருள்! வேறு பொருள் இருக்கிறதாக வேறு யாராவது சொல்ல முடியுமா? சொல்ல முடியாது! பூவராகா என்று பெயர் வைத்துக் கொள்வோம்; பூ என்றால் நிலம்; வராகம் என்றால் பன்றி; "அப்பா நிலப்பன்றி!" என்று கூப்பிட்டால் அவனுக்குத் தெரியும், ஐயோ! நம்மபெயர் இப்படி இருக்கிறதே என்று! சுப்பிரமணியன் என்று பலபேருக்குப் பெயர்· அது பெரிய கடவுள் பெயர் என்று நினைத்து நாம் ஏற்றுக் கொண்டு வைத்துக் கொள்வோம்.

நான் உங்களுக்கு எந்த அளவிலே எப்படி இந்த இனத்தை-ஆரியன் தாழ்த்தி வீழ்த்தினான் என்பதை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் ஒரு கூறு போட்டுக் காட்டுகிறேன். பெரிய அளவிலே-எல்லா மொழிகளோடு-ஆங்கில மொழியிலே பார்த்தால் பெரும்பாலும் தமிழ் வேர்ச் சொற்கள்தாம் இருக்கும்;-வேறு எந்த மொழியில்-கிரேக்க, இலத்தீன் மொழிகளை எடுத்துக் கொண்டாலும் அப்படித்தான் இருக்கும்;-யாராவது இல்லையென்று— பேராசிரியர்களாலும் சொல்ல முடியாது – இலத்தீன், கிரேக்கப் பேராசிரியர்களாலும் சொல்ல இயலாது-இன்னும் ஆயிரம் பேராசிரியர்கள் வந்தாலும் தமிழ் மொழியினுடைய சொற்களின் வேர்களை அவர்களால் மறைத்து விட முடியாது- இதைப் பெருமைக்காகச் சொல்லவில்லை; அறிவியல் ஆராய்ச்சி அடிப்படையிலே நான் சொல்கிறேன். எனவேதான், பலபெயர்கள் நமக்கு இழிவைக்கொடுக்கின்றபெயர்களாகபெயரளவில்கூட

(தொடர்ச்சி 7-ஆம் பக்கம் பார்க்க)

0 இராயப்பேட்டை, சிறீ வெங்கடேசுவரா மேல் அளவைப் (Matriculation) பள்ளியில்

நடைபெறும் ஊழலை அரசு ஊக்கப் படுத்துகிறதா?

0 ஆசிரியர்களுக்கு நேர்ந்து வரும் கொடுமைகளுக்கு அதிகாரிகள் துணை போகின்றனரா?

0 வீடுதேடிப்போய் அடியாட்கள் ஆசிரியர்களை மிரட்டுகின்றது உண்மையா?

0 காவல்துறை கண்காணிக்கத் தவறுவதேன்?

0 ஆசிரியர்களின் குறைகளால் கல்வித் துறையே பாழாகிறது. அரசு கவனிக்க வேண்டுகிறோம்!

சென்னை இராயப்பேட்டையில் உள்ள சிறீ வெங்கடேசுவர மேல் அளவைப் (Matriculation) பள்ளியில், கடந்த ஆகச்டு மாதத்திலிருந்து ஆசிரியர்கள் தங்களின் நேர்மையான கோரிக்கைகளுக்காகப் பள்ளி மேலாளர்களுடன் போராட்டம் நடத்தி வருகிறார்கள். அதற்காக நான்கு ஆசிரியர்கள் பள்ளியை விட்டு நீக்கப்பட்டிருக்கிறார்கள் மற்றும் தொல்லை கொடுக்கப்பட்ட இருபதுக்கும் மேலான ஆசிரியர்களாளர் கொடுமைகளைத் தாங்க முடியாமல், வேறு பள்ளிகளைத் தேடிப் போய் விட்டார்கள்.

அவர்களின் நேர்மையான கோரிக்கைகள் இவை:

1. ஆசிரியர்களுக்கு அரசு வரையறுத்துள்ள குறைந்த அளவு சம்பளம் தரப்பட வேண்டும். ஆனால் பள்ளி அதைத் தர மறுக்கிறது.

2. சம்பளப் பதிவேட்டில் சம்பளத் தொகையைக் குறிக்காமல் ஆசிரியர்களைக் கையொப்பமிடக் கட்டாயம் படுத்துகிறார்கள் மேலாளர்கள். (தனியார் நடத்தும் பெரும்பாலான பள்ளிகள் இந்த முறையில் தான் நடைபெறுகின்றன என்பது அரசுக்குத் தெரியாமல் இருக்க முடியாது. ஒருவேளை அரசு அதிகாரிகளுக்கும் இதில் பங்கு இருக்குமோ, தெரியாது.)

3. மேல் அளவைப் (Matriculation) பள்ளிகளுக்கான நெறி முறைகள் (Code of Regulations) இப்பள்ளியில் பின்பற்றப் படுவதில்லை.

4. ஆசிரியர்களுக்கு மிக அதிகமான பணிச் சுமை.

5. ஆசிரியர்களின் சேம நலக் காப்புத் தொகையைப் (T.P.F.) பள்ளி ஆளுமை விழுங்கி விடுகிறது.

இவையல்லாமல் மாணவ, மாணவியர்களைச் சேர்ப்பதிலும் பள்ளித்தலைமை ஊழல் புரிந்து வருகிறது.

ஓர் ஆண்டுக்கு ஏறத்தாழ 11 இலக்க உரூபா அளவில் மாணவர்களிடமிருந்து சம்பளமாகவும் நன்கொடையாகவும் பறிக்கப்படுகிறது. இருந்தும் ஆசிரியர்களுக்கான சம்பளம் ஒழுங்காகக் கொடுக்கப் படுவதில்லை (எந்த நிலையிலும் நன்கொடை தண்டக் கூடாது என்பது அரசின் கட்டளையாக இருக்கிறது.)

இரவில் இப் பள்ளி இதன் தலைமையாசிரியர்க்கும் திரைப்பட முதலாளிகள் போன்றோர்க்கும், இரவு விடுதியாகப் பயன்படுத்தப் படுகிறதாம்.

குடிப்புக்கும் கூத்தடிப்புக்கும் குறைவே இல்லையாம் ஆசிரியர்கள் பலர் நேரடியாகவும் மறைமுகமாகவும் போராடி வந்தும், அதிகாரிகளிடம் முறையிட்டும், அவர்களில் சிலர் வேலை நீக்கம் செய்யப் பட்டது தவிர, வேறு எவ்வகைப் பயனும் விளைய வில்லையாம். வெளியேற்றப்பட்ட ஆசிரியர்கள் குமுறுகிறார்கள்; குமைகிறார்கள்; நெஞ்சு நசுங்கி அவலப் படுகிறார்கள்! இன்னும் கோரிக்கைக்காகப் போராடும் அவர்கள் அடியாட்களைக் கொண்டும் மிரட்டப் படுகிறார்கள்! பழி வாங்கப் படுகிறார்கள்!

எதிர்க்க வலுவற்ற பலர் வேறு பள்ளிகளில் பணிக்கென ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறார்களாம். வேறு சிலர் குடியிருப்பையே வேறு இருப்பிடங்களுக்கு, வேறு வழியில்லாமல் மாற்றிக் கொண்டு போய் விட்டார்களாம்.

பள்ளி மேலாளர்க்கும் தாளாளர்க்கும் தலைமையாசிரியர்க்கும் இவ்வளவு நெஞ்சத்துணிவு எப்படி வந்தது? வியப்படைகிறார்கள், பொது மக்கள். விடை கேட்கிறார்கள் நடுநிலையாளர்கள்!

ஒருவேளை, அரசு அவர்களை ஊக்கப் படுத்துகிறதா? அதிகாரிகள் அவர்களுக்குத் துணை போகின்றனரா? காவல்துறை ஆசிரியர்களைக் காப்பாற்றுவதற்கு மாறாக, பள்ளி உரிமையாளர்களுக்குக் காவலாகி நிற்கிறதா?

நேர்மையான நடவடிக்கைகளை எதிர்பார்க்கின்றனர் மக்கள்! விடை காணுமா அரசு?

விடிவு நேருமா ஆசிரியர்களுக்கு?

'தமிழ்நிலம்' நல்ல செய்தியை எதிர் பார்க்கிறது!

— தொலைநோக்காடி!

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல். இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

பகுதி-1 இதழ் எண் : 25-26 (20-11-83) தொகுதி-43-48

அதிகாரங்கள் இல்லை; ஆட்சியே தேவை!

உலகிலுள்ள தமிழர்களின் இன்றுள்ள அனைத்துச் சிக்கல்களிலும் தலையாயது தமிழினச் சிக்கலே! அதற்கு ஏற்படும் முடிவைப் பொறுத்ததுதான், தமிழினத்தின் மேம்பாடும் முன்னேற்றமும்; இலங்கையில் மட்டும் அன்று, இந்தியாவிலும் உறுதிசெய்யப்படும்! ஏன், உலகில் உள்ள நாற்பத்து நான்கு நாடுகளில் வாழும், பதினேழு கோடித் தமிழர்களின் மதிப்பும் நலன்களும்கூட அப்பொழுது தான் மேல் உயர்ந்து தோன்றும். இன்று உலகில் உள்ள தமிழர்களுக்கென்று ஒரு தனி வரலாறும், தனிப்பண்பாடும் உண்டு என்பது மறைக்கப்பட்டும், மறுக்கப்பட்டும் வருகின்றன என்பது நாம் அனைவரும் விளங்கிக் கொள்ளவேண்டிய ஓர் அவலம்! இனி, அது பாரதப் பண்பாடாகவும்-வரலாறாகவும் திரிக்கப்பட்டும் விளம்பரப்படுத்தப்பட்டும் வருகின்றன என்பது நாம் உணர்ந்து கொள்ளவேண்டிய ஓர் உண்மை! இந்நிலையில் தனித்தமிழீழம் உருவாவது தமிழர்களின் எதிர்கால வளர்ச்சி வரலாற்றுக்கே அமைக்கப்படும் வலிவான ஓர் அடித்தளமாகும்.

தமிழினம் என்பது வாழ்ந்து சரிந்த ஓர் இனம்! இக்கால் உள்ள நிலையில் அது மேலும் சரிந்து போகுமானால், அதன் வரலாற்று எச்சங்களும் எதிர்காலத்தில் மிஞ்சுவதற்கு வாய்ப்பில்லை. கொழுப்பெல்லாம் கரைந்து, தசைகள் உருகி, அரத்தம் வற்றி உருக்குலைந்து எலும்பும் தோலுமாக உள்ள ஓர் உடம்புக்கு மேலும் சிதைவு நேருமானால், எவ்வாறு அவ்வுடல் உயிர்வாழ இயலாதோ அவ்வாறான நிலையில் உள்ளது தமிழினம்! இந்நிலையில் தமிழீழமே அதற்கு உயிரூட்டும் மாமருந்து! ஊட்டந்தரும் அமிழ்த ஊற்று! எனவே, எக்காரணம் கொண்டும் தமிழீழம் பெறும் நோக்கம் கருக்குலைந்து விடக்கூடாது. விடுதலை வேட்கையுடன் வீறுகொண்டெழுந்த தமிழீழ இளைஞர்களின் ஒளி முகங்கள் வேறு திசை நோக்கித் திருப்பிவிடக்கூடாது. அவர்களின் குரல்கள் 'விடுதலை' முரசையே ஒலித்துக் கொண்டிருக்கவேண்டும்! நாளை விடியப்போகும் உரிமைத் தமிழீழத்தையே அவர்கள் எண்ணமாய், உணர்வாய், இயக்கமாய்ப், பேச்சாய், எழுத்தாய் வெளிப்படுத்திடவேண்டும்! எங்கும், எவர் முன்னிலையிலும் இவ்வுறுதி தளர்ந்துவிடக்கூடாது! அரசியல் ஊதியங்களுக்காகப் பசலிளிப்புக் காட்டும் பத்தாம்பசலைகளின் பொத்தாம் பொதுவான போலிப் புனைவுகளைப்போல், செல்லரித்து ஒடிந்து விழக்கூடியதன்று, அவர்களின் விடுதலைத் 'தாகம்!' வானத்தின் தூய பனிநீரை உண்டு, உரிமைக்காற்றை உயிர்த்து உயிர் வாழும் சம்புள் என்னும் சக்கரவாகப் புள்ளின் நெஞ்சாங்குலையின் துடிப்பிசையாக அவர்களின் விடுதலை முழக்கம் இராமுழுதும் பகல்முழுதும் ஒலித்துக் கொண்டே இருக்கவேண்டும்! அந்த ஒலி இறுதியில் வெற்றி ஓங்காரமாக வளர்ந்து வலுப்பெறும் வரை, அவர்களின் குரல் கம்மிவிடக்கூடாது! அவர்களின் உள்ளங்களில் போலிப் புல்லுருவிகளின் சொல்லுருவம் அலைபாய்ந்து விடக்கூடாது!

இனச் சிக்கலுக்குத் தீர்வு அதிகாரப் பகிர்வோ, ஆளுமைப் பங்கீடோ இல்லை; ஆட்சிப் பகிர்வே! மாவட்டக் குழுவோ, மண்டலக் குழுவோ நம் நெடுநாளைய அடிமை நீக்கத்திற்குத் தீர்வாகிவிடாது; மண்ணைப் பிரிப்பதுதான் மாளாத போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியும்! பேச்சு உரைகள், உடன்பாடுகள்-இவையெல்லாம் அடிமை நீக்கத்திற்கு உதவினவாக வரலாறு இல்லை; அரசியல் அமைதிக்கு வேண்டுமானால் இவை பயன் படலாம்! ஆனால் நாம் விரும்புவது அரசியல் அமைதியோ, அதிக அதிகாரமோ அல்ல; அடிமை நீக்கம்!; அதிகார வன்முறை விடுவிப்பு!

ஒப்பந்தத்தால் உறுதி செய்வதன்று விடுதலை! தீப்பந்தத்தால் தீர்க்கப்படுவது! அதை வெறும் வாய்ப்பந்தலால் வென்றெடுக்க இயலாது! நாய்ப்பிழைப்புக்கு வேண்டுமானால் அது துணைபோகலாம்! நல்லுரிமை வாழ்க்கைக்கு அது வாய்ப்பாக அமைய முடியாது!

இன்னும் ஒன்றை நாம் இங்கே நினைவில் இறுத்திக் கொள்ளுதல் இன்றியமையாதது. இந்திரா-செயவர்த்தனா-இருவரின் பேச்சுக்களும் ஓர் எள்ளளவும் தமிழீழத்திற்கு விடிவுண்டாக்க முடியாது. குரங்கினத்தால் பூனையினம் நன்மைபெற இயலவே இயலாது. மூக்கு நீளமுள்ள இந்த இருபெரும் ஓரினத் தலைவர்களும், இன்னோர் இனத்திற்கு விடுதலை வழங்கிவிடுவது அத்துணை எளிதன்று! அவர்களை நம்பி யாரும் ஏமாறிப்போகவேண்டா! அவர்களின் கால நீடிப்பும், பேச்சுவகை நாடகக் காட்சிகளும் தமிழின எழுச்சியை மட்டுப்படுத்துவதற்கே ஆகும்! இவற்றையெல்லாம் நன்றாக எண்ணி, நம் தேவையினை நாமே உறுதி செய்துகொண்டு, அதை இன்றில்லையேனும் என்றேனும் அடையும் நோக்குடன், நமக்காக-அல்லது இன்றுள்ளவர்களுக்காக என்றில்லாமல்-இனி வருவோர்க்காகவும்-என்றைக்கும் உள்ள நம் தாய் மொழிக்காகவும் தாயினத்திற்காகவும், நாம் விடா முயற்சியுடன் விடுதலையை நோக்கி நடையிடுவதே நாம் செய்ய வேண்டுவது என்று கருதி ஊக்கம் பெறுவோமாக!

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.

—பெருஞ்சித்திரனார்.

உழைப்பும் ஊதியமும்!

மண்டல்குழு — போராட்டம் — ஒரு விளக்கம்!

('சிந்தனையாளன்' இதழ்; தடையும் விடையும் பகுதி.)

மண்டல் குழு அமையப் போராடிச் சிறை சென்றது நாங்கள். ஆனால் இப்பொழுது மண்டல் குழுவை வீரமணி பிடித்துக்கொண்டிருக்கிறாரே! ஏன்?

பாலுதாசன். க. இ; வளவனூர்

மண்டல் குழு அமைப்பு 31-12-1978-இல் வந்தது. 8-5-1978-இல் பிற்பட்டோருக்கான ஒதுக்கீடு பற்றிய கோரிக்கையை இந்திய அரசிடம் முதன் முதலாக வைத்ததும் அதற்கென 24-6-78-இல் சென்னையில் முதல் மாநாட்டைக் கூட்டியதும், அதற்கென ஒரு தனிப் பேரவையை 19-8-78-இல் அமைத்ததும் பெரியார் சம உரிமைக் கழகம். 15-11-79 முதல் 1-12-79 முடிய தில்லியில் போராட்டம் நடத்தி 1900 பேரைத் திகார்சிறைக்கு அனுப்பியதும் பெரியார் சம உரிமைக் கழகம். 1982 ஆகத்துவரை வற்புறுத்தி மண்டல் குழு அறிக்கையை நாடாளுமன்றத்தில் வெளியிடச் செய்ததும் பெரியார் சம உரிமைக் கழகம். இப்பணிகளில் பெரியார் சம உரிமைக் கழகத்துடன் பங்குகொண்டவர் ராம் அவதேசு சிங்.

இந்த 1982-க்குப் பிறகு வேறு தோழமை அமைப்பினர் இதைத் தொடர்ந்து பணியாற்றுவது வரவேற்கத்தக்கதே. முரசம் பெரிதாதகவும் அதை அடிக்கிற ஆட்கள் எண்ணிக்கையில் கூடுதலாகவும் இருப்பதால் - கூந்தல் உள்ளவள் வாரி முடிக்கிறாள் என்பது போல, உங்கட்கு இப்படி ஒரு தோற்றம் இருக்கிறது. பெ. ச. க. வரலாறு 1978-இல் தொடங்கித்தொடர்ந்து1983 வரை போராடுகிறது என்கின்ற போது நெடிய வரலாற்றில் பெ. ச. க. மட்டுமே இடம்பெறும். என்றும் எவரும் இதை மறைத்திட முடியாது.

— நன்றி. 'சிந்தனையாளன்' 5-11-83

அறம் பாடுங்கள் ஐயா!

— த. அன்பழகன்.

அறம்பாடுங்கள்! ஐயா அறம்பாடுங்கள்!
புறம்பாடிப் புகழ்பதித்த
புலவோரின் வழிச்சுடரே!
அறம்போகாச் செயவர்த்தன்
அழிந்தொழியக் கடவனென்று (அறம்)

தமிழ்ப்பெண்டிர்க் கற்பழித்தான்; தணலிட்டுக்
கொன்றான்;
தமிழர்களின் உடைமைகளைத் தாங்கொண்டு சென்றான்!
(அறம்)

தமிழர்களை அங்கங்கே தீயிட்டுக் கொன்றான்!
தமிழீழம் கேட்போர்க்குத் தடைபோடு கின்றான்!
(அறம்)

தமிழினத்துத் தலைவர்களைச் சிறையினிலே கொன்றான்;
தமிழினத்தைத் தரைமட்டம் செய்யப்போ கின்றான்!
(அறம்)

(உ.த.மு.க.முதல்வர் ஐயா அவர்களுக்கு வணங்கி எழுதிக்
கொண்டது)

6-ஆம் பக்கத் தொடர்ச்சி

இருக்கிறது; ஏராளமான வரலாறு-அதிலே, தமிழ் நாட்டுக் கோயில்கள் அனைத்தும் நம்நாட்டு ஊர்கள் அனைத்தும் வடமொழிப் பெயர்கள். எனது யாழ்ப்பாண அன்பர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். நான் யாழ்ப்பாணத்திலே ஒரு 15 நாட்கள் அங்கிருந்த போது பல பெயர்கள்-அவர்கள் வட மொழிப் பெயர்களாகவே வைத்துக் கொண்டிருப்பது பெரிய வருத்தமான சூழ்நிலையாகும். இப்போது அது குறித்து நான் வருந்துகிறேன். முதலிலே மொழி நிலையை நாம் விளக்கிக் கொள்ளவேண்டும்.

—தொடரும்

பிற இதழ்களிலிருந்து
சில நல்ல பக்கங்கள்!

பாடல்களாக இல்லாமற்
போனால் என்ன?
கருத்துகள் வைரங்களாக
ஒளிர்கின்றன!

(நன்றி தேன்மழை நவம்.'83)

மகன்!

அந்தப் போர்க்களத்திலிருந்து
வாயில் நுரை தள்ள
மூச்சு இரைச்சலுடன்
தனியாக வரும்
தன் குதிரைக்கு
அம்மா, தண்ணீர் கொடு!
அதன் முதுகைத்
தடவிக்கொடு!
அது —
இன்னொரு வீரனுக்குப்
பயன்பட்டும்!
திரும்பி வந்த குதிரை மேல்
என்னைக் காணாமல்
கண்ணீர் சிந்தி
என் பிணக்குழியைத்
தேடாதே!
விடுதலை அடைந்த இந்நாடு
உன் மகனின்
இன்னொரு வடிவமன்றோ!

-சீர். நசுடேலன்

முதலும் வட்டியும்!

நம் மீது
அவர்களெரிந்த கற்களைப்
பொறுக்கி வையுங்கள்!
மார்பில் முத்தமிட்ட, அந்தத்
துமுக்கிக் குண்டுகளை
எடுத்து வையுங்கள்!
அரத்தம் கசிந்த, அந்தத்
தடியடித் தழும்புகளை
எண்ணி வையுங்கள்!
ஏனென்றால், அவர்கள்
வட்டி வாங்கியே
பழக்கப் பட்டவர்கள்!
நாமும் வாங்கியவற்றுக்கு
வட்டி போட்டுக்
கொடுக்க வேண்டாமா?
நாளை!

-பெ. பூலோக சுந்தரவிசயன்

இரவலனின் இறுதிமுறி
(உயில்)

நான்
இரந்து வந்த
தெருக்களை
என்
மகன் எடுத்துக்
கொள்ளட்டும்!
என்
கப்பரையை
இந்தியா
எடுத்துக் கொள்ளட்டும்!

-மா. அருள்வாணன்

தமிழீழ விடுதலைக்காக நடத்தப்படும் ஒலிபரப்பு!

தமிழீழத்தின் குரல்!

ஒலிபரப்பு நேரம்:

காரி (சனி)க்கிழமைகளில்
காலை 6 முதல் 7 வரை

ஞாயிற்றுக்கிழமைகளில்
மாலை 4 முதல் 5 வரை

அலைவரிசை:
SW-1-2 SW-41

ஓர் ஐயமும் விளக்கமும்!

செய்தித்தாள்கள் நம்மை வேண்டுமென்றே மறைக்கின்றனவா?

அன்பர் ஐயம்!

மதிப்பிற்குரிய ஐயா,
வணக்கம்.

சில நாட்களாகக் கடிதம் எழுத முடியாமைக்கு வருந்துகின்றேன்.

இலங்கையில் தமிழர் படுகொலைக்குப் பின்னர் இப்பொழுதுதான் மடல் எழுதுகிறேன்.

ஈழத் தமிழர் விடுதலைக்குக் குரல் கொடுக்கத் தக்க நேரம் இதுவே! தாய்த்தமிழகத்தின் விடுதலைக்கு அடிப்படை ஈழத்தமிழர் விடுதலை!

ஐரோப்பியச் செலவுக்குப் பின்னர் தாயகம் திரும்பியது அறிந்து கொண்டோம். தங்களுடைய பெயர் செய்தித் தாள்களில் வராமை கண்டு வருந்துகின்றோம். செய்தித்தாள்கள் தங்களை வேண்டுமென்றே மறைப்பதுபோல் தெரிகிறது.

'தமிழ்நிலம்' ஒருமாத காலமாக வரவில்லை. மிகுந்த கவலை உண்டாகிறது.

வணக்கம்' அன்புள்ள
கு. தென்னவன், அறந்தாங்கி.

ஆசிரியர் விளக்கம்

அன்புடையீர், வணக்கம்:

தங்கள் கவலை விளங்குகிறது. நீங்கள் மட்டும் இல்லை; பலர் என்னைக் கேட்டுவிட்டார்கள்! செய்தித் தாள்களில் பெயர் வருவதாலேயே, அது சிறப்புடையதாக ஆகிவிடாது. முகமூடிக் கொள்ளையர், பெயர் இக்கால் செய்தித் தாள்களில் பரபரப்பாக அடிபடுகிறதே! இப்பொழுதுள்ள அரசியல் தலைவர்களைப் பொறுத்தமட்டில், செய்தித்தாள்களில் தங்கள் பெயர்கள் நாள்தோறும் வெளிவரவில்லையானால், மக்கள் தங்களை மறந்துவிடுவார்கள் என்பதற்காகவே, சிலர் செய்தியாளர்களை அவ்வப்பொழுது அழைத்து விருந்து வைத்துக் கை செலவுக்கும் உறைகளில் உருபாத்தாள்களை வைத்துக் கொடுத்துத் தங்களைப் பற்றிய ஏதாகிலும் ஒரு செய்தியை நாள்தோறும் செய்தித்தாள்களில் வரச் செய்வது ஒருவகை. சிறிய தலைவர் முதல் பெரிய தலைவர் வரை வேறுபாடின்றிப் பொதுவாக இம் முறை அனைவராலும் பின்பற்றப்படுகிறது.

இனி, இன்னும் ஒருவகை உண்டு. நாள்தோறும் தங்கள் பெயர் செய்தியிதழில் வரவேண்டும் என்பதற்காக ஏதாகிலும் பரபரப்பான அறிக்கைகளையோ போராட்டத்தையோ அறிவிப்பது! ஆனால் அவையும் செய்தித்தாள்களில் தவறாமல் வெளிவர வேண்டுமானால், செய்தியாளர்களைக் கவனித்தே ஆகவேண்டும்! அரசியலில் மட்டுமன்று! அனைத்திலுமே இப்பொழுது வாணிக முறைதான் பின்பற்றப் படுகிறது!

இன்னொன்றையும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இப்பொழுது நம் தமிழீழத்தைப் பற்றிய செய்திகளும் அறிக்கைகளும் ஆர்ப்பாட்டங்களைப் பற்றியும், புலிகளைப் பற்றியும் சில செய்தித்தாள்களில் (அஃதாவது உங்களைப் போன்றவர்களெல்லாம் கொஞ்சமும் ஐயுறாமல் தமிழினத் தலைவர்கள், தளபதிகள் என்றெல்லாம் நம்பும்படியானவர்கள் நடத்துகின்ற இதழ்களையும் சேர்த்தே சொல்கிறேன்) செய்திகள், படங்கள் இவையெல்லாம் வெளிவந்து கொண்டுள்ளன, இல்லையா? அவையெல்லாம் இயல்பாகவே, ஏதோ தமிழின நலத்தின்மேல் கொண்ட தாகத்தால் - வேகத்தால் வெளிவருகின்றன என்று கருதிவிடாதீர்கள். ஒவ்வொரு செய்திக்கும், படத்திற்கும் புலிகளிடமிருந்து வெள்ளி உருபாக்களையும் பச்சைத் தாள்களையும் கொஞ்சமும் ஈவு இரக்கமில்லாமல் கொள்ளையாய்ப் பிடுங்கி விடுகின்றார்கள் என்பதை மனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

பெரும்பாலும் நம்நாட்டுச் செய்தித்தாள்கள் பரத்தைகளைப் போன்றவையே! அவற்றுள் சிலவோ கழிவறைச் சுவர்களைப் போன்றவை! எனவே, காசு, பணம் கொடுத்தால் சிலதாள்கள் செய்திகள் போடும்! சிலவோ திரைப்படக்கழிசடைச் செய்திகள் திரைப்படக் கூத்தியர்களின் செய்திகள் முதலியவை பரபரப்பாக விலை போகும் என்றால், அதையும் போட்டுக் காசு பண்ணும் அறிவற்ற மூடர்களும் திருடர்களும் காசுக்கு மலந்தின்னும் கயவர்களும் நிறைந்த நம் செய்தித் தாள்களைப் பற்றி வேறு எப்படிச் சொல்வது?

இனி, இவ்விடத்தில் வேறொன்றையும் கூறாமல் இருக்க முடியவில்லை. என் ஐரோப்பியச் சுற்றுச் செலவு பற்றியது அது. ஆனால் இப்பொழுது மிகவும் சுருக்கமாகச் சொல்லுகின்றேன். தேவையானால் பிறகு விரிவாகச் சொல்லுவேன்.

என் ஐரோப்பியச் சுற்றுச் செலவின் பொழுதே நம் தோழமைக் கட்சித் தலைவர் ஒருவரும் அங்கு வந்திருந்தார் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும்: அவரும் அவர் குழுவினரும் ஒரு கைவிரல் எண்ணிக்கை உள்ள கூட்டங்களில் பேசி விட்டும், சுற்றுலாப் போக்கு வரத்து உந்து ஒன்றில் ஏறிச் சில நாடுகளைச் சுற்றிப் பார்த்து விட்டும் வந்ததற்கு எத்தனை ஆர்ப்பாட்டங்கள் இங்கு நடந்தன, தெரியுமா? எதிர்க்கட்சித் தலைவரின் வானூர்தி நிலைய வரவேற்பு! மற்றும் கட்சிக் காரர்களின் அமைக்கப்பட்ட வரவேற்பு ஆர்ப்பாட்டங்கள்! பாராட்டுகள்! பரிசளிப்புகள்! பக்கம் பக்கமாகத் தம் கட்சியிதழில் செய்திகள்! படங்கள்! அதில் செய்திகள் வந்தன 'நானும் அவர் பேசிய கூட்டங்களில் கலந்து' கொண்டேனாம்! அவ்வளவு - தான் நம்மைப்பற்றிய செய்தி!

அவர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் ஐந்தில் மூன்று நம் உ.த.மு.க. பிரான்சுக்கிளை அமைத்த கூட்டங்கள்! அழைத்தவர்கள் நம் இயக்க அன்பர்கள்! வந்தது தங்கள் கட்சிப் பணங்களோ, கைப் பணங்களோ - அவற்றைச் - செலவிட்டுக் கொண்டு! கூட்டத்தில் பேசியது இவர் அரை மணி நேரம் என்றால் நான் ஒன்றரை மணி நேரம்! ஒருமாதச் சுற்றுச் செலவில் ஐந்து நாடுகளில் ஏறத்தாழப் பத்தாயிரம் கற்கள் வானூர்தியிலும், தொடர் வண்டி வழியும், கப்பல் வழியிம், மகிழுந்து வழியும் ஓய்வொழிவின்றிச் சுற்றிப் ஆயிரக் கணக்கான தமிழர்களைச் சந்தித்து, மொத்தம் இருபத்து நான்கு, நிகழ்ச்சிகள் - அறுபத்தைந்து மணி நேரம் - (பட்டியல் வேறு பக்கத்தில் அச்சாகியுள்ளது பார்க்கவும்.) பேசி விட்டு வந்துள்ள என்னைத் தங்கள் கட்சியிதழ் என்பதால், 'நானும் கலந்து கொண்டேன்' - என்று போடுகிறார்கள் என்றால், நம் தலைவர்களின் கரவான நடவடிக்கைகளையும், செய்தித்தாள்களின் விலைமகள் தனங்களையும் பார்த்துக் கொள்ளுங்களேன்! இனி, நம் இயக்கத்தின் பெயர்களைஜயும் சரிவரப் போட்டால் எங்கு விளம்பரம் ஆகி விடப் போகிறதோ என்று, உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், பிரான்சுக்கிளை என்று சொல்ல விரும்பாமல், 'உலகத் தமிழர் கழகம்' - 'தமிழர் முன்னேற்றக் கழகம், - 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்றும் ஓரிரண்டு இடங்களில், 'பிரான்சில் உள்ள பெருமக்கள் சிலர்' - என்றும் குறித்திருக்கிறார்களே, என்ன செய்வது? இவற்றையெல்லாம் செய்தித் தாள்களுக்கு விளக்கமாக எழுதி விடுப்பதாக நம் பிரான்சு இயக்க அன்பர்கள் இசைவு கேட்டார்கள். நான் தான் 'வேண்டாம்' என்று தவிர்த்து விட்டேன்!

அடுத்து, இன்னோர் இழிவைப் பாருங்கள்! ஏதோ, தம் கைக்காசைப் போட்டுக் கொண்டு, அவர்கள் யாரும் அழைக்காமல், தாமே இங்கிலாந்தில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் மட்டுமே கலந்துகொள்ள வந்திருந்த பேர்(ஆசை)ஆசிரியர் ஒருவரை, போனால் போகிறது - இவ்வளவு தொலைவு வந்துவிட்டுத் தம் மனைவி நகைகளையெல்லாம் அடகு வைத்துக் கடன் வாங்கிக் கொண்டு வந்துவிட்டாரே என்பதற்காக நான் ஒருவன் - மற்ற நாடுகளுக்கும் என்னோடு — என்னை அழைத்தவர்களுக்கு இரட்டைச் செலவு வைத்துக்கொண்டு அழைத்துப் போக— அவர் ஏதோ, தாம் ஒருவரே அழைக்கப்பட்டுப் போனது போலவும், ஐரோப்பிய நாடுகளில் போய் மன்றங்களிலும், கழகங்களிலும், ஈழத் தமிழர் கூட்டங்களிலும்'வெட்டிமுறித்து'விட்டு வந்தது போலச் 'செந்தமிழ்ச் செல்வி', இதழில் செய்தி வெளியிட்டுள்ளாரே பார்த்தீர்களா? இதை எங்கே போய்ச் சொல்லி முட்டிக்கொள்வது? பொருளாசையும், புகழ்வெறியும், பொறாமை வேக்காடும் யாரை விட்டன. (இப்படித்தான் போகும் இடங்களுக்கெல்லாம் எனக்குத் துணையாகவும் — அவரின் ஒருவகைத் தமிழ்ப்பற்றின் காரணமாகவும் - முன்பு ஒருவரை-அழைத்துப் போய் வந்து கொண்டு இருந்தேன். அதனைத் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு பல வகையிலும் இடக்கராக நடந்தார் ஒருவர். அதனால் அவரைத் தவிர்த்தேன். அதனால் இப்பொழுது பல வகையிலும் என்னைப் பற்றி இழித்தும் பழித்தும் கூறிக்கொண்டு-பலவாறு தொல்லை கொடுத்து வருகிறார்.) தமிழ்பற்றாலும் தமிழினப் பற்றாலும் அன்பாலும் இரக்கத்தாலும் இப்படிப் பல தவறுகளைச் செய்து விடுகின்றேன். 'நன்றாற்றலுள்ளும் தவறுண்டு; அவரவர் பண்பறிந்து ஆற்றாக் கடை' என்னும் குறளுரையை இப்பொழுது மிக மிகத் தெளிவாக உணர்ந்து கொண்டு வருகிறேன்- நடப்பது நடக்கட்டும்!

அக்காலத்தது என்றாலும், எக்காலத்துக்கும் பொருந்தி வரும்படி சொல்லிவிட்டுப் போன ஓர் உண்மை மொழி உங்கட்குத் தெரியுந்தானே!

"பொய்யுடை ஒருவன் சொல்வன்மையினால், (அஃதாவது, இக்காலத்தில், செய்தித்தாள் - விளம்பர - வன்மையினால்) மெய் போலும்மே! மெய் போலும்மே!"

'மெய்யுடை ஒருவன் சொல மாட்டாமையால் (அஃதாவது இக்காலத்தில், செய்தித்தாள் - விளம்பரம் - இன்மையால்) பொய் போலும்மே! பொய் போலும்மே!"

— இவ்வரிகள் எத்துணை உண்மையானவை!

— என்ன செய்வது? பொறுத்துக் கொண்டு வருகிறேன். நீங்களும் பொறுத்திருந்து பாருங்கள்! காலம் ஒருநாள் உணர்த்தாமலா போய்விடும்? இறுதியில் உண்மை தான் வெல்லும்! ஆனால் அதற்குள் அஃது எத்தனை இடர்ப்பாடுகளை உண்டாக்கி விடுகிறது என்பதைத் தெள்ளத் தெளிய உணர்ந்து வருகிறேன்! அப்பப்பா! இடையில் தான் எத்தனைச் சோர்வுகள்! எத்தனைத் துன்பங்கள்! அனைத்துக்கும் ஒரே தீர்வு தான் உண்டு! தமிழ் நிலத்தை வலுப்படுத்துவது! முறையாக வரச் செய்வது! அதில் தீவிரமாகக் கவனம் செலுத்தி வருகிறேன். கூடிய விரைவில் நிலைகள் சரியாகும்! இறுதியில் நேர்மையும் உண்மையும் விளங்கித் தோன்றுத்தாமே!

காரிருளால் சூரியன்தான் மறைவது துண்டோ?
கறைச்சேற்றால் தாமரையின் வாசம் போமோ?
பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மை யாமோ?
பிறர்சூழ்ச்சி செந்தமிழை அழிப்பதுண்டா?

— பாவேந்தர்

இப்பொழுதைக்கு இவ்வளவு போதும்! தேவையானால் பின்னர் விரிவாக எழுதுவேன்! அன்புள்ள,
பெருஞ்சித்திரன்.

கொள்ளை! கொள்ளை!

கோடி கோடியாகக் காசு சேர்த்து வைத்துக் கொண்டிருக்கும் நம் தமிழர் தலைவர்கள், அடிக்கடி மக்களிடம் மாநாடு என்றும், தேர்தல் என்றும், வழக்குகள் என்றும், இன்னும் பலவகையாலும் நன்கொடை என்ற பெயரில் பொருள் திரட்டி மேலும் மேலும் முதலாளிகளாகவே ஆகித் தங்களையும் தங்கள் குடும்பங்களையும் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழினம் விடுதலை பெற்றுத் தலை நிமிர்ந்து, முழு உரிமையுடன் பொதுவுடைமைக் குமுகாயமாகத் தன்னை நிலைநிறுத்திக்கொள்ள வேண்டுமென்றால், முதன் முதலில் இந்தக் கட்சி முதலாளிகளிடமிருந்து விடுதலை பெற்றாக வேண்டும்.

— ஐரோப்பியச் சொற்பொழிவுகளில் பாவலரேறு

கோரிக்கைகளால் பயனில்லை; போராட்டமே வேண்டும்!

சிங்கள வெறியன் செயவர்த்தன் ஈழத்தமிழரை வாட்டி வதைத்துக் கொடுந்துன்பப் படுத்துவதையும், ஈவிரக்கமின்றிக் கொலை புரிவதையும் எண்ணும் போது நெஞ்சம் பதைக்கிறது. கண்கள் குளமாகின்றன. துயர உணர்வைத் தாங்காது எனது நெஞ்சம் வெடித்து விடும் போலிருக்கிறது. இரக்கமற்ற அந்தக் கொடியன் ஈழத்தமிழரை அடியோடு அழிக்கவே திட்டமிட்டுச் செயல் படுவதாகவே என்மனம் நினைக்கிறது. அவன் செயல்கள் என் நினைப்பைச் சரியென்றே காட்டுகின்றன.

மற்றும் இந்திரா அம்மையாரும் அவன் செயலுக்கு உடந்தை என்றே எண்ணவேண்டியிருக்கிறது. அம்மையார் கச்சத் தீவைச் சிங்களத்திற்குக் கொடை அளித்துச் சிங்களவரோடு உறவு கொண்டதையும், கச்சத் தீவுப் பறி கொடுப்புக்குப் பின் தான் ஈழ மக்களுக்குத் துன்பங்கள், தொல்லைகள், அழிவுகள் அதிகரித்து வருவதையும், அண்மையில் அந்தப் படுகரிசன் செயவர்த்தன் இந்தியா வந்து போன பின் தான் மீண்டும் கொடுமைகள் செய்யத் தொடங்கியிருப்பதையும் ஆழமாக எண்ணிப் பார்க்கும் போது நான் நினைத்தது சரியென்றே படுகிறது.

மேலும் அம்மையார் அவர்கள் ஈழத்திற்காக நாம் குரல் கொடுத்த போதெல்லாம், இஃது இலங்கையின் உள்நாட்டுச் சிக்கல் என்று சாக்குப் போக்குக் கூறித் தட்டிக் கழித்ததையும், இந்தியாவிலிருந்து இலங்கை செல்ல எல்லைக் கடவு தர வேண்டாமெனத் திடீர்க் கட்டளை பிறப்பித்திருப்பதையும் இலங்கைக் கலவரத்தில் இந்தியர்கள் தொடர்பிருப்பதே இந்தத் திடீர்க் கட்டளைக்குக் கரணியம் எனக் கூறியிருப்பதையும் பற்றிச் சித்திக்குப் போது ஈழத்தமிழின அழிப்புச் செயலில் சிங்கள ஆரியத்திற்கும் இந்திய ஆரியத்திற்கும் கமுக்கமான உடன்பாடு இருக்க வேண்டும் என்று உறுதியாக எண்ண வேண்டியிருக்கிறது.

எனவே ஈழத்தமிழரைப் பற்றிய சிக்கலில் அனைத்துக் கட்சிகளின் கண்டனக் கூட்டங்களும், தீர்மானங்களும், பேரணிகளும் மட்டும் போதா. இவற்றிற்கெல்லாம் அம்மையார் அசைய மாட்டார். ஆகவே ஒருமாபெரும் போராட்டத்தையே துவக்கியாக வேண்டும். இலக்கக் கணக்கில் தொண்டர்கள் சிறையை நிரப்ப வேண்டும். எப்படியும் அம்மையாரை இதில் தலையிட வைத்துச் செயவர்த்தன் செயலுக்கு முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும். போராட்டமும் உடனே தொடங்கியாக வேண்டும். காலந்தாழ்த்தினால் அழிவு அதிகப்படும். ஆகவே உடனே போராட்டம் தொடங்க ஆவன செய்ய வேண்டும்.

பாவலர். சின்னப்பனார் கொம்மக் கோவில்.

இந்த நூலைப் படித்துப் பாருங்கள்!

குணாவின் 'தமிழ்த் தேசியத்திற்குப் பொருந்திய பொதுவுடைமை'

விடுதலைப் போராளிகள் கொள்கையில் தெளிவும் வலிவும் பெற்றிருத்தல் வேண்டும். வெறும் உணர்ச்சி மீதான பற்றுகள் காலப்போக்கில் தளர்ந்து கரைந்து மறைந்து விடும். கொள்கை வலிவிற்குப் பட்டறிவுடன் பரந்துபட்ட நூலறிவும் தேவை. அறிவில் தெளிவின்மை செயலுக்கு வழி வகுக்காது. இவ்வகையில் அறிஞர் குணாவின் நூல்கள் தமிழக விடுதலைக் கொள்கையாளருக்கு 'நியூட்ரான்' குண்டுகளாகும். குணா தமிழுக்குப் புதிய வீச்சையும் வளர்நிலையையும் தந்தவர். மார்க்சியத் தமிழுக்குத் தந்தையும் தாயும் அவரே. 'இயங்கியல்', 'சாதியத்தின் தோற்றம்', 'தமிழர் மெய்யியல்' ஆகிய அவரின் அரிய ஆய்வு நூல்கள் ஏற்கனவே 'தென்மொழி' வழி அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. இவை மார்க்சியத்தை முறையாக அறிமுகப்படுத்துவதோடு, உரிமைப் பொதுமைத் தமிழகத்திற்கான போர் விரகையும் சுட்டிக் காட்டுகின்றன.

தமிழக ஆய்வரண் வெளியிட்டுள்ள குணாவின் 'தமிழ்த் தேசியத்திற்குப் பொருந்திய பொதுவுடைமை' தமிழ்நில விடுதலைக் கொள்கைக்கு மேலும் அரண் சேர்க்கும் மற்றொரு நூலாகும். முப்பத்து நான்கு பக்கங்களேயுள்ள இம்மிகச் சிறிய நூலில் தமிழக வரலாற்றுடன் மார்க்சிய மெய்யறிவும் விளக்கப்படுகிறது. மார்க்சிய மெய்யறிவை இவ்வளவு மணிச் சுருக்கமாகவும், அதே சமையத்தில ஆழமான தெளிவுடனும் தமிழில் இதுவரை யாருமே தரவில்லை.

நூலின் முற்பகுதியில், மக்கள் மாக்களாகவும், மாக்கள் மக்களாகவும் மாறும் நாகரிக நிலையில் தொடங்கப்பெறும் தமிழக வரலாறு, அரசுகளின் தோற்றம், சாதிகளின் தோற்றம் பார்ப்பனிய ஆளுமை, ஆளுமை எதிர்ப்புகள் என முறையாக விளக்கப் படுகிறது. இப்பகுதி கீழ்க் காணும் மூத்தாய்ப்போடு முடிவடைகிறது:

"முடிவிலாக் கொள்ளைப் போர்கள் வருத்தித் தமிழரசுகளை உட்பகையால் கொல்ல, புறப் பகைகள் தமிழகத்தை வென்றனர். அதனுடைய அண்மைக் காலப் புறப்பகைகளில் ஒன்றே, வெள்ளையர் ஆட்சியும், அது தோற்றுவித்த 'இந்தியம்' என்னும் புதிய பார்ப்பனியச் சூழ்ச்சிக் கோட்பாடும்"

நூலின் நடுப்பகுதி மார்க்சிய மெய்யறிவு வரலாற்றைத் தருகிறது. மார்க்சிய மெய்யியலின் அனைத்துக் கூறுகளும் இங்குத் தெளிவாக விளக்கப் படுகின்றன. தமிழக மெய்யியலே மார்க்சியமாக மலர்ந்த வரலாறும் வலியுறுத்த படுகிறது. 'மார்க்சியம் வெறும் பொருளியல் இலக்கணம் மட்டுமன்று; அது மாந்தனை நிறைவுபடுத்தித் தன்னுரிமை பெற்ற புது மாந்தனை உருவாக்கும் பண்பாட்டு இயக்கம்' என்பது தெளிவாக்கப்படுகிறது. 'தமிழின் மொழி இலக்கணத்தையும், மரபுகளையும் கொன்று, உதிரிப்போக்கில், சோற்றால் அடித்த பிண்டங்கள் போல பேசுவது மார்க்சியத்திற்கு முற்றிலும் புறம்பானது' என்பதும் சுட்டப்படுகிறது.

தமிழகத்திற்கான பொதுவுடைமையைச் சுட்டும் நூலின் கடைசிப்பகுதி, 'பொதுவுடைமைப் பார்வை இல்லாத விடுதலை குருட்டுத்தனமாகவேயிருக்கும்' என்று முழங்குகிறது. பொதுவுடைமைக் கொள்கை தமிழக மக்களிடம் ஒன்றுவதற்கான காரணம், 'ஓரிந்தியக் கோட்பாடே' என்பது விளக்கப்பட்டுத் தமிழகப் புரட்சி வலியுறுத்தப் படுகிறது. தில்லித் துணை 'வல்லரசின்' துணையோடு, பன்னாட்டுக் குழுமங்கள் தமிழகத்தைச் சுரண்டும் கொடுமை சான்றுகளோடு நிறுவப் படுகிறது. (பொது) உடைமைக் கட்சிகளின் உண்மை உருவம் அம்மணப்படுத்தப்படுகிறது.

'பிறநாட்டுப் பணத்தை நம்பிக் கட்சி நடத்துவதால் புரட்சி விளையாது. ...தமிழக மக்களை நம்பி வல்லரசு எதிர்ப்பு, நிலக்கிழமை எதிர்ப்புக் கடமைகளை ஆற்றுவதே தமிழகப் புரட்சிக்கும் அதன் வெற்றிக்கும் வழி கோலும்'

குணா சுட்டும் கடமைகளை ஆற்றித் தமிழகப் புரட்சிக்கும் அதன் வெற்றிக்கும் வழி கோல, 'தமிழ்த் தேசியத்திற்குப் பொருந்திய பொதுவுடைமை' என்ற இச்சிறு நூலை ஆழ்ந்து கற்பதோடு, அவரின் மற்ற நூல்களையும் அன்பர்கள் பயின்றிட வேண்டும் அவற்றைப் பரப்பிடவும் வேண்டும்.

நூல் கிடைக்கும் இடம்,
தமிழக ஆய்வரண்,
32. கத்தூரிபாய் குறுக்குத் தெரு,
பெங்களூர்-560 001.

நூலின் விலை உருபா ஒன்று மட்டுமே.

—வேலிறையன்.

உரைப்பா

கூண்டுப் பறவைகளின் கொடுஞ்சாவு!

—மணிமொழியன்.

இலங்கை யெனும் நாடு இன்று
களங்கம் சுமக்கிறது . . . !
கூண்டுக்கிளிகளைக்
கூண்டுக்குள்ளேயே குத்திக்குதறிவிட்டு
இலங்கையெனும் நாடு இன்று
களங்கம் சுமக்கிறது . . .

சிறையும் தளையுமாய்ச்
சிறகொடித்துப்போட்டுவிட்டு
எங்கள் செந்தமிழ்ச் சிட்டுகளை
கொடுமைக்கையால் அறைந்து
கொத்தாகத் தேய்த்துவிட்டு
இலங்கையெனும் நாடு இன்று
களங்கம் சுமக்கிறது . . . !

சிறைக்கோட்டச் சுவர்களுக்குள்
சிங்கள வெறியரை முடுக்கி விட்டுக்
கொள்கைவழி வீறுகொண்ட
எங்கள் கொழுந்துகளை — குஞ்சுகளை —
குறுக்குவழி சென்று,
கொடுமையின் எல்லையில் நின்று,
குருதி கொட்டத்தாக்கி,
அவர்பட்ட உயிர் வாதையில் கொக்கரித்துத்
துடிப்பு ஓயும் வரை - அவர் சாகும் வரை
பார்த்திருந்த
இலங்கை யெனும் நாடு இன்று
களங்கம் சுமக்கிறது . . . !

ஐயா, அவர்களும் மாந்தர் தாம்-
அவர்களை ஈன்றவரும் அன்னையர் தாம்.
அதுவும் தமிழன்னையர் ஐயா!
கருக்கொண்ட நாள் தொட்டுக்
கனவுகளில் வாழ்ந்து
ஐயிரு திங்கள் பட்ட துன்பமெலாம் தொலைய
ஈன்ற பொழுது பெரிதுவந்த
அந்த அன்னையரின் வயிறெரிய
பிள்ளை களைக் கொன்று விட்டு
இலங்கையெனும் நாடு இன்று
களங்கம் சுமக்கிறது . . . !

உச்சி மோந்து உள்ளம் செம்மாந்து
தளர் நடைகண்டு தாயெனத் தருக்கி
தோளுக்கு மேல் வளர்ந்து தொண்டுக்கு முந்தி
கொள்கைக் குரிசில்களாய்
மானம் காக்கும் மறவர்களாய்
ஈகம் என்று தம்மையே ஈவதற்கு வந்தவரை
அந்த இன்னுயிர்ச் செல்வங்களை நினைந்து
ஈன்ற பொழுதினும் பெரிதுவந்த
அந்தத் தமிழன்னையர் உளமதுடிக்க
மூப்பத்தி ஏழு முத்தான சொத்துகளை அழித்து

இலங்கையெனும் நாடு இன்று
களங்கம் சுமக்கிறது . . . !
ஒளிரத் தொடங்கும் போதே
அந்த மணிவிளக்குகளை அணைத்துவிட்டு
மலரத் தொடங்கும் போதே
அந்த எழில் அரும்புகளைக் கசக்கி விட்டு,
இலங்கையெனும் நாடு இன்று
களங்கம் சுமக்கிறது

ஈழத்தின் இளந்தமிழ்ச் செல்வர்களே!
ஈகத்தின் விளக்கங்களே!
நேற்றுவரை வாழ்ந்து இத்துணை விரைவில்
இன்றில்லை என்று இல்லாமல் போய்விட்ட
எங்கள் தங்கங்களே!
இந்த வெறுமையே ஒரு செறிவாக —
ஒரு சுமையாகச் சுழன்று சூழ்ந்து
உளப்பரப்பையே உலுக்கி எடுக்கிறதே . . .
எப்படி ஐயா செய்தார்கள்? ஐயோ,

எப்படிச் செய்தார்கள்?
அடித்தடித்துக் கொன்றாரோ?
அலறவைத்துப் பார்த்தாரோ?
சுட்டுச் சாய்த்தரோ?சுவரில் அறைந்தாரோ?
மார்புக் கூட்டைப் பிளந்து
அந்தத் தமிழ்த் தணல் மணக்கும் நெஞ்சங்களைத்
தேடிப் பார்த்தாரோ?
வெட்கமையா, வெட்கம்!
கைகளில் விலங்கிருக்க
கண்களில் வியப்பும் வெருட்சியும் சுழலச்
சிறைக்குள்ளே செயலற்றிருக்கையில்
திடுமெனப் பாய்ந்து பற்றிக்
கொன்று முடித்துக் குருதிப்பசியாறி

இலங்கை யெனும் நாடு இன்று
களங்கம் சுமக்கிறது . . . !

O

உ. த. மு. க. பொறுப்பாளரின் அயல்நாட்டுச் செலவு!

ஈரோடை நிலா. வேங்கடவன் (குன்னத்தூர்-ச. தம்பி) வெளிநாடு (சவுதி அரேபியா) செல்லும் நினைவாகத் 'தமிழ்நிலத்திற்கு உருபா, ஐம்பது(50/-) நன்கொடையாகத் தந்துள்ளார்.

உயர்திரு. நிலா. வேங்கடவன், பெயரும் புகழும் சீரும் சிறப்பும் பெற்றுத் தம் பணிமுடித்து, நலமுடன் தாயகம் திரும்ப வேண்டும் என்று, 'தமிழ்நிலம்' நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது!

அமைச்சர்

பெரியாரின் இடத்தை நிரப்ப உரிய தலைவர் இல்லையே - ஏன்?

('சிந்தனையாளன்' - தடையும் விடையும் பகுதி)

0. 'மார்க்சுக்குப் பிறகு அவர் பணியைத் தொடர எங்கல்சு இருந்தார். இலெனின் இடத்தைப் பெரிதளவு இசுடாலின நிரப்பினர். ஆனால் பெரியாரின் இடத்தை நிரப்ப உரிய தலைவர் இல்லாமல் போனது தமிழகத்தின் பெரிய துயரமாகும் - என 1-10-83 சிந்தனையாளன் கட்டுரையில் த.கி. குறிப்பிட்டுள்ளார். அந்தத் துயரத்துக்குக் காரணம் என்ன?

0. விடை :
1. தமிழர்களின் நன்றிகொன்ற தன்மை.
2. தமிழர்களுக்கு உண்மையான இனஉணர்வு,மொழி உணர்வு, மான உணர்வு இன்மை.
3. சி.என். அண்ணாத்துரையின் கீழறுப்புப் பணி.
4. மணியம்மையார் குழுவின் தான்தோன்றித் தனம்.
5. 'ஆன்மீக்' - அரசியல் - செய்தியிதழ் பத்திரிக்கை)ப் பார்ப்பனரின் கட்டுப்பாடான இருட்டடிப்பு.
6. பார்ப்பனரின் திட்மிட்ட எதிர்ப்புப் பணிகள்.
7. பெரியார் தம் இயக்கத்தை அறிவு முழுமையாகத் திட்டமிட்டு நடத்தாமையும் இயக்கத்துக்கு முறையான பாதுகாப்பைச் செய்யத் தவறியமையும் - சில காரணங்கள்.

விரிக்கிற் பெருகும்; வேறு சமையம் விரிவாக வரும்.

— நன்றி ... 'சிந்தனையாளன்' — 12-11-83.

திரு.வி.க. நூற்றாண்டு விழா

திருவாரூர் இயற்றமிழ்ப் பயிற்றகம் சென்னை பாவாணர் நூலகக் கட்டிடத்தில் 28-8-83 அன்று திரு.வி.க. நூற்றாண்டு விழாக் கொண்டாடியது. காலை 10 மணியளவில் மகளிர் அரங்கம் தொடங்கியது 'குத்தூசி'யின்மகள்,மருத்துவர் உருசியா தலைமையேற்றார். திரு.வி.க.(அண்ணன்) பெயர்த்தி. சிவயோக வல்லி மகள வாழ்த்திசைக்க, மற்றொரு மகள் வயிற்றுப் பெயர்த்தி பேராசிரியை. வளசாட்சி திரு வி.க. தனி வாழ்வை எடுத்துரைத்தார். அ. மங்கை அரசு தொழிலாளர் நலன் பற்றிப் புது நடையில் பொழிந்தார்.

முற்பகல் 11 மணிக்கு தொழிலாளர் அரங்கம் தொடங்கியது. தலைமையேற்ற பாவலரேறு பெருஞ்சித்திரனார் தனித்தமிழ்ப் பற்றுடைய பயிற்றகம் திரு.வி.க. மேல் இத்துணைப்பற்றுக் கொண்டது ஏன் என்று கேட்ட பாவாணர்க்குப் பண்பு பற்றிய பற்று என்று விடையிறுத்ததைப் புகன்று பயிற்றகத்தின் இலக்கண நோக்கைப் பாராட்டினார். நாகை முருகேசனார் மா. சிங்காரவேலர் திரு.வி.க.வோடு கொண்டிருந்த தொடர்பு பற்றித் தொடுத்துரைத்தார்.

பிற்பகல் 5 மணிக்கு நூல் வெளியீட்டரங்கு இலக்கணப்புலவர் த.ச.தமிழன் தலைமையில் தொடங்கியது. நீடாமங்கலம் வளர்தமிழ்ப் பாவலர் மருத்துவர் மறையரசன் இயற்றிய 'திரு.வி.க. கலம்பகம்' பழமையிற் புதுமையாகவும், மயிலாடுதுறை சி.பொற்செல்வன் எழுதிய 'திரை ஓவியங்கள்—ஒரு திறனாய்வு' முதல்நிலைப் புதுமையாகவும் வெளியிடப்பட்டன. கலம்பகத்தின் அம்மானைப் பாட்டைப் பாராட்டி அழகிய குரலால் வாழ்த்துரைத்து மொழிபெயர்ப்புத் துறை இயக்குநர் வெளியிட, செ.சொ.பி. அகரமுதலித் திட்ட இயக்குநர் மதிவாணன் ஆய்வுரையோடு ஏற்றார்.

திறனாய்வு நூலை வெளியிட்ட கதை உரையாடல் நெறியாளர் திரு.கிருட்டிணா படத்துறைக்கட்டுப்பாடுகளைக் கூறிக்கறுப்புப்பணத்தோடு வந்து கருத்துரிமையோடு விட்டுவிட்டால் ஒரு படம் உயர்படமாக எடுக்கலாம் என்றுரைத்தார். தலைவர் அடைவுரையில் திரு வி.க. பற்றிக் கப்பலோட்டிய தமிழனைத் தாண்டிக் காந்தி அளவிற்குத் தூண்டிப் படமெடுங்கள் என்று கூறினார். நூலை ஏற்ற அணித்துரைப் பாவலர் சுரதா தற்பாராட்டுச்செய்திகளைக் கூறினாலும் இறப்புணர்ச்சியால் 'நிலத்திலும் நீரில் சாவேன்' என்று கூறினார். தலைவர், அவர் தனித்தன்மையைத்தான் 'அணி நூலில்' பாராட்டப் போவதால் அவர் மனச்சிக்கல் அறுக என்று வேண்டினார். கலம்பகத்தை நிறைப் பாராட்டாக ஆறுமுகனாரும், அ.ப. பாலையனும் உரையாற்றினர். கலைக் களஞ்சியக் காவலர் சிறுவை மோகனசுந்தரமும், விழா ஏற்பாட்டாளர் திருவாணனின் வழிகாட்டிப் பேராசிரியர் செயப்பிரகாசமும், திரு.வி.க. பணியாற்றிய வெசிலி மேனிலைப் பள்ளித் தமிழாசிரியர் நச்சினார்க்கினியனும் வாழ்த்துரைத்தனர்.

அயலகப் பிரஞ்சுப்பகுதிகளில் வாழும் தமிழர்கள்!

இர. ந. வீரப்பன், தலைவர், உ.த ப. இயக்கம்

உலகின் 36 நாடுகளில்—பிரஞ்சுக் குடியேற்றப் பகுதிகளில் இப்போது 27 நாடுகளில் மட்டும் தமிழர்கள் வாழுகின்றனர். இந்த நாடுகளிலிருந்து ஒரு நூற்றூண்டுக்கு முன் புதுவையில் பிரஞ்சுக்காரர்கள் ஆண்டபோது அவர்களின் குடியேற்ற நாடுகளில் தொழிலாளர்களாகக் கொண்டு செல்லப்பட்டனர்.

பிரஞ்சுப் பகுதி நாடுகளான: மொரிசியசு, ரியூனியன், சிசெல்சு, மார்தினிக், குவாதலூப், திரினிடாட், சூரிநாம் (பிரஞ்சுக்கயானு), நியூகலிடோனியா, தாகித்த், டொமினிக், பிரான்சு, மற்றும் சில தூர கிழக்கு மேற்கிந்தியத்தீவுகள் இதில் அடங்கும்.

ஆப்பிரிக்கப் பிரஞ்சுப்பகுதிகள்:- அல்சிரியா, டூசினு, மொராக்கோ, சிபுதி, நைசிரியா, பிரஞ்சிக்கினி, காமரூன், ஐவரிகோசுட், காங்கோ, காபோன், செனேகால், ஆப்பிரிக்கக் குடியரசு, நடுவம் சேட், மாலி முதலிய நாடுகள். பிரஞ்சுக் கனடா, மற்றும் லாவோசு, கம்பொடியா, வியட்நாம் முதலிய நாடுகளுடன் வேறு சிலவும் அடங்கும்.

இவ்வாறு போனவர்களுக்கு, பிரஞ்சுமொழி மட்டுமே தெரியும் மூன்று நான்கு தலைமுறை ஆனதால், இவர்கள் பல இலக்கம் பேராக ஆகிவிட்டனர். தமிழ், பேசவும் எழுதவும் தெரியவில்லை என்பது மிகமிகக் குறிப்பிடத்தக்கது.

குறிப்பாகப் புதுவை மாநிலத்திலிருந்தும், காரைக்கால், ஏனும், கடலூர், நாகப்பட்டினம், சென்னை முதலிய பகுதிகளிலிருந்தும் சென்ற தமிழர் குமுகாயம் இன்று பல இலக்கமாகி விட்டது. தொழில் துறைகளிலும், பொருளியலிலும் முன்னேறிய இவர்கள் தமிழ்ப்பண்பாட்டில் தாழ்ந்து, அதனை இழந்துவிட்டு வாழ்கிறார்கள்; எனவே, புதுவை அரசும், மக்களும இப்போது இப்படிப் போனவர்களுக்குக் கை கொடுக்க வேண்டிய விழைவும் தேவையும் ஏற்பட்டுள்ளன.

இது தொடர்பாக உ. த. ப. இயக்கம் புதுவை அரசிடம் வழங்கிய ஒரு திட்டம் வருமாறு:-

1. புதுவையில் பிரஞ்சு—தமிழ் உறவு நடுவம் ஒன்றைப் புதுவை அரசுப் பொறுப்பில் அமைப்பது.

2. பிரஞ்சு மூலம் தமிழ் கற்பிக்கின்ற ஆசிரியர்களையும் அதற்கென்று எழுதப்பட்ட பாடநூல்களையும் அந்நாடுகளுக்கு அனுப்புவது. பிரஞ்சு—தமிழ் அரிச்சுவடியை எழுதச் செய்வது.

3. தமிழ்ப்பண்பாட்டை விளக்கும் அறிஞர்களையும், கலைக்குழுவையும் அந்நாடுகளுக்கு அனுப்புவது.

4. தமிழ் நூல்களையும், பண்பாட்டுக் கலைப் பொருட்களையும் அனுப்பி வைப்பது.

இப்போது புதுச்சேரியில் அரசு ஆதரவுடன் இயங்கிவரும் 'அனைத்துலகத் திராவிட மொழியியல் ஆய்வுத்துறை' அமைப்பைப் போன்ற, அனைத்துலகப் பிரஞ்சுத் தமிழ் உறவு நடுவத்தை அரசே ஏற்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோளைத் தலைமையக இயக்கம் முன்பே புதுவை அரசிடம் வழங்கியிருக்கிறது.

புதுவையிலிருந்து உலகம் முழுதும் பரந்து வாழும் தமிழர்களை ஒருங்கிணைக்கவும், அவர்களிடம் மங்கி மாய்ந்துவிட்ட—அல்லது மங்கி மறைந்துவரும் தமிழ்மொழி—தமிழ்ப்பண்பாட்டு உணர்வுகளைப் புதுப்பிக்கவும் புதுவை அரசு கொள்கை மூலம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

புதுவையில் பல்கலைக் கழகம் அமைக்க இந்திய நடுவண் அரசு ஒப்புக்கொண்டுள்ளது பற்றியும் அதன் மூலம் எவ்வாறு இத்திட்டத்தைச் செயல்படுத்துவது என ஆராயுமாறும் நாங்கள் வேண்டி இருக்கிறோம்.

தொடர்ந்து பிரஞ்சுமொழியை மட்டும் படித்தும் எழுதியும் பேசியும் குடும்பம் குடும்பமாக வாழும் வெளிநாட்டுத் தமிழர்கள் பிரஞ்சுப் பகுதியாகவே வாழ்வதால், இதனைப் பிரஞ்சு அரசு மூலம் செயல்படுத்தவும், இக் கோரிக்கையை அந்தந்த நாட்டுத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்ளவும், இவர்கள் மூலம் பாரிசில் அரசியல் வழியாகக் கேட்டுப் பெறவும் பாரிசு தலைநகரில் ஒரு நடுவம் ஏற்படுத்தவும் இயக்கம் சிந்தித்துத் திட்டமிட்டு வருகிறது. இதுவே மிகச் சிறந்த மற்றொரு வழி என நாங்கள் உணர்கிறோம்.

பிரெஞ்சுக் குடியேற்றநாடுகளில் குடிவாழ்வு நடத்திய தமிழ்க்குடும்பங்கள் புதுவைக்குத் திரும்பவில்லை. இரண்டாம் போருக்குப் பின் இவர்களுக்குக் குடியுரிமை கிடைத்தது.

18-ஆம் நூற்றூண்டில் ஆப்பிரிக்கர்களை மட்டும் கொண்டு போய் வடஅமெரிக்காவில் அடிமைகளாக விற்கப்பட்டதுதான் பெரிய வரலாறு எனக் கற்பிக்கப்பட்டு வருகிறது. இதில் சற்று மாறுதலுடன் புதுவைத் தமிழர்களையும் கொத்தடிமைகளாகக் கொண்டு போய்ப் பலநாடுகளிலும், தொலை தூரத்தீவுகளிலும் விற்கப்பட்டுவிட்ட வரலாற்றுச் சான்றுகளை மறைத்து விட்டனர். பழைய பிரஞ்சுக் குடியேற்ற வரலாறுகளைப் படித்துப்பார்க்கும் காலம் வரும். அப்போது பல உண்மைகள் வெளிப்படும்: தமிழர்கள் நூறுண்டுக்குமுன் எத்தகைய அடிமைகளாக்கப்பட்டு அழிக்கப்பட்டனர் என்பதை உலகம் அறிய முடியும்.

1954வரை புதுவை பிரான்சின் ஒரு பகுதியாக விருந்ததுடன் பிரஞ்சும் இங்கு ஆட்சி செலுத்தியது. இதன் மூலம் இப்பகுதியின் சட்டதிட்டப்படி நல்ல பிரஞ்சு கற்றவர்களும், பிரஞ்சுப்படையில் சேர்க்கப்பட்ட ஓரளவு படித்தவர்களும் உலகம் எங்கும் பிரஞ்சுப் பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். பிரஞ்சுப்பட்டாளத்தில் திருமணத்தடையில்லை; புதுவை சம்பளத் திட்டம் போல் மும்மடங்கு சம்பளமும், பிறஎந்துகளும் வாய்ப்புகளும் கிடைத்தன. பிரஞ்சுப் பகுதிகளின் புலநாடுகளுக்குக் குடியேறிய பிரஞ்சுகற்ற தமிழர்கள் பொருளியலிலும் பட்டம், பதவி பெற்றதுடன் தொழில் துறைகளிலும் சிறந்தனர்; தமிழை மட்டும் மறந்து கைவிட்டனர். பாரிசு கல்லூரிகள், பல்கலைக் கழகங்களில் சேர்ந்து படிக்கவும், தொழிலாற்றவும் கொண்டு செல்லப்பட்டவர்களைவிட இவர்கள் அதிகம். உலகில் பிரஞ்சுப் பணியாளர்களுக்கே சம்பளம் மிகுதி: வேலை நேரமும் குறைவு; ஓய்வும் விடுமுறையும் மிகுதி. இலவச சம்பளக் கல்வி வாய்ப்பு, உதவிச் சம்பளவுயர்வு போன்றவை எளிதில் கிடைத்தன. பிரஞ்சுத்தமிழர் பள்ளிகள் கல்லூரிகள், தூதரகங்கள், பட்டாளம், அரசுத்துறைகள் முதலியனவற்றில் வேலை வாய்ப்புரிமைகள் மிகுந்திருக்கின்றன. இவ்வாறு பிரஞ்சாப்பிரிக்க நாடுகளில், சிறப்பு-கரிபியன் மற்றும், ரியூனியன் போன்ற பல பகுதிகள் ஐரோப்பியர்களுடன் பணிகளில் அமர்ந்து கருப்புப் பிரஞ்சு ஐரோப்பியர்களாகவும் பலர் மாறிவிட்டனர். படிப்படியாக இவர்களின் குடும்பமும் அப்படி மாறியது.

ஆனல் தமிழர் சிலர் தமிழை வளர்க்கும் முயற்சியிலீடுபட்டும் பாரிசு, மற்றும் பல நாடுகளில் கழகங்களையும் அமைத்துப் பண்பாட்டு வளர்ச்சிக்கு முயற்சி செய்தும் மாறிபோனவர்களைத் திருத்தும் உழைப்பில் ஏமாறிப் போனார்கள். பாரிசில் இவ்வாறு பல அமைப்புகள் கடந்த காலத்தில் காலமாகிவிட்டன. இப்போதும் உள்ள சில அமைப்புகள் ஆதரவின்றிக் கலைநிகழ்ச்சிகள் நடத்திக் கொண்டிருக்கின்றன. உளவியல் சமயப் பண்பாட்டுவிழாக்களும் மதிப்பற்றுப் போய்விட்டன.

ஒற்றுமை உணர்வற்று, மொழிப்பற்று மாய்ந்து தாய்த்தமிழக மாநிலப் புதுவையின் தாய்வீட்டு வரவேற்பு இல்லாமையால் ஏதிலிகளாகிவிட்ட மருமகள், மகன் கதையாகி விட்டது. அரசியலாளுமை வடவராட்சி இவற்றின் வறட்சியால், உதவியும், ஒத்துழைப்பும் அயலகத்தார் பெறமுடியாத நிலை நாளும் நாளும் வளர்கிறது. புறக்கணிப்பு, தூதரகப் புது ஆளுமை போன்ற வடவர் மேலாண்மை மிகுதியாகியது. வடக்கே இருந்து இந்தியும்—இந்துவும் உலகப்பெரும் படைஎடுப்பாகத் தமிழைத் தலை எடுக்காமல் செய்துவிட்டன; விடுகின்றன. இன்றும் பிரஞ்சுப் பகுதிகள் பலவற்றில் இந்திப் படங்கள் கொடிகட்டிப் பறக்கின்றன; உலகை ஆட்டிப்படைக்கின்றன. தமிழ் தலைநிமிர முடியவில்லை. தமிழ் மரபுகள் அழிக்கப்படுகின்றன

புதுவையில் இப்போது வாழும் தமிழர் தொகையளவு பிரான்சிலும், பிரஞ்சுக் குடியிருப்புகளிலும் கூடுதலாக இருக்கும். இருந்தும் தமிழ்ப் பள்ளிகள் இல்லை. பத்துக்கு மேற்பட்ட ஆப்பிரிக்காவின் பல நாடுகளில் தமிழர் வாழ்ந்தும் செனேகால் (மேற்காப்பிரிக்கா) நாட்டில் மட்டும் தக்கார் என்ற அந்நாட்டுப் பல்கலைக் கழகத்தில் தமிழாய்வுப்பகுதி இயங்கிவருகிறது. இதனை அந்நாட்டு முன்னள் குடியரசுத் தலைவர் செங்கோரால் அமைக்க அறிஞர் பர். க.ப. அறவாணரும், அவரின் துணைவி பேராசிரியை தாயம்மாளும் சில ஆண்டுகள் 1981வரை பணியாற்றித் தமிழ்த் திரியை ஏற்றிப் பண்பாட்டு விளக்கை அமைத்து வந்திருக்கிறார்கள் தமிழர் ஒரு சிலரால் அது காக்கப்படுகிறது. தில்லிப் பேரரசிற்கு இதில் எல்லாம் அக்கறை அறவே இல்லை.

இப்போது ஞாயிற்றுக் கிழமைகளில் பாரிசில் இலண்டனைப் போல தமிழ்ப் பள்ளிகளை அமைக்க, பண்பாட்டு இயக்கத் தலைமைபகுதின் ஆதரவில், பாரிசு தமிழ்க கழகம் முயற்சி செய்துவருகிறது. இதற்குப் புதுவை அரசு மிகமிகப் பயனுள்ள உதவிகளை வழங்குமாறும், பாரிசு ஆட்சியாளரிடம் கோருமாறும் வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது. புதுவை, தமிழக, இந்திய நடுவணரசு முதலியவற்றின் ஆதரவில்லாததால், பாரிசிலுள்ள உலக ஒன்றிப்பு நடுகள் அமைப்பிடம் (யூனெஸ்கோ), நமது பேராளர் மூலம் தந்த திட்டமும் செல்லாக்காசாக ஆகிவிட்டது, ஈண்டு குறிப்பிடத்தக்கது.

புதுவை, முதலிய தமிழக அரசுகள் தன்னதிகாரத்துடன், வெளிநாடுகளில் தத்தம சுற்றுலா பண்பாட்டுப் படங்களையும், சமயக்கேயில் காட்சிகளையும, படநாடாப் பதிவுகள் மூலம் பரப்பச் செய்ய வேண்டும் என்றும் இதற்கு அவற்றிற்குத் தன்னதிகார தலைமைத் தன்மை தேவை என உணர்த்தும் அரசியல் போன்ற கட்டுப்பாடுகள் தடைசெய்கின்றன.

வெளிநாடுகளில் சுற்றுலா புரிந்து விட்டு வந்து அரைகுறைக் கருத்துரைகளை எழுதி விட்டு, இச்சிக்கல்களிலிருந்து தத்தம் கைகளைக் கழுவிக் கொள்வதில் சில அரசியல் வணிகர்கள் செயல்படுகின்றனர்.

பாசுதர் புதுச்சேரி நகரமன்ற இணைப்புப் போல் புதுவை - பாரிசு இணைப்பகம் - தமிழுறவு நடுவம அமைக்க வேண்டும். மொரிசியசு - சென்னை - தமிழரசு உறவு நலன் பேணும் வகை ஏற்பட்ட பிறகு விழித்துக் கொண்டு விட்டது போல், ரியூனியனும் பாரிசு பக்கமே - வடக்கே தலைவைத்துப் படுத்ததை விட்டுத் தமிழகத்திடம் தனது பார்வையைச் செலுத்த வேண்டும். புதுச்சேரி, சென்னை - தமிழகத்திற்கு வெளிநாடுகளில் வாழும் பிரஞ்சுத் தமிழர் தலைவர்களும், வணிகர்களும் வந்து போகும் தொடர்புகளை உண்டாக்க இந்த அரசுகள் தூண்டுகோலாக நின்று - கருத்துப் பரப்புதல் - விளம்பரம் இவற்றைச் செய்ய வேண்டும் ஆகவே தான் இது செயல்பட உடனே புதுவையில் அனைத்துலகத் தமிழ் உறவு நடுவம் என்ற ஒன்றைத் தொடங்க வேண்டும். என்று கருதுகிறோம். O

உலகில் உள்ள பதினேர் ஏழை நாடுகளில் இந்தியாவும் ஒன்று!

உலகில் உள்ள ஏழை நாடுகளாக உலக வைப்பகம் (World Bank) தன் 1981-ஆம் ஆண்டறிக்கையில் அறிவித்துள்ள நாடுகள் பதினென்று! அவை பூடான், பங்களாதேசம், சாட், எதியோப்பியா, நேபாளம், மாலி, பர்மா, ஆப்கானித்தான், புருந்தி, வடஒல்டா, ஆகியவற்றோடு இந்தியாவும் ஒன்று!

அயல்நாட்டுத் தூதரகங்களுக்குத் தொலைவரி

ஈழத்துச் சிக்கலில் தீர்வுகாணக் கோரிக்கை!

சென்ற 6-7-83 அறிவன் கிழமை மாலை 6-மணி அளவில் உலகத்தமிழின முன்னேற்றக் கழகம்; தமிழீழத் தோழமைக் கழகம் ஆகியவற்றின் கூட்டுக் கூட்டம் திருப்பூர் டிமாண்டி 2-ஆம் தெரு போனிக்சு உள்ளொட்டி ஆலையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு, தென்மொழி ப. துரையரசன் தலைமை தாங்கினர்; இலங்கையில் சிங்கள அரசும் படைத்துறையும்), சிங்கள வெறியர்களும் தமிழினத்தை ஒடுக்குவதையும், அச்சுறுத்துவதையும், தமிழ் இளைஞர்களை நுண்சிதைப்பு (சித்திரவதை) செய்து கொல்வதையும் கண்டித்து, நீறணி பலளக்குன்றன், சந்திரசேகரன் ஆகியோர் உணர்ச்சியோடு உரையாற்றினர்.

அதனைத் தொடர்ந்து இலங்கையில் தமிழின அழிப்பு முயற்சியை மேற்கொள்ளும் சிங்கள அரசின் இனவெறிப் போக்கைக் கண்டித்து அயல் நாட்டுத் தூதுவரகங்களுக்கு தொலைவரி கொடுப்பதென முடிவு செய்து, 7-7-83 அன்று அமெரிக்கா, கனடா, சீனு, சப்பான், பிரான்சு, உருசியா, செருமனி(மேற்கு), இங்கிலாந்து ஆகிய நாடுகளின் டெல்லி தூதுவர் அலுவலகங்கட்குத் தொலைவரிகள் கொடுக்கப்பட்டன. இந்தியத் தலைமையமைச்சர் இந்திராகாந்தி, குடியரசுத்தலைவர் ஆகியோர்க்கும் தொலைவரிகள் கொடுக்கப்பட்டன. மேலும் இலங்கைத் தமிழர் சிக்கலில் உலகத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக ஒரு நாள் உண்ணு நோன்பு மேற்கொள்ளக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

—க. தமிழப்பன், திருப்பூர்.

சட்டத்தில் இந்துமதம்! மனுதர்மம்!

0 இபிகோ பகுதி 25-பிரிவு 295, 296 என்பனதாம் மதங்களுக்குப் பாதுகாப்பளித்து, இந்துமத நடைமுறைக்குத் துணை நிற்கின்றன.

0 அதுவன்றி, பிரிவு 372 என்னும் சட்டம், "ஏற்கனவே நாட்டில் உலவி வந்த சட்டதிட்டங்கள் (அஃதாவது Personal Law- என்று கூறப்பெறும் இந்துச் சட்டங்கள்), தனிப்பட்டவரின் குமுகியல் (சிவில்) உரிமைகள், புதிய சட்டங்களால் மாற்றப்படாதவரையில், அவையெல்லாம் நடைமுறையில் இருக்கும்"— என்று கூறுகிறது.

—இந்தப் பிரிவுதான் 'இந்துச்சட்டம்' என்கிற மனுதர்ம சாத்திரத்திற்குப் பாதுகாப்பு அளிக்கிறது.

தமிழனா? திராவிடனா?

 கு. வெ. கி. ஆசான்

தெளிவின்மை :

உலக அரங்கில் திகழும் எல்லா இனங்களையும் போல் அனைத்து உரிமைகளையும் பெற்றுப் பெருமையுற வேண்டுமெனத் தமிழர் திரண்டு கொண்டிருக்கிறார்கள்; தமிழின உணர்வும் மொழியுணர்வும் மங்காது உறுதி பெற வேண்டும் எனப் பொறுப்புள்ள தலைவர்கள் குரல் கொடுப்பதைக் காண்கிறோம். "தமிழினமே எல்லாம் என ஆகி விட்டால், இந்த மாநிலத்தில் வாழும் தமிழரல்லாத திராவிடர் கதி என்ன ஆவது? எனச், சிலர் ஐயத்தைக் கிளப்பத் தொடங்கியுள்ளனர். இந்த ஐயம் தெளிவற்ற எண்ணத்தைத் தெரிவிக்கிறது.

உறுதி ஒன்று :

தமிழ் நாட்டில் எல்லாத்துறையிலும் தமிழர்தாம் முதல் இடமும் முதன்மையிடமும் பெற வேண்டும். இந்த மாநிலத்தில் தமிழரல்லாத பிறர், நிலத்தை உடைமை - யாக்குவதோ, தேர்தலுக்கு நின்று அரசியல் அதிகாரத்துக்கு வருவதோ தடை செய்யப்படுகின்ற வகையில் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

உறுதி இரண்டு :

இந்த மாநிலத்தில் உள்ள பிறர், பண்பாட்டுச் சிறுபான்மையர் என்ற முறையில் பாதுகாப்புப் பெற்றுத் தங்கள் தொழில்களை நடத்திக் கொள்ளலாம். ஆனால், தமிழர்களை மேலாண்மை செய்யும் வகையில் அரசியல் பொருளியல் துறைகளில் முகாமை பெற அனுமதிக்கக் கூடாது.

தெளிவு ஒன்று :

தமிழரல்லாத பிற இனத்தவர், பண்பாட்டுச் சிறுபான்மையர் என்ற வகையில் எல்லைக்குட்பட்ட உரிமைகளோடுதாம் தமிழகத்தில் வாழ வேண்டும் என்றால், பல நூற்றாண்டுகளாக இங்கு வாழும் தெலுங்கர், கன்னடியர், மலையாளியர் ஆகியோர் தமிழர்களுக்கு இணையான உரிமைகளுடன் வாழக்கூடாதா, என்ற கேள்வியை எழுப்புகிறார்கள். வீட்டிலே கொச்சையான தெலுங்கைப் பேசுவதால் மட்டுமே இவர்கள் தெலுங்கர் அல்லர். அது போன்றே பிற மொழிகளை எச்ச நிலையில் பயன்படுத்துவோரும், தமிழரில் இருந்து பிறர் ஆகார். அவர் உணர்வால், உள்ளத்தால், இனத்தால் தமிழரே! அவர்களின் மரபும், பண்பும், உள் நினைவும் தமிழே! இங்கே கொச்சைக் கன்னடம் பேசும் மெத்தப் படித்த செட்டியார், கருநாடகம் சென்று, அவருக்குத் தெரிந்த கன்னடம் பேசினால், அங்குள்ள சராசரிக்கும் கீழானவர் கூட அவரை அநாகரிகமானவர் எனத்தான் கணிப்பர். கன்னட மரபில் இயல்பாக எளிதில் கலக்க முடியாத அளவிற்கு அவர் தமிழராகி விட்டார். ஆகையால், அத்தகைய கன்னடியர், மலையாளிகள், தெலுங்கர் ஆகியோர் முழுக்க முழுக்கத் தமிழரே! இந்த வகையில் உணர்விலும், மரபிலும் தமிழராகிவிட்டவர்கள் தங்களைத் தமிழர்கள் அல்லர் எனக்கருதினால் அஃது அறியாமையே! இவ்வாறு தமிழ்மயமாகி விட்டவர்களைத் 'தமிழரல்லாத வேற்றார்' எனச் சொல்லும் சில தமிழர்கள் இருக்கிறார்கள் என்றால், அதுவும் அறியாமைதான். தெளிந்த சிந்தனையின்மையால் எழும் மயக்கமும் ஆத்திர அவசரத்தில் எழும் உணர்வுகளும் இத்தகு அறியாமைகளுக்குக் காரணமாகின்றன.

தெளிவு இரண்டு :

தெலுங்கரோ, கன்னடியரோ, மலையாளியரோ தமிழராகின்றனர் என்றால், அவர்கள் மீண்டும் தொன்மை நிலையை எய்துகின்றனர் எனப்பொருள். அஃது எவ்வாறு? அனைத்துத் திராவிடரும் தொன்மைக் காலத்தில் தமிழராய் இருந்தவர்களே; காலப் போக்கில் வடக்கே செல்லச் செல்ல மொழி திரிந்ததால், ஒரு காலக்கட்டத்தில் வேற்றுமொழி பேசுவோர் ஆயினர். செந்தமிழ் பேசும் நிலத்தில் இருந்து கொடுந்தமிழ் பேசும் நிலத்திற்குச் சென்று, பிறமொழி பேசி, மீண்டும் மற்றொரு காலக்கட்டத்தில் செந்தமிழ் நிலத்திற்கே வந்துசேர்ந்து தமிழர் ஆயினர் சென்றவர். வந்தனர். போனவர் திரும்பினர். அவ்வளவே! திரு.வி.க. அவர்களின் சொற்படி 'உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு' எனும் உணர்வு கொண்டவர்களாக வாழும் அவர்கள் தமிழ்நிலத்தின் அனைத்துரிமைகளுக்கும் நலன்களுக்கும் உரியவர் ஆவர்.

தெளிவு மூன்று :

வீட்டில் தெலுங்கு பேசும் சாதியினரும், கன்னடம் பேசும் சாதியினரும் வெவ்வேறு இடங்களில், வீட்டிலும் தமிழ் பேசும் பிற சாதியினரோடு மோதல்களில் ஈடுபடுவது உண்டு; இது சாதி மோதல்களே; இவற்றிற்கு மொழிச்சாயம் பூச வேண்டியதில்லை. அப்படிப் பூசுவோர் தன்நலத்திற்காகத் தமிழினநலத்தைத் தெரிந்தோ தெரியாமலோ புறக்கணிக்கின்றனர்.

பிற திராவிட மொழிகளை வீட்டில் கொச்சையாகப் பேசித் தமிழகத்தில் வாழும் சாதியினர் 'கொள்வன, கொடுப்பன' தமிழகத்திற்குள்ளே தான் நடக்கிறது; அவர்கள் வீட்டில் பேசும் பிற திராவிடமொழி மாநிலத்தாரோடு குடும்ப உறவுகள் இல்லை! இரண்டு மூன்று இலட்சத்திற்கு ஒருவர் திருமண உறவு கொள்ளலாம்; அதுவும் சாதியடிப் படையில்தான்; மொழி ஒற்றுமையால் அன்று.

தெளிவு நான்கு :

தமிழர் மயமாதல் என்பது பிற திராவிடருக்குத்தான் பொருந்துமா. அல்லது மற்ற இனத்தவருக்குமா? உண்மையில் அஃது எல்லோருக்குமே ஏற்புடையது என்பதுதான் உண்மை. ஆங்கிலோ-இந்தியர் உட்பட, மராத்தியர், இராசஸ்தானியன், குசராத்தியர், சவுராஃட்டிரர் முதலிய அனைவரும் தமிழர் மரபோடு ஒன்றித் தமிழ் உணர்வில் திளைக்கும் பொழுது, அவர்கள் வேற்றார் அல்லர். சில நூறு அல்லது ஆயிரம் குடும்பங்களாகத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மராத்தியர்கள் இருக்கிறார்கள். இவர்களின் உயர்வும் தாழ்வும் இந் நிலத்தோடு முழுதும் இணைந்து விட்டதால் இவர்களும் தமிழர்களே! இவர்களைப் போன்று வாழும் பிற மொழியினரையும் அவ்வாறே கருத வேண்டும்.

தெளிவு ஐந்து :

ஒரு மக்கள் தொகுதியினர் தேசிய இனமாக உருவாவதற்கு முன் அவர்களில் பல்வேறு இனத்தார் கலந்து கரைவது என்பது உலகெங்கும் உண்டு என்பது வரலாறு ஆகும். கெல்ட்டுகள், உரோமானியர், ஆங்கிலர், சாக்சானியர், நார்மானியர் முதலிய இனத்தவர்கள் பிரிட்டானிய இனமாக ஒன்றியுள்ளனர். இது போன்றே ஒவ்வொரு நாட்டின் வரலாறும் அமைந்து கிடக்கிறது. தமிழர்களின் மொழிவழித்தேசிய உணர்வு மலருவதற்கு முன் அவர்களோடு இனத்தால் உறவுடைய திராவிடரும் பிறரும் ஒன்றிவிட்டுள்ளனர் என்ற வரலாற்று மெய்மையை ஒவ்வொருவரும் அறிந்திடல் வேண்டும்.

பார்ப்பனர்கள் :

தமிழ்த் தேசிய மலர்ச்சிக்கு முன் பல்வேறு இனங்கள் கலந்து விட்டன எனும்பொழுது அப்படிக் கலந்து விட்டவர்களில் ஆரியரும் அடங்குவார். திராவிட இனமும் ஆரிய இனமும் குருதித் தூய்மை உடையன அல்ல. பார்ப்பனர்கள் திராவிட இனத்தோடு இரத்தக் கலப்பு உடையோர் ஆயினும், நாகரிகப் பாங்கில் ஆரிய முறையைத் தூக்கிப்பிடித்துக் கொள்கிறார்கள் எனத் தந்தை பெரியார் சொல்லுவார். சமஃகிருதம் தங்கள் மொழியென்றும், அதுவே உயர்ந்த தென்றும், தாங்கள் இருபிறவி கொண்ட பிராமணர் என்றும் ஆகவே பூதேவர் என்றும் கூறிப் பூணூல் அணிந்து, ஆச்சாரியர் பீடங்களை உண்டாக்கிக்கொண்டு ஒதுங்கிவாழ்கிறார்கள். தமிழர்கள் அவர்களை ஒதுக்குகிறார்கள் என்பதன்று சிக்கல்; அவர்களே ஒதுங்கி நிற்கிறார்கள் என்பது தான் உண்மை. தாங்கள் தனித்தவர்கள் என்றும், அனைவரிலும் வருணதருமத்தால் உயர்ந்தவர் என்றும் கூறிக் கொண்டும் மேலாண்மை செய்வோரை எதிர்த்துப் போராட வேண்டியது குமுகாயச் சமனிய நெறியைப் பின்பற்றுவோர் ஒவ்வொருவருக்கும் கடமையாகிறது. பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் சாதிவருண ஏற்பாட்டிற்கும் புனிதம் கற்பிக்கும் சாத்திரங்கட்கு நியாயங் கற்பிப்பதும், வடமொழியைத் தெய்வ மொழியெனக் கொண்டாடி முதன்மை தருவதும், பிராமணன் எனக் கூறிக்கொண்டு மற்றவரைச் சூத்திரர் எனச் சுட்டாமற் சுட்டுவதும் ஆன நடப்புகள் இருக்கும்வரை, பார்ப்பனர்கள் தெரிந்தோ தெரியாமலோ, நேரடியாகவோ மறைமுகமாகவோ தமிழினத்தின் ஐந்தாம் படையாக ஆகிவிடுகிறார்கள் என்பதை மறுக்க இயலாது. தமிழ் நலம் என்பது வடமொழியையோ இந்தியையோ முதன்மைப் படுத்துவதால் உறுதியாய்க் கெடும். தமிழர் நலம் என்பது வருண தருமத்தாலும் சாதி ஏற்பட்டாலும் கெடும். ஆகையால், சதுர் வருணியச் சாதி ஏற்பாட்டையும் சமசுகிருத வழி முறைகளையும் தாங்கி நிற்கும் அடிப்படைகளையும் குறியீடுகளையும் பார்ப்பனர் விட்டொழிக்க வேண்டும். அப்படிப்பட்ட பார்ப்பனர்கள் தமிழினத்துடன் ஒன்றி வருவதற்குத் தடையிருக்க இயலாது!

பண்பாட்டுச் சிறுபான்மை:

உலகம் சுருங்கி வருகிறது. ஒரு மாநிலத்தார் பிற மாநிலங்களிலும், ஒரு நாட்டார் பிற நாடுகளிலும் சென்று தொழில்செய்து வாழ்வது இயல்பாகி வருகிறது: தமிழர்கள் பிற பகுதிகளில் வாழ்கிறார்கள். அங்கெல்லாம் மன்றங்களையும் பிற அமைப்புகளையும் வைத்துள்ளனர். அதேபோல் பிறரும் தமிழ்நாட்டில் வாழ்ந்து கொண்டு சபாக்கள், சமாசங்கள், மண்டல்கள், சம்மேளனங்கள், வைத்திருக்கிறார்கள். தமிழகத்தில் தமிழரோடு கலக்காத, கலக்க விரும்பாத பிற திராவிட இனத்தவரான தெலுங்கர், கன்னடியர், மலையாளிகள் சில நகர்ப்புறங்களில் மன்றங்கள் வைத்துக் கொண்டுள்ளனர்; அவர்கள் அண்மைக் காலத்தில் வந்தவர்கள். அவர்கள் தங்களது தனித்தன்மையைக் காத்துக் கொள்ள விரும்புவது புரிந்து கொள்ளக் கூடிய ஒன்றே. அதேபோல் பஞ்சாபியர், இராசத்தானியர், சிந்திகள் முதலிய திரவிடரல்லாதவரும் தமிழகத்தில் வாழ்வதையும் தங்களுக்குள் அமைப்புகளை வைத்துக் கொண்டிருப்பதையும் காண்கிறோம். இவர்களைப் பண்பாட்டுச் சிறுபான்மையர் (Cultural minority) என்கிறோம். தமிழருக்கு உரிய முழு உரிமையும் அவர்கள் இந்த மாநிலத்தில் பெறத் தகுதியற்றவர் ஆயினும், தமிழர்களுக்குப் பிற மாநிலங்களில் உள்ள ஏந்துகளும் பாதுகாப்புப் பெறுவதற்குத் தகுதியுடையவர். தமிழ் நாட்டில் மேலாண்மை செலுத்தும் அளவிற்கு எந்த வகையிலும் அவர்களின் சாய்காலோ வலிமையோ வளர்த்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பது, நாளடைவில் தமிழர்களுக்கும் அவர்களுக்கும் இடையில் - முரண்பாடு ஏற்படக்கூடாது என்பதற்காகவே. — நன்றி. ஊரும் உலகமும் அக்-நவ-83.

தமிழீழப் பரப்பு குறைகிறது!

இலங்கையில் 1958, 77, 81-ஆம் ஆண்டுகளில் தமிழர் மீதும் தமிழீழத்தின் மீதும் இன ஒழிப்பு, நிலக்கவர்வை (ஆக்ரமிப்பு) அடிப்படையாகக் கொண்டு, இனக் கலவரங்களாலும், சிங்களர் குடியேற்றத்தாலும் தமிழர்கள் இழந்த சொத்துகள் பலகோடி! உயுரிழப்புகள் பலநூறு! ஏதிலி (அகதி)களானோர் இலக்கக் கணக்கானவர்! தமிழீழ வழியுரிமை (பாரம்பரிய) நிலப்பரப்பின் மொத்தம் 7500 சதுரக் கற்களாக இருந்தது: அதில் ஏறத்தாழ 3000 சதுரக் கற்கள் வளமான நிலம் சிங்களவர்களால் கவர்ந்து கொள்ளப் பட்டுவிட்டது! இன்றைய நிலையில் எஞ்சியுள்ள தமிழீழத்தின் பரப்பு ஏறத்தாழ 4500 சதுரக் கற்கள்தாம்! தமிழீழக் கோரிக்கை நாள் கடத்தப்படுமானால், கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி, அதுவும் தேய்ந்து சிற்றெறும்பாகி, அதுவும் தேய்ந்து ஒன்றுமில்லாமற் போன கதைதான்!

—முதல் ஐரோப்பியச் சொற்பொழிவுகளில். பாவலரேறு

அவலூர்ப் பேட்டையில் தமிழீழக் கோரிக்கை

தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த அவலூர் பேட்டையில் ஆகத்தில் நடைபெற்ற, இலங்கைத்தமிழர்களின் உயிருக்கும், உடைமைக்கும், பாதுகாப்புத் தரவேண்டியும், தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதையும், செயவர்த்தனேவின் கொடுங்கோல் ஆட்சியையும் எதிர்த்தும், கடைவீதி, காந்திசிலை முன்பிருந்து மாலை 3-30 மணியளவில் ஈழத்தமிழர்களின் வாழ்வைக் குலைக்காதிருக்கவும், செயவர்த்தனேயின் கொடுங்கோலாட்சியை எதிர்த்தும் விண்ணதிரும் முழக்கங்களுடன் பிற்பகல் 3-30 மணியளவில் ஊர்வலம் துவங்கியது. முன்னே உலகத் தமிழின முன்னேற்றக் கழகக் கொடிகளும், பெரிய நீண்ட பெயர்ச் சீலை(பானர்)யும் முழக்கங்களும் நிரம்பிய அட்டை வியக்கங்கள் செல்ல, அதைத் தொடர்ந்து தமிழ் வீர மறவர்களின் தமிழர் பாதுகாப்புக்கான முழக்கங்கள் செல்ல, அதைப் பின் தொடர்ந்து புலி ஆட்டம் முதலியன செல்ல இறுதியில் பறைகளுடன் இலங்கை அதிபர் செயவர்த்தனேயின் கொடு உருவம் மிகக் கொடுமையாகக் காட்சி தரும் வகையில் அமைத்து மாட்டு வண்டியில் ஏற்றி, ஊரின் முகாமை வீதிகளின் வழியாகச் சென்றன. ஒவ்வோர் இடத்தையும் கடக்க ஊர்வலம் ஏறத்தாழ பதினைந்து முதல் முப்பது நிமையங்கள் வரை ஆயின. மாலை மூன்று மணிக்குத் துவங்கிய ஊர்வலம் (7-00) ஏழு மணிக்கு மீண்டும் புறப்பட்ட இடத்திற்கு வந்து கொடும் உருவம் எரிக்கப் பட்டது. ஊர்வலத்திற்கு, கூ. சா. இராமலிங்கனார் தலைமையேற்க, அனைத்துக் கட்சித் தலைவர்களும் முன்னிலை ஏற்க, திரு.பெ. பன்னீர் மேற்பார்வையில் சென்றது. பிறகு, நடைபெற்ற கண்டனக் கூட்டத்திற்குப் பெரியவர் திருமிகு இரா. கணபதி அவர்கள் தலைமையேற்க, செஞ்சிவட்ட உ.த.மு.க நகரச் செயலாளர் தா. நெஞ்சிற் கினியன், அவலூர் பேட்டை உ.த.மு.க நகரச் செயலாளர் கூ.சா. இராமலிங்கனார் மற்றும் பலர் பேசினார்கள்.

தமிழீழமும் தமிழ்நாடும்!

தனித் தமிழீழக் கோரிக்கையைத் தமிழர்கள் எந்த நிலையிலும் தவிர்க்கவேகூடாது. தமிழீழம் தவிர்ந்தால் தமிழ்நாடு எப்பொழுதும் விடுதலை பெற முடியாது!

தமிழ்நிலம் தடையின்றி வெளிவர வேண்டுமானால், அனைவரும் இன்றே உறுப்பினராகுங்கள்!

உ.த.மு.க. கிளைகளை ஊர்தோறும் தொடங்குங்கள்!

ஏவுகணை

புத்தம்! சரணம்! கச்சாமி!

'இளங்கோ'

இலங்கை! சூழக்கடலிருக்கும் சுண்டைக்காய் நாடு! இதன் தலைவர் செயவர்த்தனே! குடியரசுத் திரௌபதியைத் துகிலுரித்த துச்சாதனன்! உலகத்துக் கொடுங்கோலர்களை ஓரம் போக்கிய உன் மத்தன்! 'பாசிச' வெறியன்!

இட்லரின் கல்லறையில் கருவிருந்து பிறந்த மாந்த விலங்கு! சிங்களச் சிறுநரிகள் தமிழின மக்களின் குருதியைக் குடிக்க ஓயாது தூண்டிவிட்ட ஓநாய்!

படைஞர்களையும் காவலர்களையும் ஒன்றிய தேசியக் கட்சிக்காரனையும் ஏவிவிட்டுத் தமிழினத்தைக் கொன்று குவித்த கொடுமனக் கூனன்!

கன்னி மலர்களைப் பறித்துக் கசக்கி நுகர்ந்து கனலில் வீசிய கொடியன்!

கட்டிய கணவன் கண்ணெதிரில் காதல் மனைவியைக் கதறக் கதற பட்டாளத்தவரைக் கொண்டு பெண்டாள வைத்த இழிஞன்!

சிறையில் கிடந்த அரிமாக்களாம் குட்டிமணி, செகனின் விழிகளைத் தோண்ட வைத்த வீணன்!

சூடேற்றிய இரும்புச் சிறுகம்பியை அவர்களின் உயிர்த் தொளையில் நுழைக்கச் செய்த கொடியவன். உறுப்புச் சிதைவுகளைச் சிறைக்குள்ளே செய்து, இறுதியில் அவர்களைத் துண்டந் துண்டமாக வெட்டிக் கொன்ற வெறியன்!

சிங்கள இனவெறி அரியிருக்கையில் அமர்ந்து தமிழர்களின் வாழ்வையும் வளத்தையும் அழிக்க வந்த வல்லூறு!

இலங்கை வரலாற்றின் இணையில்லாக் களங்கம்! மாந்த குல வரலாற்றின் மாறாத களங்கம்!

கழுவத் தண்ணீர் கங்கையிலுமில்லை; காவிரியிலுமில்லை! புத்தனே! எப்படிப் பொறுத்தாய்?

சிலையாகி நிற்கின்ற சித்தனே! உன் சிலையிலும் வடியும் அரத்தமே!

புத்த மகன் புகழுரை கேளீர்!

''சில விலங்குகள் சில ஒழுக்கக் கேடான செயல்களைச் செய்துள்ளன. என்னுடைய சொந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களே சிலர் இதற்குப் பொறுப்பாக இருந்துள்ளனர் என்பதை வருத்தத்துடன் கூறிக்கொள்கிறேன்; நான் இதற்கு வெட்கப் படுகிறேன்!'' ——— இவ்வாறு சொன்னவர் யார் தெரியுமா? 1981 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் மாவட்ட ஒன்றியத் தேர்தலின் போது, ஆகச்டுத் திங்களில் ஓர் இனக் கலவரம் வெடித்துக் கிளம்பியது. அரத்த ஆறு ஓடிய பகுதிகளில் இரத்தினபுரம் ஒன்று! தாக்குண்ட பகுதியாகிய இரத்தின புரத்திற்குப் 'புத்த அரிமா' தலைவர் செயவர்த்தனே நேரில் சென்று பார்வையிட்டார். பார்வையிட்டுத் திரும்பியதும் யு.என்.பி. இராமகிருட்டிண மடத்தில் உரையாற்றிய போது மேற்கண்ட புகழுரையைப் புகன்றார்!

1983-ஆம் ஆண்டு சூலைத் திங்களில் நடைபெற்ற படுகொலையைப் பற்றி மறந்தும் வருத்தம் தெரிவிக்க இந்தப் புத்தனின் பேரப்பிள்ளை முன்வராத காரணம் என்ன?

''நீங்கள் அமைதியை விரும்பினால் அமைதியைத் தருவோம்.. போரை விரும்பினால் அதையே தருவோம்'' என்பது, தேர்தல் சொல்லுறுதியை மறந்து குடியரசுத் தலைவர் பதவியேற்றதும் செயவர்த்தனே ஆற்றிய வானொலி உரையாகும். இதிலிருந்து இவரின் இனவெறிக் காய்ச்சல் எவ்வளவு என்பது புலனாகும். இனவெறிக் கலவரத்திற்கு இவரே புகை காட்டினார் என்பதும் தெளிவாகும்! ஆட்சிக் கட்டில் ஏறும் பொருட்டும், தமிழ் மக்களின் ஒப்போலைகளைப் பெறும் பொருட்டும், வெள்ளாடாய்க் காட்சியளித்த செயவர்த்தனே வேங்கையாக மாறினார். இலங்கைத் தமிழருக்கு அமைதியென்ன எட்டிக் காயா? போரென்ன பூமாங்கனியா? அமைதியை நாடுவது என்னும் பெயரால் இலங்கைத் தமிழ் மக்களின் முகாமை அரசியல் கட்சியான 'தமிழ் ஒன்றிய முன்னணி'யுடன் கமுக்கப் பேச்சுரைகள் நடத்திக் காலம் கடத்திக் காற்றிலும் பறக்க விட்டார். இதனால் தமிழர்களின் ஒன்றிய உணர்வு அவிந்து போய் பிளவுணர்ச்சி முளைவிட்டது. அமைதியைக் கெடுத்தவர் யார்? பிளவை உருவாக்கியவர் யார்?

இனிப் பொறுப்பதற்கில்லை!

இலங்கை அரசு, குடியுரிமைச் சட்டத்தை நிறைவேற்றி, பத்து இலக்கத்திற்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்களைக் குடியுரிமை இழக்கச் செய்த கொடுமையைச் செய்தது. அரசு ஆளுமையில் இருந்த தமிழ்மக்களைக் களைபறிக்க முற்பட்டது. உயர் அலுவலர்களாக 30 விழுக்காட்டிலிருந்த தமிழர்களை 5 விழுக்காடாகக் குறைத்தது. எழுத்தர் பணியை 50 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாக இறக்கியது. கடைநிலைப் பணியில் 40 விழுக்காட்டிலிருந்த தமிழர்களை 5 விழுக்காடாக ஆக்கியது. இலங்கைப் படைத் துறையில் தமிழர்கள் விடுதலைக்கு முன்பு 40 விழுக்காட்டினராக இருந்தனர். விடுதலைக்குப் பின்பு கெடுதலை விரும்பிகளால் ஒரே ஒரு விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. முப்படையிலும் சேர்ந்து இலங்கைப் படைத் துறையில் எவ்வளவு என்று கேட்கப்பட்ட பொழுது 17,000 என்று கூறப்பட்டது. இதில் தமிழர்களின் எண்ணிக்கை 565.

கல்லூரிகளில் தமிழ் மாணவர்கள் சேர்க்கப்படுவதில் மிகப் பெரிய பாகுபாடு. தொழிற் பயிற்சி நிலையங்களில் ஓர வஞ்சனை. இப்படிப்படிப்படியாகத் தமிழர்களைத் துடைத்தெறியத் துடித்தது இலங்கை அரசு. தனது வஞ்சக வலையைத் தமிழர்களின் பெரும்பான்மைப் பகுதிதோறும் பின்னியது. தமிழர் பெரும்பான்மைப் பகுதிகளில் சிங்களவர்களைக் குடியமர்த்தியது. இவை ஏற்கனவே எரிந்து கொண்டிருக்கும் பிளவுணர்ச்சி நெருப்பில் கன்னெய் (பெட்ரோல்) பெய்ததாயிற்று. எனவே தமிழின மக்கள் 'தமிழ் ஈழம்' தனிநாடு கோரிக்கைக்குத் தள்ளப்பட்டனர். இனிப் பொறுப்பதற்கில்லை என எரிதழலைக் கையிலெடுத்தனர். எடுத்தது குற்றமா? எடுக்க வைத்தது குற்றமா? நாடு கடந்து, நாடி நரம்புகளில் உழைப்பைத் தேக்கி இலங்கையின் காடுகளில் பாயவிட்டுச் செல்வக் கழனியாக்கிய தமிழர், நாடு கடந்தப் பட்டால் பொறுக்க முடியுமோ?

பொறுக்க முடியாத கொடுமைச் செயல்கள்:

தமிழ் மக்கள் இலங்கை மண்ணில் அரத்தம் சிந்தி உழைத்தவர்கள்! ஆலை அமைத்தவன் தமிழன்; வெயர்வைத் துளியில் சாலை அமைத்தவன் தமிழன்; தோட்டம் அமைத்தவன் தமிழன்; பல தொழில்களை அமைத்தவன் தமிழன். தென்னை வளர்த்தவன் தமிழன்; தேயிலை வளர்த்தவன் தமிழன்.

கால்வாய் வெட்டியவன் தமிழன்; கடைகளை அமைத்தவன் தமிழன்; வாணிகம் செய்தவன் தமிழன். இலங்கையை வளம் கொழிக்கச் செய்தவன் தமிழன். இலங்கை மண்ணை எடுத்து முகர்ந்தால் அவன் சிந்திய அரத்தத்தின் நறுமணம் கமழும். தமிழ் மக்களை இலங்கை மண்ணிலிருந்து வேரோடு களை பிடுங்கச் சிங்களச் சூதர்கள் நினைத்ததால் வெடித்தது தனிநாடு கோரிக்கை. தாங்க முடியாத 'தனிக்காட்டு அரசு' இதனைப் 'பயங்கரவாதம்' எனப் பறைசாற்றியது. இந்தக் கோரிக்கையின் குரல்வளையை நெறிக்க, 'பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை' இயற்றியது. இந்தச் சட்டத்தின்மூலம் ஆறே மாதங்களில் பயங்கரவாதிகளைத் துடைத்தெறிய வேண்டும் எனப் பட்டாளக் கழுதைக்குக் கண் குறிப்புக் காட்டி, கட்டுத் தளையையும் அறுத்துவிட்டது. அது தமிழர்கள் வாழும் பகுதிகளில் கேள்விமுறையின்றி மேயத் தொடங்கியது. இதனால் வெகுண்டெழுந்த 'விடுதலைப் புலிகள்' படைத்துறைக் கழுதைகள் பதின்மூன்றை அடித்துக் கொன்றனர்.

விடுதலைப் புலிகள்

உணர்ச்சியின் உச்சிநிலைக்குச் சென்றுவிட்ட தமிழ் இளைஞர்கள் தங்களை விடுதலைப் படையில் இணைத்துக் கொண்டவர். இவர்களின் நோக்கம் தந்நலநோக்கமன்று எனினும் தங்களின் செயல் தமிழ் மக்களை எவ்வளவு தொலைவு தாக்கும் என்ற தொலைநோக்கு அற்றதெனவே கூற வேண்டும். படைத்துறையில் ஒரு சிலரைக் கொன்று விடுவதனாலோ அல்லது சிங்களரில் சிலரை வெட்டி வீழ்த்துவதனாலோ தமிழர்களின் சிக்கலுக்குத் தீர்வு கண்டு விடமுடியாது. நல்லெண்ணமுள்ள சிங்களர்களையும் தமிழர்க்கு எதிரான பாதையில் திசை திருப்பிவிடவும் இவர்களின் செயல் ஏதுவாகலாம். எனினும் விடுதலைப் புலிகள் உருவாக விதை யிட்டது இலங்கை அரசு. அந்த விதை முளைத்துச் செடியாக நீர்வார்த்ததும் இலங்கை அரசே. எனவே விடுதலைப் புலிகளை வேட்டையாடச் சட்டமியற்றியதைக் காட்டிலும் சிங்களர், தமிழர் சம வாழ்வுக்குச் சட்டமியற்றி விடுதலைப் புலிகளுக்கு இரை கிடைக்காமல் செய்திருக்கலாம். இலங்கை அரசின் இனவெறிப் போக்கால் பிறந்த விடுதலைப் புலிகள் தங்களை அழித்துக்கொண்டு தமிழின விடுதலைக்காகப் பிறந்தவை எனினும் அவர்களின் பாதை புகர் நிறைந்ததாகும். அவர்களின் ஈகத்தை நெஞ்சாரத் தலைதாழ்த்தி வணங்குகிறோம்.

1983 சூலைப் படுகொலை!

''இலங்கையில் கலவரங்களும் இராணுவச் சட்டங்களும்'' என்ற பெயரில் திரு. பொன்னம்பலம் இராமநாதன் என்பவர் ஒரு நூல் வெளியிட்டுள்ளார். இந்த நூலில் 1915-ஆம் ஆண்டு நடைபெற்ற இனக் கலவரத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அந்த நூலின் 10 ஆம் பக்கத்தில், சில ஏழைச் சிங்களவர்கள் கப்பலுக்குள் சென்று அங்கிருந்த பொருட்களை எல்லாம் வெளியே தெருவில் தூக்கிப்போட்டனர். அவற்றை மக்கள் நடுத்தெருவில் போட்டுத் தீவைத்துக் கொளுத்தினர்.'' என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இதனால் இலங்கையின் இனக் கலவரம் 1915-ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே நடந்து வருகிற ஒரு தொடர் கொலையாகும். அன்பு வழி, அறவழி நிற்கச் சொன்ன புத்தனின் அருள்நெறி பரப்ப வேண்டிய புத்த பிக்குகள் இனக்கலவரத்திற்குத் தலைமையேற்று நடத்தி இருள்நெறி பரப்பி வருகின்றனர்கள். புத்தனுக்கு விழா எடுக்கும் ஒவ்வோர் ஆண்டும் கலவரத்திற்குக் 'கால்கோள்' இடப்பட்டது. இத்தனைப் படுகொலைகளிலும் உலகவர் நெஞ்சை உலுக்கிய படுகொலை, சூலையில் நடந்த படுகொலையாகும். இந்தப் படுகொடுமையான கலவரத்தால் இலங்கையின் பொருளியலே இடிப் பொடிந்து போய் மூன்று முதல் ஐந்தாண்டுகள் வரை எழுந்திருக்க இயலாத நிலையில் உள்ளதாகப் பொருள் அமைச்சர் நீலிக் கண்ணீர் வடித்துள்ளார். இந்தக் கலவரத்தால் இன்னுயிர் இழந்தவர் எண்ணிக்கை 300 என இலங்கை அரசின் 'சித்திரகுப்தக் கணக்கு' செப்பி மகிழ்கிறது. ஆனால் உண்மையில் உயிரிழந்தோரின் கணக்கு அதைப்போல் நான்கு மடங்கு இருக்கலாம் என நம்பப்படுகிறது. அந்தக்கலவரத்தால் சொத்துகளை இழந்து, வீடுவாசலை இழந்து ஏதிலிகளாக ஆவி சோர்ந்து கண்ணீர் வடித்துக் காவி படர்ந்த கண்களோடு ஏதிலிகள் கொட்டடியில் அடைக்கலம் புகுந்தோர் ஐம்பதாயிரத்திற்கு மேலாகும். கலவரத்திற்கு முதல்நாள் 'ஆர்லிக்ஸ்' குடிக்க மறுத்த குழந்தை கலவரத்திற்குப்பின் ஏதிலிகள் கொட்டடியில் கூழுக்கு அழுகிறது. கலவரத்திற்கு முதல்நாள் குளிர்பதன அறையின் உறங்கிய தமிழ் மகன் கலவரத்திற்குப்பின் நெஞ்சில் நெருப்பைத் தாங்கிக் கண்ணுறங்க முடியாமல் கையைத் தலைக்கு வைத்து ஏதிலிகள் கொட்டடியில் வானைப் பார்த்துப்பெருமூச்சு விடுகிறான். தமிழர்களின் கடைகள், தொழிற்சாலைகள், வீடுகள் அனைத்தையும் 'அக்கினிக் குஞ்சுகள்' இழித்து மகிழ்ந்தன. அத்தனைப்பேரழிவுகள் நிகழ்ந்தும் உள்ளமில்லா செயவர்த்தனே வருத்தங்கூடத் தெரிவிக்கவில்லை. இஃது உள்நாட்டுச்சிக்கல் எனக்கூறி இந்தியாவை வசை பாடத்தொடங்கினர் தமிழகமோ காழறும் எரிமலையாகிக் கொந்தளித்தது. தமிழக மக்களின் உயிர் மூச்சில் நெருப்புதிர்ந்தது. தமிழக அரசு முழு வேலை நிறுத்தத்தை மேற்கொண்டது. நடுவண் அரசும் தொடர்வண்டிகளை நிறுத்தி ஒத்துழைத்தது. தாய் நாட்டுத் தமிழ் மக்கள், பேய் நாட்டுச் சிங்களரைத் தாக்கிக் கடலிலெறியச் சிறகில்லையே எனத் துடித்தார்கள். 'இந்துமாக் கடலே! இன்னுமா உறக்கம்! நெஞ்சமில்லா அரக்கரை அழிக்காமல் என்ன வேலை? உன்னால் முடியாது! ஒதுங்கி வழி விடு!' என ஏங்கியழுதார்கள். தமிழ் மாந்தர் முழக்கம் தலைநகரை உலுக்கியது. இந்தியத் தலைமை அமைச்சர் எச்சரிக்கை விடுத்தார். இதுவோ சாட்டையின் சொடுக்கு. இறங்கியது இலங்கை அரசின் மிடுக்கு.

உள்நாட்டுச் சிக்கலா?

இலங்கையில் நடப்பது உள் நாட்டுச் சிக்கல் என்று ஒதுக்க முடியாது; ஒதுக்கவும் கூடாது. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இலங்கை மண்ணை வளப்படுத்த உழைத்தவன் தமிழன். இலங்கை மண்ணோடு அவன் வாழ்வு பின்னிப் பிணைந்தது. வல்லாண்மையின் வேரறுத்து இலங்கை விடுதலை பெறச் சிங்களவரோடு கைகோத்து நின்றவன் தமிழன். ஈக வடுக்களைப் பெற்றவன் தமிழன். இலங்கையிலிருந்து தமிழர்களை வெளியேற்றினால், புலம் பெயர்ந்த அவர்களுக்குப் மறு வாழ்வளிப்பது தமிழகத்திற்கும் இந்தியாவிற்கும் சிக்கல் இல்லையா? ஒரு நாட்டின் செயல் இன்னொரு நாட்டின் செயலைத் தாக்கும் போது உள்நாட்டுச் சிக்கல் என்று ஒதுங்கி விட முடியுமா? தென்னைப் பிரிக்க அரசின் இனப் படுகொலையை இந்தியா கண்டிக்கவில்லையா? அந்த அரசைத் தனிமைப்படுத்த இந்திய அரசு முன்வினை எடுக்கவில்லையா? எனவே இலங்கை அரசின் வெறித்தனத்தை இந்திய அரசு வன்மையாகக் கண்டிக்க வேண்டும். ஏனைய அரசுகளுடன் இலங்கை அரசுக்குள்ள உறவைத் துண்டிக்கவும் முயல வேண்டும். இவ்வளவுக்கும் மேலாக இந்தியப் படையை இலங்கைக்கு அனுப்பித் தண்டிக்கவும் வேண்டும். படைகளை அனுப்ப இயலாவிட்டாலும் எந்தமிழர் கடல் கடக்கக் 'கண்குறிப்புக் காட்ட வேண்டும். கட்டாரியும், கைக்குண்டுமே காட்டேரிகளை அழிக்கப் போதும். வல்லாண்மைகளுக்குத் தனது நாட்டில் இடங்கொடுக்கக் கதவைத் திறந்து வைத்துள்ள இலங்கை அரசு இந்தியாவிற்கு என்றுமே சிக்கல்தான். செயவர்த்தனே அரசின் போக்கு இந்தியத் தலைக் கண்டத்தின் பாதுகாப்பிற்கும் உரிமைக்கும் எதிரானவே. பங்களாதேசச் சிக்கலில் 'முக்தி வாகினி' வெல்ல வகை புரியவில்லையா? படைகள் நுழையவில்லையா? இன்னும் என்ன இழுபறிப் பேச்சு? இனியுமா இழக்க, தமிழர் தம் மூச்சு?

பரணி கண்ட தமிழினமே! ஒரணி சேர்ந்து நில்லுங்கள்!

இலங்கை மண்ணில் எதிரும் புதிருமாக உள்ள தமிழின மக்களும் இந்தியப் பரம்பரை இலங்கைத் தமிழரும் ஒன்று சேரல் வேண்டும், இலங்கையில் சிலரின் பேராயத் தொழிலாளர் கட்சியின் மிகப் பெரிய ஆற்றலாக மின்னிக் கொண்டிருக்கும் தொண்டமான் தமிழர்களோடு இணைந்து செயல்பட முன்வர வேண்டும். தமிழினத்தின்பால் நேசக்கை நீட்டும் சிங்களவரையும் சேர்த்துச் செயல்பட வேண்டும். இலங்கையில் தமிழின மக்கள் மாபெரும் ஆற்றலாக உருவாகி மணம் பரப்ப வேண்டும். இனியும் ஒதுங்கியிருப்பது உகந்ததன்று. உயிரிழந்தவர் எண்ணிக்கை இனியாவது ஒழியட்டும். உங்களின் கைகளும், கால்களும் உரம்பெற்று மீளட்டும். காலம் வரும்போது கடலில் தூக்கியெறியுங்கள் கயவர் கூட்டத்தை. கண்ணீர்க் கடலில் குளித்தது போதும். கண்மணித் தமிழர் செத்தது போதும். தொடர்கதை இனியும் தொடருதல் நன்றோ? தூயவர் நெஞ்சில் அமைதியும் என்றோ? எங்கள் நெஞ்சங்கள் உங்கள் பக்கம். இமயமே எழுக! இனியொரு முறை செய்க!

'சங்கம் சரணம் கச்சாமி!'

— நன்றி : 'ஆசிரியர் குரல்' (15—10—83)

பார்ப்பன அமைச்சர்

1967 முதல் தமிழக அமைச்சரவையில் பார்ப்பன அமைச்சர் ஒருவர்கூட இருந்ததில்லை. முதன்முதல் 1979-இல் ம.கோ. இராமச்சந்திரன் (எம்.சி.ஆர்) தான், அண்டே பார்ப்பனரைத் தம் அமைச்சரவையில் சேர்த்துத் தமிழக வரலாற்றுக்கே ஒரு வலுக்குறையை ஏற்படுத்தினார்.

- முதல் ஐரோப்பியச் சொற்பொழிவுகளில் பாவலரேறு

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் முதல் ஐரோப்பியச் சுற்றுச் செலவு!

(நாள் வரிசைச் செயல்விளக்கம்!

எண் :	நாள் :	நேரம்	செயல்விளக்கம்
(1)	10-9-83	காலை 5-30	சென்னையிலிருந்து இந்தியன் வானூர்தி வழித் தில்லி புறப்பாடு.
(2)	,,	காலை 11-30	தில்லி பாலம் வானூர்தி நிலையம் அடைதல்.
(3)	,,	காலை 12 முதல் இரவு 8 வரை	பேரா. கிருட்டிண குமாருடன் தில்லி நகரைச் சுற்றிப் பார்த்தல்.
(4)	,,	இரவு 8-30	திரு. விநோதுடன் இரவு உணவு.
(5)	,,	இரவு 12-00	தில்லியிலிருந்து பிரான்சு வானூர்தி வழி பிரான்சு புறப்பாடு.
(6)	11-9-83	காலை 6-10 (பிரான்சு நேரம்)	பிரான்சு வானூர்தி நிலையம் சேர்தல். மணி 9 வரை வானூர்தி நிலையப் பொத்தகக் கடையில் நூல்களைப் பார்வையிடல்.
(7)	,,	காலை 9-10 (பிரான்சு நேரம்)	வானூர்தி வழி இலண்டன் புறப்பாடு.

இலண்டன் நிகழ்ச்சி

எண் :	நாள் :	நேரம்	செயல்விளக்கம்
(8)	,,	காலை 9 00 (இங்கிலாந்து நேரம்)	இலண்டன் வானூர்தி நிலையம் சேர்தல், அன்பர்கள் வரவேற்பு.
(9)	,,	பிற்பகல் 3 வரை	வீரசிங்கம் வீட்டில் ஓய்வு.
(10)	,,	பிற்பகல் 4 முதல் 8 வரை	வீரசிங்கம் வீட்டில் தமிழர் முன்னேற்றக் கழக அன்பர்களுடன் கலந்துரையாடல்.
(11)	12-9-83	காலை 6	பிரான்சு புறப்பாடு. (மகிழுந்து கப்பல் வழியாக)

பிரான்சு நிகழ்ச்சிகள்

எண் :	நாள் :	நேரம்	செயல்விளக்கம்
(12)	12-9-83	பிற்பகல் 5-30	பிரான்சு - உ.த.மு.க. அமைப்பாளர் அரிமா வளங்கோ வீடு சேர்தல். (செர்சி)
(13)	12-9-83	பிற்பகல் 6-30 முதல் இரவு 9-30 வரை	அரிமா வீட்டில் - தமிழீழ ஒருங்கிணைப்புக் குழுவுடன் தமிழீழச் செய்திகள் பற்றிய கலந்துரையாடல்.
(14)	13-9-83	முற்பகல் பிற்பகல் (இரவு 10-30 வரை)	ஓய்வு அரிமாவுடன் பாரீசு நகரத்தைச் சுற்றிப் பார்த்தல்.
(15)	14-9-83	முற்பகல்	முகுந்தன் தம்பிகள் யோகேசுவரன், தியாகேசுவரன் ஆகியோருடன் தொலைபேசி வழித் தொடர்பு.
(16)	,,	பிற்பகல்	பாரீசில் - கோன்கூர் (GONCOURT) பகுதியில் வளனூர் வளாகத்தில் நடந்த செய்தியாளர் கூட்டத்தில் பேசுதல் - (வீரமணி பங்கேற்பு.)
(17)	15-9-83	முற்பகல்	அரிமா வீட்டில், இலண்டன், செருமனி அன்பர்களுடன் தொலைபேசி வழித் தொடர்பு கொண்டு நிகழ்ச்சிகள் அமைப்பது பற்றி விளக்குதல்.
(18)	,,	மாலை 7 மணி முதல் இரவு 1 மணி வரை	உ.த மு.க. பிரான்சுக் கிளைத் துணைத்தலைவர் திரு. பொற்செழியன் வீட்டில் கலந்துரையாடலும், இரவு விருந்தும்.
(19)	16-9-83	முற்பகல்	அரிமா வீட்டில்,மடல்கள் எழுதுதல். முகுந்தன் தம்பிகள், யோகேசுவரன்,தியாகேசுவரன்,பிரான்சுக்கிளை த.ம.வி.க. அமைப்பாளர் ஞானம், இராணி ஞானம், இரஞ்சிதம், செயச்சந்திரன் இவர்களுடன் தமிழீழச் செய்திகள் பற்றிக் கலந்துரையாடல்.
(20)	,,	பகல்	வீரமணி, குப்புசாமி, தேவசகாயம், பத்மநாபன் இவர்களுடன் அரிமா வீட்டில் விருந்து.
(21)	,,	பிற்பகல்	பாரீசில்-தமிழீழ விடுதலை மாநாடு. (வீரமணி பங்கேற்பு.)
(22)	,,	இரவு 1 வரை	வீரமணி குழுவினருடன் செழியன் வீட்டில் விருந்து.
(23)	17-9-83	முற்பகல்	அரிமா வீட்டில் சில தொலைபேசித் தொடர்புகள்.
(24)	,,	பகல் 12	பாரீசு-பெரியார் விழாவுக்குப் புறப்படல்.
(25)	,,	மாலை 6	உ.த.மு.க. தொடக்கவிழா-பெரியார் 105-ஆவது பிறந்தநாள் விழா. (வீரமணி பங்கேற்பு) (பேரா. சதாசிவம் இலண்டனிலிருந்து வந்து இணைந்து கொண்டார்.)
(26)	,,	இரவு 10	பாரீசு தமிழீழ ஒருங்கிணைப்புக்குழு (T.C.C) அலுவலகத்தில் தமிழீழ அன்பர்களுடன் வீரமணியோடு கலந்துரையாடல்.
(27)	18-9-83	காலை 6-30	வீரமணி குழுவினர் இலண்டன் புறப்படல்-அவர்களுடன் தொலைபேசி வழித் தொடர்பு கொண்டு வழியனுப்பல்.
(28)	,,	முற்பகல்	சுவிட்சர்லாந்து போகும் நாள், அங்குள்ள அன்பர்களுடன் தொலைபேசி வழி பேசி முடிவு செய்யப் பெற்றது.
(29)	,,	பகல் 12 முதல் 2 வரை	த.ம.வி.க. பிரான்சுக்கிளை அமைப்பாளர் ஞானத்துடனும் முகுந்தன் தம்பி யோகேசுவரனுடனும் நெப்போலியன் அரண்மனையைச் சுற்றிப் பார்த்தல்.
(30)	,,	பிற்பகல் 2½ முதல் 4½ வரை	ஞானம் வீட்டில் உணவும் ஓய்வும்.
(31)	,,	இரவு 6 முதல் இரவு 11 வரை	ஏரம்பு வீட்டில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழக அன்பர்கள் கூட்டத்தில் கழகக் கொள்கைகள் செயற்பாடுகள் குறித்துப் பேச்சு.
(32)	,,	இரவு 1 மணி	அரிமா வீட்டில் ஓய்வு. (14-ஆம் பக்கம் தொடர்ச்சி.)

உ.த.மு.க.
உறவு மடல்.

நமக்குள் —

தமிழன் ஓரினம். அவனுக்கு ஒரு தேசியம் உண்டு. இதனை நாம் ஏற்கிறோம். தமிழ் பேசுவதால், தமிழ் நாட்டில் வீடு, வாசல், சொத்து——காணி, நிலம் என்றிருப்பதால் மட்டும் ஒருவன் தமிழன் ஆவதில்லை. அவன் குருதியோட்டத்தை அளக்க நாம் வைத்திருக்கும் அளவுகோல் அவனது நடைமுறையே!

'தமிழினம்' என்று கூறிக் கொண்டு,
தமிழர்களைச் சுரண்டுகிறவன் —
தமிழர்களைச் சுட்டுத் தள்ளுகிறவன்
தமிழர்களை எற்றி வாழ்பவன் —

எவனையும் நாம் ஒப்புக் கொள்வதில்லை! அப்படியே, அடிமைப்பட்டுக் கிடப்பதையும் போராட்ட மறுப்பையும் நாம் எதிர்க்கிறோம். அவ்வாறே, அடிமைப் படுத்துவதையும் அடங்கிப் போவதையும் வெறுக்கிறோம்!

'நாம்' என்பது 'தமிழினம்' எனத் தலைதூக்கிப் பேசுவது — "உழைக்கும் மக்களையே – தொழிலாளர்களையே - கூலிகளையே!" இவர்களே 'தமிழினத்தின்' ஊற்று மூலம்; ஆற்றல் மூலம்!

தமிழரின் கண்ணோட்டம் புதியது — வெறும் மாந்த நேயக் கூட்டுக்குள் மட்டும் குறுகி விடுவதன்று-இது போராடிப் போராடிப் பொதுமையைப் பெற்றளிப்பது!

'தமிழன்' என்றதும் நமது 'இந்து' என்ற சமயவுணர்ச்சி சரிந்து விடுமே என்கின்றவர்களும் — —

முசுலீம், கிறித்தவன் என்பதற்கு ஆதரவாகப் போய்விடுமே என்று கசங்குகிறவர்களும் ———

'இந்தியன்' என்ற 'பாரதியன்' என்ற உணர்வு பட்டுப்போய் விடுமே எனப் பதைப்புறுகிறவர்களும்—

'வர்க்கப் போராட்டத்திற்குத் தமிழன் என்ற உணர்ச்சி தடையாகி விடுமே எனக் கவலைப்படுகிறவர்களும் — —

'தேசிய உணர்ச்சி'யின் எல்லைக் கோடுகளை, மறந்து போய் விடுகிறார்கள்!

தேசியம், தனித்து வாழும் உரிமையைப் போராடிப் பெற விரும்புகிற நாம் 'வர்க்கப் போராட்டத்தை' என்றும் கைவிடக் கோருபவர்கள் ஆகோம்! நாம் பாட்டாளிகளின் தலைமையை ஏற்கிறோம்;— அதற்கான தன்னுணர்ச்சியைத் தேசியக்கனல் கொண்டு எழுப்புவோம்!

நாம் ஆங்கிலரிடமிருந்து இந்திய விடுதலைக்காக 'வல்லரசின்' வலிய பிடியை எதிர்த்து நிற்கத் தவறிய வரலாற்றிலிருந்து படிப்பினைப் பெற்றவர்கள்!

'தெலிங்கானாப் போராட்டத்தை'க் கைவிட மறுத்த மக்களின் போராட்ட வளர்ச்சியிலிருந்து நாம் புயலாக வேண்டுமெனப் புரிந்து கொண்டவர்கள்.

வ.உ.சியை, பகத்சிங்கைப் புறந்தள்ளி விட்டுப் பதவிக்காகக் 'காந்தியம்' பேசிச் சுரண்டுகிறவர்களின் 'கேடயம்' ஆனவர்களிடமிருந்து எச்சரிக்கை பெற்றவர்கள் நாம்!

தேசியம் சாதியன்று; ஏன் மதமும் அன்று. அது வளர்ச்சி பெற்ற எழுச்சியுற்ற மக்களின் பண்பாட்டின் சாரம். அதன் விரிவடையும் உலகக் கண்ணோட்டத்தை வளர்த்தெடுக்கும் பொறுப்பேற்கிறவர்கள் நாம்!

ஈழத்தில் தமிழினப் படுகொலை—அங்கே ஒரு விடுதலை இயக்கம்—— கருநாடகத்தில் தமிழர் மேல் தாக்குதல். அங்கே ஒரு தமிழர் முன்னணி!

தமிழகத்தில்——! இப்படி ஏற்பட்டு வரும் போராட்டம் பற்றியெல்லாம் நாம் ஆய்வு செய்தல் வேண்டும். அதே வேளை, நமக்குள்' உள்ள சிக்கல்களைத் தீர்க்க போராடும் வழிகளை மேற்கொள்ள வேண்டும்.

நாம் 'தமிழினப் போராளிகளை' அடிப்படை உழைக்கும் தொழிலாளரிடமிருந்து பெறுதல் வேண்டும்.

மக்கள் எதிரிகளை முறியடிக்க வேண்டும்.
'தமிழின' முன்னேற்றத்திற்குப் பிற இன விடுதலையை வரவேற்க வேண்டும்.
அதற்காக ஒன்றிணைந்து போராட வேண்டும்.

தமிழகத்திலும், பிற 'மாநிலத்தும்', நாட்டகத்தும் வாழும் தமிழ் முதலாளிகள், 'தமிழின உணர்ச்சியை' மூலச் சரக்காக்கித் தங்களின் அரசியல் வணிகத்தை நடத்தும் தரகுக் கொள்ளையர்களாக உள்ளார்கள்.

(தொடர்ச்சி 14-ஆம் பக்கம் பார்க்க)

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்…—

(தொடர்ச்சி)

(33)	19-9-83	முற்பகல்	பாரிசு-அரிமா வளங்கோவுடன் சுவிசு தூதரகம் சென்று நுழைவிசைவுக்கு முயற்சி.
(34)	,,	பிற்பகல்	அரிமாவுடன் பாரிசு நகரைச் சுற்றிப் பார்த்தல்.
(35)	,,	இரவு 12	அரிமா வீட்டில் ஓய்வு.
(36)	20-9-83	முற்பகல்	சுவிசு தூதரகத்தில் நுழைவு இசைவு பெறல். செருமனி தூதரகத்தில் பணி.
(37)	,,	பகல் 2 முதல் 5½ வரை	சர்செல் பகுதி சென்று ஆபிரகாம்-லில்லி வீட்டில் உணவும் சிறிது ஓய்வும்.
(38)	,,	மாலை 7	உ.த.மு.க. செயலாளர் சம்பத்து வீட்டில்-செருமனி வருவதுபற்றித் தொலைபேசித் தொடர்பும்—அன்பர்களுடன் கலந்துரையாடலும்.
(39)	,,	இரவு 9½	சம்பத்து வீட்டில் விருந்து.
(40)	,,	இரவு 12 முதல் 1½ வரை	தீவிரத் தமிழீழப் போராளியும், குட்டிமணியுடன் சேர்ந்து அவரின் விடுதலை இயக்கம் தொடங்கக் காரணமாயிருந்தவரும் ஆகிய நித்தியானந்தம் வீட்டில் கலந்துரையாடல்
(41)	,,	இரவு 2	அரிமா வீட்டில் ஓய்வு.
(42)	21-9-83	முற்பகல்	செருமனி தூதரகத்தில் பணி.
(43)	,,	பிற்பகல் இரவு 10 வரை	மோம்பர்னசு. இலக்சம்பர்க். செயின்ட் இலாசர். செயின்ட் தெனிசு, 'கண்டா',—பகுதிகளையும், செயின்ட் அகுத்தின் பகுதியில் சம்பத்து பணியாற்றும் அலுவலகத்தில் உள்ள பட அச்சுப் பொறிகளையும் அரிமாவுடன் பார்வையிடல்.
(44)	,,	இரவு 12	அரிமா வீட்டில் உணவும் ஓய்வும்.
(45)	22-9-83	முற்பகல்	அரிமாவுடன் செர்சி பகுதியில் உள்ள கல்லறையையும் ஆப்பிள் தோட்டத்தையும் பார்த்தல்.
(46)	,,	பிற்பகல்	செருமனிக்கும் இலண்டனுக்கும் தொலைபேசிவழித் தொடர்பு கொண்டு வருகை பற்றியும் நிகழ்ச்சிகள் பற்றியும் உறுதி செய்தல்.
(47)	,,	மாலை	செர்சி பகுதியில் உள்ள குடியிருப்புகளைப் பார்த்தல்.
(48)	,,	இரவு 10	தொடர் வண்டி வழி செருமனி புறப்படல். Gare-da-Les t தொடர் வண்டி நிலையம் வந்து அன்பர்கள் வழியனுப்புதல்.

செருமனி நிகழ்ச்சிகள்

(49)	23-9-83	காலை 7	மேற்கு செருமனியில் உள்ள Stutt Gart தொடர் வண்டி நிலையம் சேர்தல். தமிழீழ அன்பர்கள் வரவேற்பு.
(50)	,,	காலை 6 முதல் 8 30 வரை	தமிழீழ அன்பர்களைக் காவலர்கள் பிடித்துக் கொண்டதால்-அவர்களுடன் காவல் நிலையத்தில் ஆய்வுகளுக்கு உட்படல்.
(51)	,,	காலை 9	Heil Bronn. மகிழுந்தில் புறப்பாடு.
(52)	,,	காலை 10-30 முதல். பகல் 2 வரை	Heil Bronn சேர்தல். ஓய்வு.
(53)	,,	பகல் 2	குண்டல்சு அய்ம் புறப்பட்டுப் போய்ச் சேர்தல்.
(54)	,,	பிற்பகல் 3	அன்பர்களைச் சந்தித்துப் பேசுதல்.
(55)	,,	பிற்பகல் 3½	குண்டல்சு அய்ம் விக்னேசுவரன் வீட்டில் பகல் உணவருந்துதல்.
(56)	,,	மாலை 5 முதல் 7 வரை	குண்டல்சு அய்மில் உள்ள பழப்பதப்படுத்தல் தொழிற்சாலையைச் சுற்றிப் பார்த்தல்.
(57)	,,	இரவு 9 முதல் 12 வரை	- விக்னேசுவரன் வீட்டில் உணவும் த.ம.வி.க. அன்பர்களுடன் உரையாடலும்.
(58)	,,	இரவு 1	- மீண்டும் எயில் பிரான் சென்று ஓய்வு கொள்ளல்.
(59)	24-9-83	காலை 5-30	பிரான்சு உ.த.மு.க. தலைவர் அரிமாவுடனும் செருமனி மணிசேகரனுடனும் தொலை பேசித் தொடர்பு.
(60)	,,	முற்பகல்	- செருமனி த.ம.க. அமைப்பாளர் பரமாவுடனும் அன்பர்களுடனும் கலந்து பேசி செருமன் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்.
(61)	,,	பகல் 1	பேரா. தாமோதரனைச் சந்திக்க அய்டில்பர்க் செல்லுதல். (பேரா. தாமோதரன் த.ம.க.த்திற்குத் துணையாக நிற்பவர்.)
(62)	,,	பிற்பகல் 5-30	மீண்டும் எயில்பிரான் செல்லுதல்.
(63)	,,	மாலை 6-30	குண்டல்சு அய்ம் புறப்பாடு.
(64)	,,	மாலை 7	குண்டல்சு அய்மில் த.ம.வி.க. கூட்டம்.
(65)	,,	இரவு 11	நிகழ்ச்சி முடிவு.
(66)	,,	இரவு 11-30	தமிழீழ உணர்வுள்ள யூடாகா மர்சியாமா என்னும் பர்மிய அமெரிக்கர்க்கு நேருரை அளித்தல்.
(67)	,,	இரவு 12-30	விக்னேசுவரன் வீட்டில் உணவு.
(68)	,,	இரவு 1	- எயில் பிரான் சென்று அங்கிருந்து மீண்டும் குண்டல்சு.அய்ம் வந்து இரவே மகிழுந்தில் செருமனியின் தலைநகரான போன் (Bonn) செல்லுதல்.
(69)	25-9-83	விடியல் 4-30	போன் நகரம் சென்று ஓய்வு பெறுதல்.
(70)	,,	காலை 6-15	விழிப்பு. மடல்கள் எழுதுதல்,
(71)	,,	காலை 8	சிற்றுண்டிக்குப் பின் Hamm புறப்பாடு.
(72)	,,	காலை 10	Hamm-இல் த.ம.வி.க. நிகழ்ச்சி.
(73)	,,	பகல் 12-30	நிகழ்ச்சி முடிவு Hartmut Kohler என்னும் செருமானியர்க்கு தமிழீழம் பற்றிய நேருரை விளக்கம்.
(74)	,,	பகல் 1	பிரீமன் புறப்பாடு.
(75)	,,	பகல் 3-00	பிரீமன் சேர்தல்.
(76)	,,	பிற்பகல் 3-30 முதல் 5 வரை	பிரீமன் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகக் கூட்டம்.
(77)	,,	மாலை 6	அனோவர் புறப்பாடு.
(78)	,,	இரவு 8	அனோவர் சேர்தல்.
(79)	,,	இரவு 8-10 முதல் 11-30 வரை	அனோவர் த.ம.வி. கூட்டம். அனோவரில் எட்வர்டு வீட்டில் உணவு.
(80)	,,	இரவு 12	மீண்டும் போன் புறப்பாடு.
(81)	26-9-83	பின்இரவு 2	போன் சேர்தல். ஓய்வு.
(82)	,,	அதிகாலை 6	

(தொடரும்

இந்த நாடு எப்படி உருப்படும்?

ஒரு திரைப்படத்திற்கு (அஃது எப்படிப்பட்ட திரைப்படமாக இருந்தால்தான் என்ன?) ஒரு சட்டமன்றத்தின் தலைவர் பாராட்டி மடல் எழுதுகிறார் என்றால், இந்த நாடு எப்படி உருப்படும்! நாட்டைப் பற்றிச் சிந்தித்து நல்ல பல பணிகளை அவற்றுக்கான திட்டங்களைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்க வேண்டிய ஒருவர் திரைப்பட வருவாய்க்குத் துணைபோகின்ற வகையில், (திரைப்பட நடிகைகளைக் கொண்டு வழலை (சோப்பு) விளம்பரம் செய்வது போல்) விளம்பரந்தேடித் தருகிறார் ஒரு சட்டமன்றத் தலைவர்! இப்படிப்பட்ட சூழலில் அவர் மக்களைப் பற்றிக் கவனம் செலுத்துவது எந்தக் கோணத்தில் இருக்கும் அறிஞர்கள் சிந்திக்க வேண்டும். கீழே உள்ள படம் அவரின் மதிப்புரை(!)யைத் தாங்கி வந்துள்ளது. (வெட்கக்கேடு!)

(13-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

அங்குள்ள தமிழன்,

புதைகுழி எலும்பாகவும்,

தெருநாயிலுங் கேடாகவும் வாழக் கண்டும் அவனை விழிப்பூட்டி வளர்க்க விரும்பாத 'தலைவர்கள்' தமிழ் உணர்ச்சியை விற்றுப் பணம் பண்ணுகிறார்கள்'

'பண்பாட்டிழிவு— நாகரிகக் கேடு'

இவற்றின் மொத்தச் சுமையும் 'வெளிமாநிலத் தமிழர்களிடையே காண வருந்துகிறோம்!

இவற்றிற் கிடையே முகிழ்க்கும்.
போராட்ட அலை-
புத் தெழுச்சி
விடுதலை விருப்பம்

தமிழரின் நோக்கில் தெளிவும், போக்கில் துணிவும் ஏற்படுத்தி வருவதை அறிந்திருக்கிறோம்—இதனாலேயே,

உமி சிதறவும் விருப்பமின்றி
இன வுணர்ச்சியைத்
தேசியக் கனலால் வலுவூட்டி வருகின்றோம்!

அந்த வகையில்,

நாம் அக நோக்காகவும்
புறப் பார்வையாகவும் செயல்பட
அணிய மாவோம்!

— பறம்பை அறிவன்

தமிழீழக் கோரிக்கை-சிந்திப்பதற்கு!

தமிழீழக் கோரிக்கைக்கு நேரடி ஆதரவு தராமல் காலத்தாழ்த்தத்தால் மெலிவுபடுத்துவதன் மூலம் இந்திராகாந்தி, தமிழினத்தையே ஆரியத்துக்கு நிலையான அடிமையினமாக ஆக்கப் பார்க்கிறார்.

இந்த வகையில் அவர்க்கு ஆதரவாக இருக்கும் அல்லது இயங்கும் எந்தத் தமிழனும் தமிழினப் பகைவனே!

தமிழினத்திற்கென்று ஒரு தனிநாடு தேவை என்னும் கோரிக்கை திசைதிருப்பப்படுமானால், இனி, எந்தக் காலத்திலும் தமிழினம் தன்னை முழுமைப் படுத்திக்கொள்ள முடியாது!

— முதல் ஐரோப்பியச் சொற்பொழிவுகளில் பாவலரேறு

தமிழகப் பகுதிகளில் சிங்களவர் குடியேற்றம் விரைந்து நடைபெறுகிறது!

இலங்கையில் தமிழர் இன அழிப்பு முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வரும் இவ்வேளையில், தமிழர் வாழ்கின்ற பகுதிகளில் சிங்களவர்கள் அமைச்சர்களாலும் அரசு அதிகாரிகளாலும் விரைந்து குடியேற்றப் படுவதாகச் செய்திகள் கூறுகின்றன.

குடியேற்றப்படும் பகுதிகளில் உள்ள தமிழர்கள் அங்கிருந்து குடும்பம் குடும்பமாக ஈவு இரக்கமின்றி விரட்டியடிக்கப்படுகிறார்கள். அண்மையில் கொடுமைப்படுத்தப்பட்டு ஏதிலிகளான தமிழர்களுக்கென்று உலக நாடுகளால் அனுப்பிவைக்கப்பட்ட துணிமணிகள், உணவுப் பொருட்கள், மருந்துகள் முதலிய உதவிப் பொருட்கள், புதிதாகக் குடியேற்றப்பட்ட சிங்களவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றனவாம்.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வடமுனை, காளிச்சை, மடவாளை ஆகிய பகுதிகளிலும், வவுனியா மாவட்டத்திலும், திருமலை மாவட்டத்திலுள்ள பன்குளப் பகுதியிலும் இவ்வாறு சிங்களவர்களை அரசே ஊக்கப்படுத்திக் குடியேற்றியிருக்கிறது. இவ்வகையில் சிங்கள அமைச்சர்களான லலித் அத்துலத் முதலியும், சிறில் மத்தியும், காமினி திசநாயக்காவும் மிகுந்த அக்கறையும் ஆர்வமும் காட்டி வருவதாகச் சொல்லப்படுகிறது.

ஃ ஃ ஃ

பேரா. மு. தமிழ்க்குடிமகனார் பண்டாரகர் பட்டம் பெற்றார்!

முன்னாள் 'தென்மொழித்' துணையாசிரியரும், இந்நாள் மதுரை, யாதவர் கல்லூரி முதல்வரும், சிறந்த சொற்பொழிவாளரும், தமிழறிஞரும் ஆகிய பேரா. மு. தமிழ்க்குடிமகனார், 10 ஆண்டுத் தமிழ்க் கவிதைகள் (196 -76)' என்னும் தலைப்பில், திறம்பட ஆய்வு செய்து, மதுரை, காமராசர் பல்கலைக் கழகத்தால் பண்டாரகர் (டாக்டர்) பட்டம் பெற்றுள்ளார் என்னும் செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவர் மேலும் பல ஆய்வு நூல்களை எழுதியும், தமிழ்த் தொண்டு, தமிழினத் தொண்டு செய்தும், பெயரும் புகழும் பெற்றுச் சீரும் சிறப்பும் எய்த வேண்டும் என்று நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகின்றோம்!

—ஆசிரியர்

மு.கா. நாகமலையார் அறக்கட்டளை பரிசுப்போட்டி-முடிவு

தமிழ்நிலம் இதழெண் 18 (தொகுதி-1; பகுதி 24-25)-இல் வெளிவந்த, மு. கா. நாகமலையார் அறக்கட்டளையின் சார்பில், தென்மொழி நா. இளமாறன் அவர்கள் அறிவித்திருந்த

வில்லுப்பாட்டு, தெருக்கூத்து

—இவற்றின் புதிய படைப்புகளுக்கான பரிசுப் போட்டியின் முடிவு, கீழ்வருமாறு அறிவிக்கப் பெறுகிறது.

வில்லுப்பாட்டுப் போட்டி

முதல் பரிசு உருபா 300 பெறுபவர்:
பாவலர் திரு. கல்லை. அருட்செல்வன்.
ஆசிரியர்.
சுள்ளெறும்பு— 6 24710
வேடசெந்தூர் வழி, திண்டுக்கல் வட்டம்.

2-ஆம் பரிசு உருபா. 200 பெறுபவர்.
பாவலர், தமிழேறு திரு. க. இராயவேல்
36, நாராயணப்ப தோட்டம்.
7-ஆவது சந்து, சென்னை-21.

தெருக்கூத்துப் போட்டியில் எவரும் கலந்துகொள்ளவில்லை.

பரிசுத் தொகைகள் 'தமிழ்நிலம்' அலுவலகத்தின் வழி விரைவில் அனுப்பிவைக்கப்பெறும்.

பரிசு பெற்ற தமிழ் நெஞ்சங்களுக்கு மிக்க நன்றி.

அவர்களின் வில்லுப்பாடல்கள் தமிழின மீட்புக்காக விரைவில் அரங்கேற்றப் பெறும்.

தென்மொழி. நா. இளமாறன்.
மு.கா. நாகமலையார் அறக்கட்டளை.
குதிரைக்கல் மேடு, பவானி-638302.

'பாவலரேறு' அவர்கள் ஐரோப்பியச் சுற்றுச்செலவில் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள். (பட்டியல்)

(1)	11-9-83 பிற்பகல்	இலண்டன் வீரசிங்கம் வீடு	தமிழர் முன்னேற்றக்கழக அன்பர்களுடன் கலந்துரையாடல்.
(2)	12-9-83 பிற்பகல்	பிரான்சு-செர்சி அரிமா வீடு	தமிழீழ ஒருங்கிணைப்புக் குழுவுடன் தமிழீழச் செய்திகள் பற்றிய கலந்துரையாடல்.
(3)	14-9-83 மாலை	கோன்கூர்-பாரிசு -பிரான்சு	செய்தியாளர் கூட்டத்தில் பேசுதல் (வீரமணியுடன்.)
(4)	16-9-83	பிரான்சு-பாரிசு	தமிழீழ விடுதலை மாநாடு- (வீரமணியுடன்).
(5)	17-9-83 மாலை	பாரிசு	- பெரியார் விழா உ.த.மு.க. தொடக்கவிழா வீரமணியுடன்)
(6)	,, இரவு	,,	- தமிழீழஒருங்கிணைப்புக் குழு அலுவலகம் பார்வையிடல். வீரமணியுடன்.)
(7)	18-9-83 மாலை	பிரான்சு (ஏரம்பு வீட்டில்)	தமிழீழ மக்கள் விடுதலைக் கழக அன்பர்களுடன் கலந்துரையாடல்.
(8)	24-9-83 மாலை	செருமனி (சுண்டர்சு அய்ம்)	தமிழீழ மக்கள் விடுதலைக் கழகக் கூட்டம்.
(9)	25-9-83 காலை	செருமனி (ஆம்)	தமிழீழ மக்கள் விடுதலைக் கழகக் கூட்டம்.
(10)	,	பிற்பகல் 3-30மணி	பிரிமன் , ,
(11)	25-9-83	இரவு 8 மணி (அனோவர்.)	அனோவர் த.ம.வி.க.கூட்டம்
(12)	27-9-83 மாலை5-30	செருமனி	(என்னபெடால் ஷை
(13)	இரவு	-Dortmund-	தமிழீழத் தோழர்களுடன் கலந்துரையாடல
(14)	29-9-83 மாலை	(செருமனி) பெர்லின்	உ.த மு.க. தொடக்க விழா.
(15)	30-9-83 மாலை	பெர்லின் (செருமனி)	தமிழீழ மக்கள் விடுதலைக்கழக அன்பர்கள் கலந்துரையாடல்.
(16)	3-10-83 மாலை	சுவிட்சர்லாந்து Worflaufe BERN)	தமிழீழமக்கள் விடுதலைக்கழகத் தோழர்கள் கூட்டம்
(17)	5-10-83 மாலை7மணி	இங்கிலாந்து South Hall	விஜேபா வீடு தமிழீழ விடுதலைக் கழக அன்பர்கள் கலந்துரையாடல்
(18)	6-10-83 இரவு	இலண்டன் (சீனிவாசன் வீட்டில்)	தமிழீழ மக்கள்விடுதலைக்கழக அன்பர்களுடன் கலந்துரையாடல.
(19)	7-10-83 மாலை	இலண்டன் (West End)	பாரதி வித்தியாலயதில் த.ம.வி.க கூட்டம்.
(20)	,, இரவு	Wimbledon	மாரியம்மன் கோயிலில் நிகழ்ச்சி.
(21)	8-10-83 மாலை	பிரான்சு	பெரியார் மலர் வெளியீட்டு விழா (உ த மு.க.) திரு வி.க. நூற்றாண்டு நினைவு விழா
(22)	9-10-83	பிரான்சு	தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் முத்திரை வெளியீடு விழா
(23)	10-10-83	,,	தமிழீழ விடுதலைப் பேரவை அலுவலகத்தில் கலந்துரையாடல் நிகழ்ச்சி
(24)	11-10-83	,, அரிமா வீட்டில்	வீல் பிரான்சுடன் தமிழக, தமிழீழ விடுதலை, தென்மொழி, தமிழ்நிலம் அச்சக வளர்ச்சி குறித்து உரையாடல்— அரிமா திருமண நினைவு நாள். ஆபிரகாம்-விமலி திருமண நினைவுநாள்

இலண்டன்—5 செருமனி—8 பிரான்சு—10 சுவிசு—1

உ.த.மு.க : 3 த.ம.வி.க: 19 பொது : 2

பெரியார் பிறந்த நாள் விழாவில் வீரமணி பேசுகிறார். பாவலரேறு மேடையில்.

கட்சி முதலாளிகள்

—தங்களிடம் வரும் நோயாளிகளைச் சுரண்டிக் கொழுக்கும்
மருத்துவர்களைப் போல்,

—நலிவுபட்ட வழக்காளிகளை
மொட்டையடிக்கும்
வழக்கறிஞர்களைப் போல்,

—அடிமைப்பட்டு, வறுமைப்பட்டு
அறியாமையில் மூழ்கிக்கிடக்கும்
மக்களை,
இங்குள்ள கட்சித் தலைவர்கள்,
மாநாடுகள் என்னும்பெயராலும்
தேர்தல்(நிதி) நன்கொடை
என்னும் பெயராலும்,
வழக்கு(நிதி) நன்கொடை
என்னும் பெயராலும்,
சுரண்டிக்கொண்டே
கோடி கோடியாய்த்
தங்கள் சொத்துகளைப் பெருக்கிப்
பெரிய பெரிய முதலாளிகளாகி
வருகின்றனர்.
இவர்கள் ஒரு வகையில்
பொதுவுடைமைக்
கொள்கைகளை எதிர்ப்பது
இதனால் தானோ?

—'ஈட்டி'

இரண்டு மலர்கள்!

எழுச்சி

தந்தை பெரியார் 105-ஆவது பிறந்தநாள் பெருவிழா மலர்.

அண்மையில் (மடங்கல் உஎ, தி.பி. உ0கசு (12-9-83 இல) பிரான்சில் நடைபெற்ற தந்தை பெரியார் 105-ஆவது பிறந்த நாள் பெருவிழாவில் வெளியிடப் பெற்ற மலர்.

உயர்ந்த வண்ண, வெள்ளைத் தாள்களில், பட அச்சு முறையில உருவாக்கப்பெற்ற அழகிய மலர் இது. 100க்கும் மேற்பட்ட பக்கங்களும், விழாப் படங்களும் சிறந்த கட்டுரைகளும் கொண்ட இம் மலரை, பிரான்சு உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் வெளியிட்டுள்ளது.

∴ ∴ ∴

தமிழ்த்தென்றல்

திரு.வி.க.

நூற்றாண்டு விழாமலர்.

இலண்டன், தமிழர் முன்னேற்றக் கழகம், இலண்டனில் நடைபெற்ற திரு.வி.க. நூற்றாண்டு விழாவில் வெளியிட்ட மலராகும் இது.

நல்ல தாளில், திரு.வி.க வாழ்க்கை வரலாறு, அவரின் நூல் விளக்கங்கள் ஆகியவற்றுடன், பல்வேறு துறை அறிஞர்களின் கட்டுரைகள் பாடல்களுடனும் வெளியிடப் பெற்றுள்ள மலர் இது. ஏறத்தாழ 100 பக்கங்களைக் கொண்டது.

வெளியீ
தமிழர் முன்னேற்றக் கழகம்.
இலண்டன் : கிழக்கு-1 2

∴ ∴ ∴

ஐரோப்பியச் செலவு :

வாழ்த்தும் வழியனுப்பும்!

0 போற்றுதலுக்குரிய எங்கள் ஐயா,
வணக்கம்.

எங்கள் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு - பிரான்சு, தாங்கள் பெரியார் விழாவிற்கு வருகை தருவது அறிந்து பூரிப்படைகிறது .. தமிழகத்தின் தலைசிறந்த பேரறிஞராகிய தாங்கள் பிரான்சுக்கு வரும்போது பத்தாயிரத்திற்கு மேற்பட்ட தமிழீழ உள்ளங்கள்-தங்களிடமிருந்து சீரிய அறிவுரைகளையும், வழிகாட்டுதலையும் நாங்கள் எதிர் நோக்கியுள்ளோம்.

ஐயா அவர்கள், எங்கள் விடுதலை உள்ளங்களுக்குக் காலத்தால் கிடைத்த தலைமைத் துணை; விரைவில் தங்களை நேரில் கண்டு தமிழக-தமிழீழ விடுதலைச் செய்திகளை அறிந்து கொள்ளத் துடிக்கின்றோம்.

தண்டமிழ்த் தொண்டிற்கு—தமிழன்னை - தங்களுக்குத் தோன்றாத் துணையாக விருந்து தமிழுக்கு ஆக்கஞ் சேர்ப்பாளாக!

பாரீசு நன்றியுடன், அன்பு
19-6-83 செல்வா.
தமிழர் ஒருங்கிணைப்புக்குழு-பிரான்சு.

0 வணக்கத்திற்குரிய ஐயா அவர்களுக்கு,
வணக்கம்.

தங்கள் திருக்கைகளால் எழுதப்பெற்ற அன்பு மடலைக் கண்ணுற்று, உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் பிரான்சுக் கிளையை முறைப்படி கலந்து ஆராய்ந்து உருவாக்கியுள்ளோம்.

பெரியார் பெருவிழா பிரான்சிலும், திரு வி.க; விழா இலண்டனிலும் நடைபெற உள்ளன . தாங்கள் இலண்டனுக்கும் சென்று அங்குள்ள தமிழர்க்கும் (20,000 பேர்) தமிழீழ மக்களுக்கும் (20,000 பேர்) விடுதலை உரமிட்டு, அவர்கள் பயனடையுமாறு செய்ய விழைகின்றோம். செப்டம்பர் 17 இல் பிரான்சில் நடக்கவிருக்கும் பெரியார் விழாவில் கலந்து கொள்ள வருமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம். தங்களை நேரில் கண்டு பயன்பெறப் போகும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்றோம். நன்றி. அன்பு,

தமிழேந்தி, பிரான்சு

0 பெருந்தகையீர்! வணக்கம்.

தங்களின் ஐரோப்பிய உலா சிறப்புற வெற்றியும் நலனும் எய்த என வாழ்த்துகின்றேன்! பாராட்டுகிறேன்!

உங்கள் கனிவுள்ள,
இரா. வீரப்பன்
தலைமையகம் தலைவர்
கிள்ளான், மலேசியா உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்.

0 அன்புமிக்க நண்பர் பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு,

வாழிய நலம். தாங்கள் ஐரோப்பியச் சுற்றுச் செலவு செல்வதறிந்து மிகவும் மகிழ்ச்சியுற்றேன்.

தங்களின் ஈடு இணையற்ற தமிழ்மொழி இனத் தொண்டினை இலங்கை, மலேசியா போன்ற நாடுகள் மட்டுமல்லாமல், இங்கிலாந்து, செருமனி, பிரான்சு முதலிய மேனாடுகளும் உணர்ந்து வரவேற்றுப் பாராட்ட முற்பட்டிருக்கின்றன என்று நான் உணர்கின்றேன்

அகவை முதிர்ச்சியாலும் உடல் தளர்ச்சியாலும் வெளியே எங்கும் நடமாட்டம் இல்லை. வானூர்தி நிலையத்திற்கு வந்து தங்களை வழியனுப்ப இயலாத நிலையில் இருக்கிறேன். தங்கள் மேனாட்டுச் சுற்றுலா வெற்றிபெற வாழ்த்துகிறேன். அன்புள்ள,

சென்னை-94. நாரண. துரைக்கண்ணன்.
5-9-83

0 பேரன்புடைய ஐயா அவர்களுக்கு வணக்கத்துடன் எழுதிக் கொண்டது.

தங்களின் ஐரோப்பியச் சுற்றுச் செலவு குறித்து அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தோம்.

நம் தமிழின மக்களின் உண்மையான நிலைமையையும், தமிழ்மொழியின் பெருமையினையும் மேலை நாட்டார் அறிந்து கொள்வதற்கேற்ப, இச் சுற்றுச் செலவு அமையும் என்பதில் எனக்குச் சிறிதளவு ஐயமும் இல்லை.

திரு விவேகானந்தரின் அமெரிக்கச் சுற்றுச் செலவு இந்திய நாட்டு மக்களின் பெருமையையும் இல்லாததான இந்திய மதம் (இந்து மதம்) பெருமையையும் உலகறியச் செய்ததுபோல், அதைவிட மேலாக இச் சுற்றுச் செலவு, தங்களுக்கு-நம் இன, மொழி, நாட்டு நிலையை உலகறியச் செய்து, புகழினையும் பெருமையையும் ஈட்டித்தரும் வகையில் இயற்கையாக அமைந்தது எனக்கு மன நிறைவினையும் மகிழ்ச்சியனையும் தருகிறது.

தங்கள் சுற்றுச்செலவு மகிழ்வாகவும் சிறப்பாகவும் அமைய இறைவனிடம் விழைகின்றேன்.

திருச்சி-1. அன்பு
5-4-83 நா.ரா. மகிழ்நன்.

0 தென்மொழி ஐயா, வணக்கம்.

தங்களின் வெளிநாட்டுச் செலவு கண்டு பெரிதும் மகிழ்ந்தேன். உலகெலாம் தமிழன் நிமிர, தங்களின் ஒவ்வோரடியும் ஒவ்வோர் உயர்படியாம். தாங்கள் எல்லா நலமும் பெற்றுத் திரும்ப உளமார வாழ்த்துகின்றேன்.

அன்பு,
சாத்தனூர், 6-8-83 புலவர். மு. ஆறுமுகம்,க.மு.

0 அன்புடையீர், வணக்கம்.

ஐயா அவர்கள் ஐரோப்பியச் செலவு வெற்றி பெறவும், தமிழின விடிவுக்கு உறுதுணை செய்யவும் வாழ்த்துகின்றேன்.

அன்பன்,
சென்னை. 6-9-83. — அரு. கோபாலன்.

0 ஐயா, வணக்கம்.

தங்களின் ஐரோப்பியச் சுற்றுச் செலவு பயனுள்ள வகையிலும், வெற்றியளிக்கும் வகையிலும் அமைய எம் உளம் நிறைந்த நல்விழைவினையும், நல் வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்புசான்ற
காவேரி மின்நகர் தென்மொழி இளமாறன்
இளமாறன் நற்குணதேவி.

0 பேரறிஞர் பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு,
வணக்கம் மிகப் பல.

தாங்கள் வெளிநாடு செல்லும் செய்தியறிந்து பெருமகிழ்ச்சியடைந்தேன். தாங்கள் ஒரு வெற்றி வீரர். வெற்றிச் செலவு முடித்து இனிதே தாயகம் திரும்புவீர்களாக. தங்களைப் போன்ற உறுதியுடையவர்கள் இருப்பதால்தான், தமிழன் தலைநிமிர்ந்து வாழ முடிகின்றது.

நன்றி தெரிவித்தாலும் தெரிவிக்காவிட்டாலும், தமிழன் தங்களுக்கு என்றும் கடமைப்பட்டவனாவான். இலங்கைத் தமிழர்களின் இன்னலைத் துடைத்து, அவர்கள் நிலையான நல்வாழ்வு வாழ வழி காண்பீர்களாக!

தங்கள் அன்புள்ள,
சென்னை. 7-9-83. கோ. முத்து(ப்பிள்ளை)

0 பாவலரேறு ஐயா அவர்களுக்கு,

தங்களின் வெளிநாட்டுச் செலவு தமிழரும் அவர்தம் மொழியும் எல்லாச் சிறப்பும் அடையும்படி இறையருள் நிறைவு தருமாக! அன்புடன் வாழ்த்தும் புலவர். ச, சிவசங்கு, தலைவர்

ஏரல், நெல்லை புலவர். க. ஐயாத்துரை, க.மு;கல்.இ.
6-9-83 கொற்கைத் தமிழ் மன்றம்.

0 அன்புள்ள ஐயா,

வணக்கம் நலமே சூழ தமிழன்னையை வேண்டுகின்றேன். தங்களின் ஐரோப்பியச் சுற்றுச் செலவின் அறிக்கையைக் கண்ணுற்றேன். மிகவும் மகிழ்ச்சியாகவும் நிறைவாகவும இருக்கின்றது. வெளி நாடுகளில் வாழுகின்ற தமிழர்களின் செவிகளிலும் நெஞ்சுகளிலும் தேனாறு பாயப் போகின்றது.

தங்களுடைய வழிச் செலவு முழுமையான வெற்றியையும் நற்பயனையும் விளைவிக்க எல்லாம் வல்ல இறைப் பேராற்றலை வேண்டுகின்றேன்.

நன்றி அன்புள்ள, பொற்செழியன்
வெங்காலூர்
7-9-83.

0 என் அன்புக்கு உகந்த அண்ணவீர்!
கனிவார்ந்த கைகூப்பு!

நமது உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் செய்தியறிக்கை கண்டு கழிபேருவகை யடைந்தேன். தாங்கள் தமிழ்த்திருப்பணி மேற்கொண்டு ஐரோப்பியச் சுற்றுலா சென்றுவரத் திட்டமிட்டிருப்பது அறிந்து அகமிக மகிழ்கின்றேன். திரு வி. க. விழா தந்தை பெரியார் விழா போன்ற தமிழ்வளர் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வது இன்பம் அளிக்கின்றது. அங்காங்குள்ள தமிழினத்தவர் கழகங்கள், தமிழீழ விடுதலை அமைப்புகளிலும் ஈடுபாடு கொண்டு, தமிழுணர்வை வளர்க்க இருப்பதும் இன்பம் பெருக்கும் செய்தியாகும். உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கிளைகளை ஆங்காங்கே அமைக்க இருக்கும் அகங் களிப்பிக்கும் செய்தியையறிந்து உவகையால் உளந்துளும்புகின்றேன்.

பெரும்பயன் விளைவிக்கும் தங்கள் சுற்றுலா இனிது நிகழ்ந்து, நம் இருந்தமிழுக்குப் பெரும் பயனாக அமையுமென நம்புகின்றேன். தங்களை வழியனுப்புவதற்கு வந்து, உடனிருந்து, வாழ்த்தப் பெரிதும் விரும்புகின்றேனாயினும், நலநிலை இடை நிற்கிறது. பொறுத்தருளி, எனது உளங்கனிந்த வாழ்த்துகளை ஏற்றுக்கொள்ள வேண்டுகின்றேன்.

தங்கள் மேனிநலம் தாழாமல் பேணிக்கொள்ளக் கோருகிறேன். தங்களுக்கு அண்ணனாக விருக்கும் அகவையுடைமை கொண்டு உரிமையோடு இக் கோரிக்கையைச் செய்து கொள்கிறேன்.

தங்கள் அருந்தமிழ்ச் செலவு பெருந்திறலுடன் நடைபெற்றுப் பூரித்த நிறைவுடன் தாங்கள் நாடு திரும்பும் நன்னாளை ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கின்றேன். கண்டு கட்டியணைத்துக் களிதுளும்பும் அவா மீதூர்கின்றது.

சென்னை—30 தங்கள் அன்பு மிக்க
7—9—83 கீ. இராமலிங்கனார்.
(ஆட்சிச் சொற்காவலர்)

0 பெருமதிப்பிற்குரிய அய்யா அவர்கட்கு,
வணக்கம்

தாங்கள் மேல்நாடு செல்லவிருக்கும் செய்தியறிகிறேன். உங்கள் சுற்றுச் செலவு நலமே அமைக!

நம் ஈழத்தமிழ் உடன்பிறப்புகள் தழலிடை வாழும் பொழுதில், தாயகம் கடந்து வாழ்வோரைக் காணப்போகும் உங்கள் சொற்கள் நெஞ்சத்து அவலங்களைப் போக்கி, நம்பிக்கையையும் ஊக்கத்தையும் அளிப்பனவாக அமையட்டும்! நம் இன வளர்ச்சிக்கான நல் வித்துகளைச் செல்இடத்தும் ஊன்றி வருவீர்கள் என்பதை அறிவேன்: என் வாழ்த்துகள்!

கோவை—2 அன்புள்ள
8—9—83 கு.வெ.கி. ஆசான்.

0 பேரன்புள்ள ஐயா,

வணக்கம். நீண்ட நாட்களாக நான் மடல் எழுதவில்லை. மடல் எழுதவில்லையே ஒழிய, மனத்தில் நினைக்காமல் இருந்ததில்லை; இருக்கவும் முடிவதில்லை. தென்மொழிக் குடும்பத்தில் இருந்தவன்; வளர்ந்தவன்; மொழி, நாட்டுணர்வைப் பெற்றவன். எப்படி மறக்க முடியும்? ஒரு பெண், திருமணம் செய்து கொண்டு புக்ககம் போய் விட்டால், பிறந்தகத்தை மறந்தா விடுகிறாள்? மறக்க மாட்டாள்! எங்கே குடியிருந்தாலும் எப்பணி புரிந்தாலும் தன்னை வளர்த்து ஆளாக்கிவிட்ட பெற்றோரை நெஞ்ச வீட்டுள் வைத்து நினைத்து வழிபடுவாள். என்றன் நிலையும் அது போன்றதுதான். நான் எங்குப் பணி புரிந்தாலும் அப் பணிக்கு வழிகாட்டியாகத் தாங்கள் தாம் விளங்குகின்றீர்கள்.

தங்களின் வெளிநாட்டுச் செலவைப் பற்றி அறிந்தேன். தக்க சமையத்தில் செலவை மேற்கொண்டிருக்கிறீர்கள். அதிலும் விடுதலை உணர்வு மிக்க தாங்கள் வெளிநாடுகளுக்குச் சுற்றுச்செலவு செல்வது, தமிழர்களுக்குக் கிடைத்த பெரும்பேறு. ஆம்! பேறுதான்! தங்கள் செலவு, ஈழ விடுதலைக்கு வழி காணவும், பொதுமை தழுவிய தமிழாட்சி மலர்ந்திடவும் உதவும்! தங்கள் செலவு தொடர வாழ்த்தி வணங்குகிறேன். வெளிநாட்டுச் செலவு விடுதலைக்கு வழி வகுக்கட்டும்! தமிழர்களுக்கு நல்வழி காட்டட்டும்!

ஈரோடை அன்புத்தம்பி,
8—9—83 பாவை. நடவரசன்.

ஆசிரியர் குறிப்பு:

விரிவஞ்சி அனைத்து மடல்களையும் வெளியிட முடியவில்லை. என்னை வாழ்த்தி வழியனுப்பிய அன்பூறிய நன்னெஞ்சங்கள், அனைத்துக்கும் என் தலைதாழ்ந்த நன்றி கலந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பெருஞ்சித்திரன்

(அடுத்த இதழில் 'வரவேற்பும் வாழ்த்தும்)

உ.த.மு.க.வின் உயர்ந்தகொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பேரருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை - இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைதோறும் வெளிவரும். பதிவு எண்: TN/MS/C /657

அனுப்புதல்:
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5

பெறுநர்.
திரு.

நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.